# நல்லை நகர் நாவலன்



கு. சோமசுந்தரன்

உ

# நல்லைநகர் நாவலன்

கு. சோமசுந்தரன்

உரிமை
''ரஜி'' வெளியீடு
நல்லூர்
யாழ்ப்பாணம்

முதற் பதிப்பு, ஐப்பசி, 1977

NALLAINAGAR NAVALAN

*First Edition: October, 1977*

**K. SOMASUNDARAM**
11/1, Nayanmar Road.
Nallur,
Jaffna.

*Publishers:*
**"Raji" Publications**
Nallur
Jaffna.

*Printers:*
**Chettiar Press**
432, K. K. S. Road,
Jaffna.

*Price:* **Rs. 4.50**

# முகவுரை

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது,
நாம் கடவுளை வணங்கி
முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்".

இது நாவலர் வாக்கியம். சைவத்தின் சாரம்.

அறிவின் ஊற்று பரம்பொருள். இந்தப் பரம்பொருள் தான் என்றும் உண்மையானது. உண்மையிலிருந்து பிறந்த அறிவைக் கொண்டுதான் அந்த உண்மையை அறியவும், அடையவும் முடிகின்றது.

நாவலரின் நூல்களைப் பயிலுந்தோறும், பண்புடையாளர் தொடர்பு போன்று, அப்பெருமகனர் மீது அளவிலா அன்பும், கரையிலாப் பக்தியும் எனக்கு ஏற்பட்டன.

நாவலரின் கூற்றுக்கள் தெளிவானவை, ஐயந்திரிபு அற்றவை. நல்லைக் கந்தனின் ஆலயமணி ஒசைபோன்று கேட்போரின் காதுகளில் என்றும் நின்று ஒலிப்பவை.

நாவலர் பிறந்து, வாழ்ந்து, பணியாற்றிய காலம் பத்தொன்பதாம் நூற்றுண்டு. அந்நியர்கள் ஆதிக்கம், பிற சமயிகளின் செல்வாக்கு நம்மவர்கள் நச்சரிப்பு — இவை அரசோச்சிய காலம். எமது மொழி, மதம், கல்விமுறை, பண்பாடு, பாரம்பரியம் என்பன நைந்து, நலிந்து, நலமிழந்து வாடிய காலம். இந்நிலைகண்டு நாவலர் கொதித்தெழுந்தார்; எரிமலையோவெனக் குமுறினர். மற்றையோர் போல் அத்துடனே அவிந்தாரில்லை. நிமிர்ந்தார்... நிலையான செயல்தனிலே குதித்தார்.

நாவலரின் தனிமுயற்சியினுல் ஆரம்பிக்கப்பட்ட சைவ மத, தமிழ்மொழி, கல்வி கலாசார மறுமலர்ச்சி இயக்

கத்திற்கு, அவரே தனியொருவராக நின்று எல்லா எதிர்ப்புக்களையும் சகித்துப்பணியாற்ற வேண்டிய நிலையில் இருந்தார்.

தமிழ், ஆங்கிலம், சம்ஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் நாவலர் மிக்க பாண்டித்தியம் பெற்றிருந்தார். இவரின் குடும்பமோ அக்கால அரசின் செல்வாக்கைப் பெற்றிருந்தது. இவரின் மதிநுட்பம், நூலறிவு கண்டு மிக உயர்ந்த அரசபதவிகளை வழங்கித் தம்பக்கம் வைத்துக் கொள்ள அரசும் விரும்பியது. பதவிகள் பெற்றுப், பெருத்த சீர்தனங்களுடன் இல்லறம் புகுந்து, பேரும் புகழும், கொண்டு வாழ்ந்திருக்கலாம். ஆனால் எல்லாவித சுக போகங்களையும் பரித்தியாகஞ் செய்தாரே, எதற்கு? சைவத்தையும், தமிழையும், பண்பாட்டையும் மங்கவிடாது வளர்க்கவேண்டுமென்ற பேராசையாலேயே, என்று நாவலரே கூறுகிறார்.

''தன் இம்மைப் பயன்களை யெல்லாம் இழந்தும், கைம்மாறு வேண்டாதும், இருபது வருடகாலம் சுவ சமய விருத்தியின் பொருட்டு முயற்சி செய்பவன் ஒருவன் மற்றச் சமயத்தார்களுள் இருப்பானாயின், அவன் எடுத்த முயற்சிகள் யாது சித்தி பெறாது?'' என்று நாவலரே உளம் நொந்து தம் மக்களை விழித்துக் கேட்கிறார். இது சிந்திக்கற்பாலது.

''தலைக்கு மேலே கைகாட்டுந் தமிழருக்காகக் கதறிக் கதறி மண்டைவெடித்துத் தாங்கள் சாவீர்கள்'' என்று நாவலருக்குப் பார்சிவல் பாதிரியார் சாபம் போலச் சொன்னதாக ஒரு கதை உண்டு. உண்மையில், அயல் நாட்டவராயினும் நம்மவரைப்பற்றிப் பாதிரியார் சரியாக மதிப்பிட்டு வைத்திருந்தார். ஒற்றுமையின்மை எம்மவர் மத்தியில் காணப்படும் பெரும் சாபக்கேடு.

எனவே ஆளும் அரசின் வெறுப்பு, பிறசமயக் குழுவினரின் எதிர்ப்பு, நம்மவரின் இடையூறுகள் ஆகியவற்றின்

மத்தியில், இத்தகைய சூறுவளிகளுக்கு அசைந்து கொடாத வைரித்த கற்பாறைபோல், தனித்து ஒருவராக நின்று தமிழையும் சைவத்தையும் பாதுகாத்து வளர்த்தார் நாவலர்.

நெஞ்சில் உரம், நேர்மைத்திறன், அஞ்சாமை, மதிநுட்பம், நூலறிவு, ஒழுக்கம், இறையருள் ஆகியவையே நாவலருக்குத் துணை நின்றவை.

நாவலருக்கு நிதி பொருளன்று; நீதியே பொருள் வாய்ந்தது.

நாவலர் சைவத்துக்கும், தமிழுக்கும் மறுமலர்ச்சி காணத்துடித்த வேளையில், நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக விடுதலைக்கும் வித்திட்டார். ஈழத்தில் மட்டுமன்றித் தென்னிந்தியாவிலும் அவர் பணி ஓங்கியது.

இத்தகைய பெருமகனின் வாழ்க்கை வரலாற்றினை, அவர்தம் தத்துவங்களை நம்மக்கள், குறிப்பாக, இளைஞர்கள் அறிந்திருக்வேண்டியது இன்றியமையாதது. அவர் பிற்போக்கு வாதியல்ல. பின்னேக்கிப் பார்த்தார். பழமையிலே புதுமை கண்டார். அவரின் கல்வித்தத்துவங்களை ஊன்றிக் கவனித்தால், அவரின் கருத்துக்கள் இன்றைய புதுமைக் கருத்துக்களுடன் எவ்வளவு தூரம் ஒட்டிச் செல்கின்றன என்பதை அறியலாம்.

நாவலரின் வாழ்க்கை, அவர்தம் பணிகள் பற்றி இச் சிறு நாடகநூல் மூலம் முழுமையாகக் காட்டமுடியாது. ஆனல் அவற்றைப்பற்றி மேலும் அறிய, ஆராய, உண்மை நிலையை உணர, இந்நூல் தூண்டுதலாக அமையுமானல், என்நோக்கம் நிறைவேறியதாகப் பூரிப்படைவேன். இறையருள் கூட்டினுல் மேலும் பல விடயங்களை அடுத்த பதிப்புக்களில் சேர்த்துக் கொள்ளலாம் என எண்ணியுள்ளேன்.

நாவலர் வரலாற்றினை உண்மை நிலையில் உணர்த்தி வருபவரும்; சைவ, தமிழ் மரபுகளைப் பேணிக்காக்கும் நடமாடும் பல்கலைக் கழகமாக மிளிருபவருமான முதுபெரும் அறிஞர் திலகம், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கி வாழ்த்தியிருப்பது எனக்குக்கிடைத்த பெரும் பேறெனக்கருதுகிறேன். எனது நன்றிக்கும் மேலான வணக்கத்தைப் பண்டிதரையா அவர்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

இந்நூல் வெளிவருவதற்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்த அன்பர்கள் பலர். அனைவருக்கும் என்நன்றி. குறிப்பாக, நாடகத்துறையில் பழுத்த அனுபவம் பெற்றவரும், இந்நாடகத்தை மேடையேற்றி அன்பு கொண்டவருமான திரு. ச. சதாசிவம் அவர்கள் எனக்களித்த உற்சாகத்திற்கு என்நன்றி.

நான் சோர்வுற்றாலும் தான்சோர்வுறாது, இந்நூலை மிக்கசிறப்பாக, அச்சேற்றி வெளியிடுவதற்குப் பெருந்துணையாக விளங்கியவர், எனது உழுவலன்பர், செட்டியார் அச்சக பங்காளர் திரு. இ. சங்கர் அவர்கள். அவருக்கு நான் என்றென்றும் கடப்பாடுடையவன். அழகுற அச்சிட்ட செட்டியார் அச்சகத்தினருக்கும் என் நன்றி. அட்டைப்படத்தை அழகுபெற வரைந்து நல்கிய திரு. வி. கனகலிங்கம் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

நாவலரைப் போற்றும் நல்லோர் எல்லோருக்கும் இறையருள் கிட்டுவதாக.

நல்லூர்.
1-10-77

**கு. சோமசுந்தரன்**

# அணிந்துரை

## பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

எல்லாச் சமயமும் சமம் என்பது வேறு; எல்லாச் சமயமும் இருப்பது நீதி என்பது வேறு. நாவலர் நீதியை உபாசித்தவர்; நீதிக்குத் தம்மை அர்ப்பணித்தவர்.

நீதி, தெய்வம் சாந்நித்தியம் ஆகும் இடம். 'மேன்மை கொள் சைவநீதி' என்பது கந்தபுராணம். 'பங்கயத் தயனும் மாலறியா நீதியே' என்பது திருவாசகம்.

தாய் நாட்டிலும் சேய்நாட்டிலும், பண்டிதர்கள் பாதிரிமாரைத் தொடர்ந்து வயிறுேம்பலைத் தலைமேற்கொள்ள, இந்த யாழ்ப்பாணத்தில் மாத்திரம் பிரபல்யமான பாதிரியார் ஒருவர் தம்மிடம் ஆங்கிலங் கற்கவந்த மாணவரைத் தமக்குத் தமிழ்ப்பண்டிதராக்கிப் பின் அவரைத் தமக்கு ஞானகுருவெனக் கண்டு, பாதிரி உத்தியோகத்தையே பரித்தியாகம் செய்தவர். பண்டிதர் தாம் நாவலர்; பாதிரியார் பேர்சிவல். நாவலர் நீதி பேர்சிவலை ஓர் அபரசாக்கியராக்கி விட்டது.

நாவலர் உத்தமசமயி. சமயிகள் தம் வாழ்க்கையை மாசுபடியாமற் காலந்தோறுங் கண்ணுங் கருத்துமாயிருந்து பாதுகாத்துக் கொண்டிருப்பார்கள். தம் சரித்திரத்தை அவர்கள் சொல்லிக் கொண்டிருப்பதில்லை. அவர்களை அணுகித் துணிந்து கேட்பாருமில்லை. இந்நிலையில் உண்மையான நீதிச்சரித்திரம் உதிப்பது அரிது. நாவலர் மறைந்து நூருவது ஆண்டு அணுகுகின்றது. அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பல உண்மைகள் புலனாகின்றன. ஆயினும் நாவலரின் உண்மையான சரித்திரம் இன்னும் பூர்த்தியாகவில்லை.

டாக்டர் சாமிநாதையரும், சுத்தானந்த பாரதியாரும் நாவலர் சரித்திரத்தில் உயிர்ப்பான பகுதிகளில் பழிபாவத்

துக் கஞ்சாது கபடநாடகங்கள் பண்ணிவிட்டார்கள். வேறுசிலர் மனம் போனவாறு செய்தவம்புகள் பல.

நாவலரின் உண்மைச் சரித்திரத்தைக் கண்டு நாவலரைத் திரைப்படத்திற் காட்டுவதோ அவர் சரிதையை நாடகஞ் செய்வதோ எளிதான காரியமாயில்லை.

ஃ ஃ ஃ

சமய சாதகரான மகான் ஒருவரின் சேர்க்கையால், நாவலர் வெறும் வித்துவ வரிசையைச் சேர்ந்தவரல்லர்; தாயுமானவர் வரிசையைச் சேர்ந்தவர்; முனித்துவ நிலை கைகூடும் நெறியில் உள்ளவர் என அறியக்கூடியதாயிருந்தது. அதன்பின் நாவலர் பெருமானைப் பற்றிச் சொல்லுவதில் எழுதுவதில் மிக்கபயம் உண்டாகிவிட்டது. நாவலர் வழியில் மிகமிக நெருக்கமான தொடர்பு இருந்த காலத்தில் மேற்குறிப்பிட்ட பயம் இருந்ததில்லை.

ஃ ஃ ஃ

இனி இந்நாடகத்துக்கு வருவோம். இதன் ஆசிரியர் நாவலர்பால் மிக்க ஆராமை உள்ளவர். நாவலர் பெருமையை அறியத் தூண்டுவதே நாடக நோக்கம்.

அக்காலத்துச் சூழலின் போலி நிலைகளையும் நாவலர் பெருமானின் அசைக்கமுடியாத ஸ்திரநிலையையும் காட்டும் பொருட்டுச் சில பாத்திரங்களைக் கற்பனை செய்தும் நாடக நடைக்கேற்றவகையில் அமைத்திருப்பது ஊன்றிச் சிந்தித்தறியற்பாலது.

ஃ ஃ ஃ

சுதேசிகளில், மதத்துக்காக மதம் மாறியவர் இவர் என்று ஒரு விரல்தானும் மடிக்கமுடியாதென்று பிரபலஸ்தரான கிறீஸ்தநாமம் பூண்ட அறிஞர் ஒருவர் கூறியதுண்டு.

''நல்லவழி காட்டுவோம், உடுபுடைவை, சம்பளம் நாளுநாளும் தருகுவோம், நாம் சொல்லுவதைக் கேளும் என மருட்டிச் சேர்த்து நானமுஞ் செய்துவிட்டார்'' என்கின்றார், முத்துக்குமார கவிராயர்.

'உண்டிருந்து வாழ்வதற்கே உரைக்கின்றீர் உரையீரே' என்கின்றது பாரதம்.

இங்கே காட்டிய உண்மைகளைப் பீற்றர் பிள்ளை என்ற கற்பனைப் பாத்திரத்தில் நன்கு காண வைத்திருக்கின்றார் ஆசிரியர். பீற்றர் போல்வாரை உபய சமயப் பிரஷ்டர்கள் என்பது நாவலர் வாய்பாடு.

பிரபு, குருநாதபிள்ளை என்ற கற்பனைப் பாத்திரங்களில், பிரபு என்ற பாத்திரம் வெகு விசித்திரமானது; வெகு வெகு உண்மையுமானது.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைச் சாத்திர விதிக்கிணங்க அமைப்பதற்குக் கோயிலதிகாரியும், நாவலரும் செய்த திட்டங்களைச் சிதறச் செய்தவர்கள் கந்தமடப்பிரபு ஒருவரும் அவர் சகாக்களும் என்பதை நாவலர் விடுத்த கண்டனங்களிற் காணலாம். இப்பொழுது வெளிவந்த 'நாவலரும் கோயிலும்' என்ற சிறு புத்தகத்தில் ஒரு அத்தியாயம் நல்லூர்க் கந்தசுவாமி கோயில், இது தனித்தும் வெளிவந்திருக்கிறது. நாவலர் கருத்துக்களின் திரட்டு இது. இது அத்தியாவசியம் படிக்கற்பாலது.

கனகாம்பரம், அம்பலவாணி என்ற பாத்திரங்கள் நாவலரின் தெய்வீக சக்தியைக் காட்டுவன. அம்பலவாணி உண்மைப் பாத்திரம். நாவலர் அறியாமலே நாவலருக்கு மெய்காப்பாளனாகவும் இருந்தவன். அம்பலவாணி பிராமணன். மதுமாமிச பக்ஷணி.

மற்றைப் பாத்திரங்கள் சரித்திரத்தை உள்ளவாறு காட்டும் உண்மைப் பாத்திரங்கள்.

ஃ ஃ ஃ

சேர் ஜேம்ஸ் லோங்டன் அக்காலக் கவர்ணர். அவருக்கு வரவேற்பு நடத்திக் குறைகளை எடுத்துக்காட்ட நாவலர் ஆயத்தமாயிருந்தார். இதை அறிந்த துவைனம் அவ்வரவேற்பில் கலவாதவாறு சூழ்ச்சி செய்துவிட்டார். இச்சூழ்ச்சியைச் சட்ட சபையில் சேர் முத்துக்குமாரசாமி எடுத்துக் காட்டி ஏழைகளின் நிலையை விளக்கினார். குடியேற்ற

நாட்டு மந்திரிக்கும் துவைனத்தின் தப்புக்கள் அறிவிக்கப்பட்டன. துவைனத்தின் நிலை மோசமாய்விட்டது. தம்மைச் சுத்திகரிக்கும் பொருட்டு நாவலர் மீது துவைனம் வழக்குத் தொடுக்க வேண்டியவரானுர். வழக்குத் தொடுத்தால் தாம் சிறைக்குச் போகத்தக்க வகையில் ஊழல்கள் மேலும் வெளிவருமென்று கலங்கினர். இந்த நிலையில் நாவலர் பிரிவு அவரைக் காத்தது. கண்விழிக்கச் செய்தது. துவைனம் நாவலரின் உண்மையை உணர்ந்து பின்பு கண்ணீர் வடித்துக் கொண்டே நடந்துகொண்ட நன்றிக் கடன்கள் பல.

இந்த உண்மைகளின் விரிவு இங்கே சுருக்கப்பட்டு விட்டது. மற்றொரு பதிப்பில் விரிந்து பல காட்சிகளாகலாமென்று எதிர்பார்ப்போமாக.

பாண்டித்துரைத் தேவரின் தந்தை பொன்னுச்சாமித் தேவர். அவர் தமது சமஸ்தானத்தில் நாவலருக்குச் செய்த வரவேற்பு உச்சமானது. எவருக்கும் நடக்காதது. அது நாடகத்துக்கு அணிசெய்யும் நல்லதொரு காட்சியாய் அமையும். அதனையும் மேற்குறிப்பிட்டவாறு எதிர் பார்ப்போமாக.

ஃ ஃ ஃ

நாடக பாத்திரங்களின் சம்பாஷணைகள் அவ்வப்பாத்திரத்தின் தகுதிக்கேற்ப அமையவேண்டும் என்பது நாடகம் எழுதுவோர், நடிப்போர் அறியவேண்டியவைகள். எழுதும் போது புலப்படாதவை, நடிக்க ஆயத்தம் செய்யும்போது நன்கு புலப்படும். இந்நாடகம் இயன்ற அளவு இவ்விஷயத்தில் கவனம் செய்திருக்கின்றது. நாடகத்தின் உயிர் நாடியான சரித்திரத்துக்கு மாறுபாடில்லாத வகையில் நடப்பது இதன் தனிச்சிறப்பு.

நாடகம் எழுதிய ஆசிரியர் திரு. கு. சோமசுந்தரன் அவர்களைப் பெரிதும் பாராட்டுவோமாக.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

சி. கணபதிப்பிள்ளை

1-10-77

உ

சிவமயம்

# நல்லைநகர் நாவலன்

## பாத்திரங்கள்

ஆறுமுகநாவலர்
ஆராய்ச்சியார் தம்பு
பார்சிவல் பாதிரியார்
பீற்றர் பிள்ளை
சதாசிவம்பிள்ளை
தில்லைநாதபிள்ளை
வைத்திலிங்கம்பிள்ளை
சேர் ஜேம்ஸ் லோங்டன்
துவைனன்
மஹாசந்நிதானம் அம்பலவாண தேசிகர்
மேலரகம் சுப்பிரமண்ய தேசிகர்
ஆதீனப் புலவர்
ஜோன் வால்டன் பாதிரியார்
பொன்னம்பலம்பிள்ளை
கைலாயபிள்ளை
புலவர்கள்
பிரபு
நடனமாது கனகாம்பரம்
அம்பலவாணி
ஐயங்கன்
குருநாத பிள்ளை
சேவகர் - பொதுமக்கள் முதலியோர்

அன்புமிகு வணக்கம்,

நற்செய்கை, நற்குணங்கள் நன்மைதரு சிந்தனை கள், நால்வேதம் சொலும் நீதி, நற்பண்பு — இவை போன்ற நல்லவைகள் கொலுவிருக்கும் நல்லூர் எனும் நகரம் திருவுடனும், செருவுடனும் தென்னு தமிழ் மணத் துடனும், பொங்கிவரும் பெருநிலவின் பொலிவேபோல, அன்றெருகால் விளங்கியது.

பல நூற்றுண்டுகள் பாங்குடன் பறந்தன. பறங்கியர் வந்தனர். இதமுடன் வாழ்ந்த மக்களின் வாழ்வில் இறங்கியேவிட்டனர். ஐயாயிரம் மைலுக்கப்பாலிருந்து வந்த அந்நியர்கள், எமைப்பார்த்துப் பரிகசித்தார்; எம் பண் பாட்டைப் பழித்துரைத்தார். இதற்கிடையில் நம்மவர்கள் ஒரு சிலர்கள் அந்நியரின் கும்பலிலே சேர்ந்துவிட்டார். ஏற்றமிகு நம் மொழியும், நம் மதமும், நம் பண்பாடும் நலிந்தொழிந்து போவதுதான் விதியோ! ஐயோ! என்று ஏங்கிநின்ற வேளையிலே,

தோன்றினர். ஆம், ஞானத்தின் இருவுருவாய், மோனத் தவமிருந்த மூந்தைத்தமிழர்களின் மானத்தை மீட்க, செந்தமிழை செகம் போற்றும்படி செய்ய, சைவம் காக்க, தோன்றினர், நல்லைநகரில் நாவலர் பெருமான்.

கார்காத்து ஏர்பிடித்து ஊர்காத்துச் சீர் பெற்ற பெருங்குடியில், கந்தப்பிள்ளை, சிவகாமி என்பாருக்குத் தோன்றினர். இயல்பாக இவர்க்கிருந்த அறிவுடனே கற்றும் தேர்ந்தார். யாழ்ப்பாணத் தமிழர் நிலை, அவர்கள் தம் சமயநிலை, அந்நியர்கள் ஆதிக்கம், அடிவருடும் போலி நிலை இவற்றைக் கண்டார், கொதித்தெழுந்தார். இது கண்டு அந்நியரும் அடிவருடும் அடிமைகளும் அசந்தார் கள். நாவலரைத் தம்பக்கம் ஈர்ப்பதற்கு நாளெல்லாம் பட்டபாடு ... ... ... அப்பப்பா, அவற்றை இங்குகாண்பீர்.

காட்சி :

ஒன்று

**இடம் :** நாவலரின் தமையனர் ஆராய்ச்சியார் தம்புவின் இல்லம்.

**பாத்திரங்கள் :** ஆராய்ச்சியார் தம்பு, பீற்றர்பிள்ளை ஆறுமுகம்.

(தம்பு ஏதோ எழுதிக்கொண்டிருக்கிருர். பீற்றர் பிள்ளை வருகிருர்.)

**பீற்றர்பிள்ளை :** குட் மோர்ணிங் மிஸ்டர் தம்பு

**தம்பு :** (திடுக்கிட்டபடி) குட் மோர்ணிங் சேர்......ஓ!..... நீங்களா? (பதற்றத்துடன்) ஒரு வார்த்தை சொல்லி அனுப்பியிருந்தால் நானே உங்கள் வீட்டிற்கு வந்து சந்தித்திருப்பேனே......ம்......அமருங்கள்.

பீற்றர் : (சிரித்துக் கொண்டு) அதனுலென்ன? நான் உங்கள் வீட்டிற்கு வரக்கூடாதா ?...... பரவாயில்லே; ரேக் யுவர் சீட்.

தம்பு : (திகைப்புடன்) ஆம்......ஆம். (உட்காருகிருர்)

பீற்றர் : எங்கே உம்முடைய பிறதர் மிஸ்டர் ஆறுமுகம்? அவரோடு சில விஷயங்கள் பேசவேண்டும்.

தம்பு : அதையேன் கேட்கிறீர்கள். விடியைந்து நாழிகைக்குமுன் நித்திரைவிட்டெழுந்து, காலேக்கடன் களேயெல்லாம் முடித்துக்கொண்டு பூஜை அறைக்குட் சென்று நிஷ்டையில் அமர்ந்தவன்தான் இன்னுமே வெளிவரக்காணேம்.

பீற்றர்: (நேரத்தைப் பார்க்கிருர்) மை கோட்! இப்பொழுது எட்டரை மணியாகிவிட்டதே. இன்னுமா நிஷ்டை கலேயவில்லே. இந்த இளம் வயதிலே இதையெல்லாம் அனுமதிப்பது பெருந்தவறு மிஸ்டர் தம்பு.

தம்பு : என்ன சேர் நான் செய்வது. ஆறுமுகத்தின் போக்கே ஒரு தனிப்போக்கு. ஏதாவது அதற்கு மாருகச் சொன்னுல் எங்கள்மேல் கோபிக்கிருன். கடைக்குட்டியாகப் பிறந்தபடியினுலோ என்னவோ கொஞ்சம் முன்கோபமுள்ளவன். அதிலும் தன் சமயத்தையோ சமய அனுஷ்டான விதிகளேயோ இகழ்ந்தவனுக்குக் கலியுக கௌசிகனுகவே காட்சியளிப்பான்.

பீற்றர் : என்ன! விசித்திரமான மனிதராக இருக்கிருரே.

தம்பு : பாருங்களேன், ஆறுமுகத்துக்குப் பெரியபுராணமென்ருல் உயிர். பெரியண்ணன் தியாகராசனுர் இவருடைய பக்தியைச் சோதிக்க எண்ணினுர். ''பெரியபுராணத்திலுள்ள கதைகளெல்லாம் கட்டுக்கதைகள்'' என்று இவரிடம் சொல்லும்படி ஒருவரிடம் சொல்லிவிட்டார். கேட்டதுதான்

தாமதம். ஆறுமுகத்தின் உள்ளம் கொதித்தது; கண்கள் கனல் கக்கின. கரத்திலே கத்தியை ஏந்திக்கொண்டு கடுகினுர் தமையனை நோக்கி. அப்பப்பா! அந்தக் காட்சியை நினைத்தால் இப்பவும் மயிர்க்கூச்செறிகிறது.

பீற்றர்: ஒருதாய்வயிற்றிற் பிறந்தவர் என்ற இரத்த உறவையும் மறந்து தமையனையே கொலைசெய்யத் துணிந்துவிட்டாரா? அவ்வளவு மூர்க்கத்தனமுடையவரா ஆறுமுகம்.

தம்பு: இல்லை. அதுமூர்க்கத்தனமல்ல. தன் சமயத்தில் வைத்துள்ள ஆரா அன்பும் அளவுகடந்த பக்தியுந்தான் அவனை அந்நிலைக்குள் ஆக்கியது. அன்று முதல் மூத்தண்ணையுடன் முகங்கொடுத்தே பேச மாட்டேனென்கிருன்.

பீற்றர்: மிஸ்டர் தம்பு, இவையெல்லாம் ஒருவனுக்கு இளமையிலே ஏற்படக்கூடிய கோளாறுகள்தான். காலாகாலத்திலே ஆறுமுகத்துக்குக் காற்கட்டுக் கட்டிக் குடும்ப சக்கரத்தில் சிக்க வைத்திருந்தால் அடங்கிப் போயிருப்பார்.

தம்பு: நாங்களும் அப்படித்தான் எண்ணினேம். பலதடவைகள் அவரை விவாகம் செய்துகொள்ளும்படி வற்புறுத்தியும் பலன் எதுவும் கிட்டவில்லை. கடைசியாக ஆறுமுகத்தின் ஆழ்ந்த வணக்கத்துக்கும் மதிப்பிற்கும் உரியவரும், எங்கள் குலகுருவுமாகிய விளாவேலி வேதக்குட்டிக் குருக்களைக் கொண்டு சொல்லுவித்துப் பார்த்தோம். ஆனல் "இந்த ஒரு பேச்சுமாத்திரம் என்னிடம் பேச வேண்டாம்" என்று குருக்களுக்குப் பணிவாகக் கூறிவிட்டான். உள்ளம் விரும்பாத செயலைச் செய்து உலகத்தில் அல்லற்பட்டுக் கண்ணீர் வடிப்போர் பலர் என்பதைக் குருக்கள் அறிந்திருந்தமையினுல் ஆறுமுகம் வாழ்நாள் முழுவதும் நைட்டிகப் பிர

மச்சாரியாகவே இருக்கட்டும் என்று சொல்லி விட்டுப் போனார்.

பீற்றர்: (சிரித்துக் கொண்டே) நல்ல ஆட்களையா நீங்கள் வாலிப வயதில் காளைகள் பேசும் வரட்டு வேதாந் தங்களைப்பற்றி உமக்குத் தெரியாதா?

தம்பு: ஆறுமுகம் அந்தவர்க்கத்தைச் சேர்ந்தவனல்ல.

பீற்றர்: இப்படிச் சொன்ன எத்தனையோ பேரை எனக்குத் தெரியும். எல்லாம் கேட்குமாப்போல கேட்டு, அணுகிறாற் போல அணுகினால் சரியாய் நடக்கும்... உம். அடடா...; நான் வந்த காரியத்தை உம் மிடம் சொல்லவில்லையே.

தம்பு: சொல்லுங்கள்.

பீற்றர்: வந்து... ஆறுமுகத்தில் எனக்கு மிகவும் பிடிப்பு எனக்குமட்டுமல்ல, என் குடும்பத்தாருக்கே அளவில்லாத பற்று. அதிலும் என்னுடைய மனு ஷிக்காரிக்கு ஆறுமுகமென்றால் உயிர். அதாலே...

தம்பு: ம்... தயங்காதீர்கள் கூறுங்கள்.

பீற்றர்: ஆறுமுகத்தை எம் மருமகனுக்கிக் கொள்ளலா மென்று முடிவுசெய்திருக்கிறோம். இதுபற்றி உங் கள் அபிப்பிராயமென்ன?

தம்பு: (யோசித்துக் கொண்டு) பெரியஇடத்துச் சம்மந்தந் தான். ஆனால்...

பீற்றர்: என்ன ஆனால்... ஆறுமுகம் சம்மதிக்கவேண்டும் என்று எண்ணுகிறீர்களா? அவரை வளத்துக்குக் கொண்டுவருவது என்பொறுப்பு. கவலையைவிடும்.

தம்பு: (தயங்கியபடி) அதற்கல்ல... நீங்கள்... கிறீஸ்தவர் கள்...

பீற்றர்: (சிரிக்கிறார்) என்னைக் கிறீஸ்தவனென்று நினைக் கிறீர்கள். பாவம்! வெள்ளைக்கார ஏஜண்டுத்துரை யும் இந்தப் பாதிரிமார்களும் என்னைப் பார்த்து

ஏமாறுகிறார்களென்று, நீங்களும் ஏமாறுகிறீர் களே... உத்தியோகம் பார்க்கிறதுக்கு நான் போட்ட வேஷமய்யா.

தம்பு: அப்படியா,

பீற்றர்: தம்பு, உங்களிலும் பார்க்க சைவசமய அனுஷ்டானங்களிலே எங்க குடும்பம் உயர்த்தி. என் மகளிருக்கிறாளே வருஷத்திலே வருகிற விரதங்கள் ஒன்றையுமே விடாமல் பிடித்து வருகிறாள். கனக்க என்னத்துக்கு, என்ர மனுஷிக்காரி, வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலில் ஆறுமுகம் செய்கிற சைவப்பிரசங்கங்களை வெள்ளிக்கு வெள்ளிபோய்க் கேட்டுக்கொண்டுதானே வாரா. நான்கூட வீட்டில் விபூதி அணிந்து சைவந்தான். கச்சேரியிலமட்டுந்தான் வெறும் நெற்றி. எங்கே இப்ப சொல்லுங்கோ நாங்கள் கிறீஸ்தவர்கள்தானே என்று.

தம்பு: ம்... யாழ்ப்பாணத்தில் அநேகம் பேரின் நிலை இப்படித்தான்... அதோ, ஆறுமுகமும் பூசையை முடித்துக்கொண்டு வருமாப்போல இருக்கு. நான் உங்களை அறிமுகப்படுத்திவைக்கிறேன்.
(ஆறுமுகம் வருகிறார், தம்பு கூப்பிடுகிறார்) ஆறுமுகம்

ஆறுமுகம்: அண்ணை!

தம்பு: (பீற்றரைக் காட்டி) இவரைத்தெரியுமா?

ஆறு: இல்லை அண்ணை.

தம்பு: இவர்தான் திருவாளர் பீற்றர்பிள்ளை. நான் வேலை பார்க்கிற கச்சேரியில பெரிய மேலதிகாரியாக உத்தியோகம் பார்க்கிறார்... ஏஜண்டுத்துரைக்கு அடுத்தாப்போல நாட்டை ஆளுகிற பொறுப்பு இவர் கையிலதான் இருக்கு.

ஆறு: (அலட்சியமாக) ஓ... அவரா... கேள்விப்பட்டிருக்கிறன்.

பீற்: குட்மோர்ணிங் மிஸ்டர் ஆறுமுகம்.

ஆறு: வணக்கம்.

பீற் : தமிழிலும் ஆங்கிலத்திலும் உங்களுக்கிருக்கிற புலமை, இயற்கை விவேகம், மதிநுட்பம், சொல் வன்மை, அஞ்சாமை, அதேநேரத்தில் எளிமை, இரக்கம், தயாளம் ஆகிய பண்புகளையெல்லாம் பார்சிவல் துரைமகனூர் மூலம் எங்கள் ஏஜெண்டுத்துரை கேள்விப்பட்டிருக்கிறூர். நீங்கள் பைபிளை தமிழில் மொழிபெயர்த்து உதவியதுபற்றி ஏஜெண்டுத்துரைக்கு மகா சந்தோஷம்.

ஆறு : நன்றி.

பீற் : செய்ந்நன்றியறிதலை உயிரினும் மேலாக ஓம்பும் இங்கிலாந்துச் சீமையிலே பிறந்து வளர்ந்த படியினூல், நீங்கள் செய்த நன்றிகளுக்குக் கைம்மாருக த் தானும் ஏதாவது பரிசளித்துக் கௌரவிக்க வேண்டுமென்று கருதுகிறூர், ஏஜண்டுத்துரை. கச்சேரியிலேயே ஓர் உயர்பதவியை உங்களுக்குக் கொடுப்பதாகத் தீர்மானித்தேவிட்டார். உங்களை நேரில் காண ஆசைப்படுகிறூர். அழைத்துக் கொண்டு வரும்படி என்னைப் பணித்திருக்கிறூர்.

ஆறு : அறம் விலைகூறி விற்கப்படுவதை வெறுத்து 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற உன்னத கொள்கையை உயிரினும் மேலாக ஓம்பும் உயர் தமிழ்க்குடியிலே பிறந்து வளர்ந்தபடியினூல் ஆறுமுகம் கைம்மாருக எதையும் பெறத்தயாராக வில்லை என்று உமது துரைமகனூரிடம் போய்ச் சொல்லும்.

தம்பு : (பதற்றத்துடன்) தம்பி... யோசித்துப் பேசு.

ஆறு : அண்ணு! வெள்ளைக்காரத் துரைமாரினதும், அவர்களுடைய கொள்ளைக்காரக் கொண்டோடிகளினதும் அந்தரங்கச் சூழ்ச்சிகளையெல்லாம் அலசி யோசித்த பின்புதான் பேசுகிறேன்.

பீற் : இதிலென்ன சூழ்ச்சியிருக்கு.

ஆறு: ம். இதிலென்ன சூழ்ச்சியிருக்கென்று கேட்கிறீர். சொல்லுகிறேன். என்னுடைய மதாபிமானத்தை மடக்க, தமிழபிமானத்தைத் தகர்க்க, தேசாபிமானத்தைக் குழிதோண்டிப் புதைக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள்; ஆங்கிலேயர். கிளர்ச்சி செய்துகொண்டிருக்கும் என்னையும் ஒருவாறாக மடக்கி உங்கள் கும்பலில் சேர்த்துவிட்டால் பின்பு தங்கள் மனம்போன போக்கிலே கிறீஸ்தவ மதத்தையும் பரப்பலாம், ஆங்கில ஆட்சியையும் அரியணையில் ஏற்றிவிடலாம் என்று ஏஜண்டுத்துரை எண்ணுகிறார். இல்லையா, திருவாளர் பீற்றர்பிள்ளை.

தம்பு: (பதற்றத்துடன்) தம்பி, சற்று நிதானித்துப் பேசு. (பீற்றரைப் பார்த்து) தயவுசெய்து தப்பாய் எடுக்காதீர்கள். தம்பியின் சுபாவம் அது.

பீற்: சேச்... சே... தம்பியைப்பற்றி எனக்குத் தெரியாதா. சற்று முன்கோபி பின்னிரங்கி... தம்பி ஆறுமுகம், துரையின் வேண்டுகோளை நிராகரிக்காதீர்கள். அவர்தரும் பதவியைக் கைம்மாறாக ஏற்க விருப்பமில்லாவிட்டால்... அதை...

ஆறு: அதை...... கைலஞ்சமாக ஏற்கச் சொல்லுகிறீரா?

பீற்றர்: தம்பி, விதண்டாவாதங்கள் வேண்டாம். நாம் நல்ல முறையில் வாழ்க்கையை நடத்த வேண்டும். இலட்சியங்கள் வாழ்க்கைக்கு ஒத்துவராது. இலட்சியம் இலட்சியமென்று திரிந்தவர்கள் யார் வாழ்க்கையில் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

ஆறு: அதற்காக, அந்நியன் முன்னால் கைகட்டி, வாய் புதைத்து, தலைவணங்கி நிற்கச் சொல்லுகிறீரா? எல்லாம் வல்ல சர்வேஸ்வரன் முன்னிலையிலல்லாது வேறு எவர் முன்னிலையிலும் இந்த ஆறுமுகத்தின் சிரம் வணங்காது. வணங்கவும் மாட்டாது.

பீற்றர்: ஐயோ பாவம். உங்கள் நிலையைக்கண்டு நான் பரிதாப்பப்படுகிறேன்.

ஆறு: ஐயோ பாவம். பீற்றர்! உம் நிலையைக்கண்டு நான் வெட்கப்படுகிறேன். நல்லது எது, கெட்டது எது என்று வித்தியாசம் தெரியாமல் திண்டாடுகிறீர் நீர். நாமெல்லாம் இந்த நாட்டில் பிறந்தவர்கள்; இந்த மண்ணில் வளர்ந்தவர்கள். எதற்காக எங்கிருந்தோ வந்த அநநியன் முன் அடிபணிந்து வாழ வேண்டும். எமக்கென்றொரு மொழியுண்டு; எமக்கென்றொரு மதமுண்டு; அரசியல் தத்துவங்கள் உண்டு. இவற்றையெல்லாம் வேறு நாட்டிலிருந்து இறக்குமதி செய்யவேண்டிய அவசியமில்லையே. நாலாயிரம் மைல்களுக்கப்பாலிருந்து வந்த அந்நியன் எம்மையெல்லாம் அடிமைப்படுத்தி ஆள்கின்றானே, எப்படி? நம்மவர்களிடம் ஒற்றுமையில்லாத படியினால்தானே. நாமெல்லாம் காட்டுமிராண்டிகளாம்; அஞ்ஞானிகளாம். இந்த வசைச் சொற்களையெல்லாம் கேட்டும் கேளாதவர்கள் போல, கேவலம், பணத்துக்கும் பட்டத்துக்கும் ஆசைப்பட்டு அந்நியனின் அடிவருடிகளாக இருக்கிறீர்களே. வெட்கமாயில்லை! விரல்விட்டு எண்ணக்கூடிய வெள்ளையர்கள் நம் நாட்டை மைபோட்டுக் கைப்பிடிந்தார்களே அதற்கு உதவி செய்தவர்கள் யார்? நலங்கு பாடி அவர்களின் ஆட்சியைத் துலங்கவைத்தது யார்? குமாஸ்தாக்களாகவும், கொண்டோடிகளாகவும், உடையார்களாகவும், ஊமைத் துரைகளாகவும் பட்டங்களும் பதவிகளும் பெற்று அந்நியனை நம்நாட்டில் நிலையூன்றச் செய்தது யார்? எல்லாமே இந்தத் தமிழர்கள் தாமே. இந்நிலை நீடிக்குமானால் சைவத்துக்கும் தமிழுக்கும் என்ன ஆபத்து நேருமோ. சர்வேஸ்வரா! அக்கிரமங்கள் நேரும் போதெல்லாம் அவதாரமெடுத்தாயே, இப்பொழுதும் வந்து எம்மைச் காத்தருள் புரியமாட்டாயா?

பீற்றர்: காட்டுமிராண்டிகளென்றும் அஞ்ஞானிகளென்றும், வெள்ளைக்காரன்கள் உங்களைச் சொல்வதில் நியாய

மிருக்கத்தான் செய்கிறது அக்கிரமம். அவதாரம். மூடநம்பிக்கைகளும் யாரோ முட்டாள்கள் எழுதி வைத்த பொய்யும் புனைந்துரையும் புழுகும் நிறைந்த புராணங்களையே நம்பியிருக்கும் சைவ சமயம் எப்படி மெய்ச்சமயமாகும்.

ஆறு: ( கண்கள் சிவக்க கோபத்துடனும், ஆத்திரத்துட னும் உடல் பதைக்கக் கைகளை நீட்டியபடியே பீற் றரை நெருங்குகிருர், ஆறுமுகம் ) பீற்றர்... என்ன சொன்னுய்.

தம்பு: ( பயந்து ) தம்பி...... என்ன காரியம் செய்யத் துணிந்துவிட்டாய்.

ஆறு: ( நீட்டிய கையை மடக்கிக்கொண்டு ) பீற்றர், இன் றைக்கு உனக்கு நல்லகாலம். வீட்டுக்கு வந்த விருந் தினர் என்ற முறையில் நீ உயிருடன் திரும்புகின் ருய். நான் மதிக்கும் சைவத்தின் மேன்மையை இகழ்ந்தவனை, நான் வணங்கும் கடவுள் வந்து தடுத்தாலும் பழிவாங்காமல் விடேன். துரோகி... நில்லாதே போ... போ...

தம்பு: தம்பி......

பீற்றர்: ( மிகுந்த கோபத்துடன் ) ஆறுமுகம்! ஆராய்ச்சி! என்னையா எதிர்க்கத் துணிந்திருக்கிறீர்கள். உங் களை நான் ஒரு கை பாத்திடுறன்.
( பீற்றர் போகிருர் )

தம்பு: தம்பி, மனுஷன் கடுங்கோபத்தோடை போகிருரே.

ஆறு: அண்ணு. என்னை மன்னித்துவிடுங்கள்...... வலிய வந்த உத்தியோகத்தை உதறித்தள்ளிவிட்டே னென்று வருத்தப்படுகிறீர்களா?

தம்பு: இல்லை. அதனல் வருத்தப்படவில்லைத் தம்பி. பெரிய இடத்துப் பகையைச் சம்பாதித்து விட்டோமே என்றுதான் கவலையாக இருக்கிறது.

ஆறு: பயப்படார்தீர்கள் அண்ணு. பயம் முன்னேற்றத்தின் பரம விரோதி. நாம் தர்மத்திற்காக நிற்கிறேம். யாரும், எவரும், எதையும் எமக்குச் செய்துவிட முடியாது. ஆண்டவன் துணை நிற்கும்போது அஞ்சவேண்டியதேன்.

தம்பு: ஆளும் வர்க்கத்தோடு அண்டியிருப்பவர் பீற்றர். பூவில்லாமலே மாலை கோர்க்கும் கலையை அறிந்தவர். இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி......

ஆறு: அண்ணு, தர்மத்துக்காகவும் நீதிக்காகவும் பாண்டவர்கள் ஐந்தே ஐந்து பேர்தான் போராடினுர்கள். ஆனுல் அநீதியின் பக்கத்தில் கௌரவர்கள் நூற்றிஒருவர் நின்றனர். இறுதியில் வென்றது யார்? ''நாமார்க்கும் குடியல்லோம்'' என்று நவின்ற நாவுக்கரசரின் மனத்திட்பத்தை அறியாதார் யார்?

தம்பு: எதற்கும் சமாதானம் சொல்லக்கூடிய ஆள் நீ. உன்னேடு வாதாடக் கூடியவர் யார்?

காட்சி:

---

## இரண்டு

இடம்: பார்சிவல் இருப்பிடம்

பாத்திரங்கள்: பார்சிவல் பாதிரியார், பீற்றர்பிள்ளை, ஆறுமுகம்

( பீற்றர் வருகிறார் )

பீற்றர்: குட்மோர்ணிங்... பார்சிவல் துரையவர்களே.

பார்: குட்மோர்ணிங். ஓ...... பீற்றர்பிள்ளையா. வாருங்கள்...... வந்த விசேஷமென்ன?

பீற்றர்: தங்களைத் தரிசித்துவிட்டுப் போகலாமென்று வந்தேன். ம்... சென்னையிலுள்ள பைபிள் சங்கம் தங்கள் பைபிள் மொழிபெயர்ப்பை ஏற்றுக்கொண்டு விட்டதாக அறிந்தேன். என் மகிழ்ச்சியையும்

பாராட்டுதல்களையும் தங்களுக்குத் தெரிவிப்பதற்காகவே முக்கியமாக இப்பொழுது வந்துள்ளேன். இனிமேல் தங்கள் கிறிஸ்தவ சமயப் பணி யாழ்ப்பாணத்தில் மேலோங்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

பார்: மிக்க நன்றி. அவ்வளவு பாராட்டுதல்களும், நன்றிக் கூற்றுக்களும் உண்மையில் எனக்குரியவை அல்ல. எனது மதிப்பிற்குரிய குரு — தமிழறிஞர் — ஆறுமுகம் அவர்களுக்கே சேரவேண்டியவை. பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்தவர் ஆறுமுகனார்தான். அன்னாரின் நுண்ணறிவுக்கும், புலமைக்கும், இருமொழித் திறனுக்கும் கிடைத்த இணையற்ற பரிசே பைபிள் மொழிபெயர்ப்பில் இட்டிய வெற்றி. அவர் எனக்கு ஆசானாகக் கிடைத்ததை யிட்டு அளவிலா மகிழ்ச்சியடைகின்றேன்.

பீற்றர்: ( பெருமூச்சுவிட்டபடியே ) அப்படி நீங்கள் போற்றுகிறீர்கள். ஆனால்......

பார்: தயக்கம் வேண்டாம். எதையும் ஒழியாமல் சொல்லும்.

பீற்றர்: நான் சொல்லுகிறேனென்று தப்பாக எண்ண வேண்டாம். அவர் கிறிஸ்த மத விரோதி. பாதிரி மார்களின் பணியைப் பார்த்துப் பழித்துப் பரிகாசம் செய்கிறார். நீங்கள் இப்படிப் போற்றிப் புகழ்ந்து ஏற்றிவைத்துப் பேசுவதாலேதான் எங்களையெல்லாம் கண்டித்துப் பேசுகிறார். அவரின் நட்பு உங்களுக்கு அவ்வளவு நல்லதல்ல, என்று தான் எண்ணுகிறேன்.

பார்: பீற்றர்பிள்ளை! வாயில் வந்தபடி உளறுவதையும். புலவர் ஆறுமுகனார் எனது மதிப்பிற்குரிய குரு; எழுத்தறிவித்த இறைவன்; ஒழுக்கத்திற் பழுத்தவர்; ஒப்பற்ற பேரறிஞர். இவரைப்போன்ற

நேர்மையான ஒருவரைக் காண்பதரிது. எப்படி யாவது இவரை நம்மிடம் வைத்திருக்கவேண்டும்.

பீற்றர்: ( ஆவேசத்துடன் ) ஐயா பாதிரியாரே! இந்த ஆறு முகம் உங்கள் காரியத்தைக் கெடுக்கிறுன். அவனே இப்படி விட்டுவைத்தால் யாழ்ப்பாணத்தில் கிறிஸ்த மதமே அழிந்துவிடும். ஏன், ஆங்கில ஆட்சியே ஆட்டம் கண்டுவிடும், என்று சொன் ஞற்கூட ஆச்சரியப்படுவதற்கில்லே.

பார்: ஆடு நனேகிறதேயென்று ஓநாய் அழுததாம். ம்... உடலிலே சிலுவை, ஆனல் உள்ளத்திலே சிவம். சேர்ச்சிலே கண்ணே மூடிக் கர்த்தரைத் தொழு வீர். ஆனல் வீட்டில் நோய் வந்தவுடன் யாரு மறியாமல் கந்தசுவாமி கோவிலில் அபிஷேகம் செய்வீர். பெண்டு பிள்ளேகளேப் புராணங் கேட்க அனுப்பிவிட்டு நீங்கள் சேர்ச்சிலே செபஞ்செய் கிறீர்கள். வீட்டிலே விபூதி, கச்சேரியில் வெறும் நெற்றி. ம்...... பதவிக்காகவும், பணத்திற்காகவும் பட்டத்திற்காகவும் மதம்மாறிய போலிக் கிறீஸ் தவர்களேப்பற்றி எனக்குத் தெரியாதா. ஒரு சைவ ராக இருந்தபோதிலும் நேர்மையும், நீர்மையும், வாய்மையும், தூய்மையும் உள்ள ஆறுமுகனுரை நான் பெரிதும் மதிக்கிறேன்; துதிக்கிறேன்; மண் டியிடவுந் தயாராக இருக்கிறேன்.

பீற்றர்: மன்னிக்கவும். ஏதோ அறிந்ததைச் சொன்னேன். இனி உங்கள் சித்தம். நான் வருகிறேன்.

( பீற்றர் போகிறுர் )

பார்: ( பெருமூச்செறிந்தபடி ) ம்...... இந்த ஆறுமுகனுர் மட்டும் கிறிஸ்தவராகி என்பக்கம் இருப்பாரே யானல் யாழ்ப்பாணமென்ன அகில உலகத்தி லுமே கிறிஸ்து மதத்தை நிலேநாட்டிவிடுவேன்.

( ஆறுமுகம் வருகிறுர் )

ஆறு: வணக்கம் துரைமகனுர் அவர்களே.

பார்: வாருங்கள். அமருங்கள்...... உங்களிடம் வருவதற்காகத்தான் புறப்பட்டுக்கொண்டிருக்கிறேன். நீங்களே வந்துவிட்டீர்கள். மெத்த மகிழ்ச்சி.

ஆறு: அப்படி என்ன விசேஷம்.

பார்: பைபிள் மொழிபெயர்ப்பைப்பற்றிய தீர்ப்பு வெளி வந்துவிட்டது. அதை உங்களிடம் தெரிவித்து விட்டு வரலாமென்றுதான் கிளம்பினேன்.

ஆறு: தீர்ப்பு எப்படி? எல்லாம் பழமாகத்தான் இருக்கும்.

பார்: யாழ்ப்பாணத்தாருக்கு நல்ல தமிழ் தெரியாது. அவர்களின் பைபிள் மொழிபெயர்ப்பில் பிழைகள் உண்டு. எங்கள் மொழிபெயர்ப்பே சிறந்தது. அப்படி என்று சென்னை பட்டினத்திலுள்ள கிறிஸ்தவ சங்கத்தார் வார்த்தை தொடுத்து வாதாடினார்கள் அல்லவா!

ஆறு: ஆமாம். எல்லாம் பொறாமையினால் எழுந்த பெருங் கூச்சல்தானே.

பார்: எவ்வளவு காலத்துக்குத்தான் பொய்யும் போலியும் நிலைத்து நிற்கும். பழுத்த தமிழறிஞரான வித்துவான் மழவை மஹாலிங்கையரை மத்தியஸ்தராக நியமித்து இரண்டு மொழிபெயர்ப்புக்களிலும் சிறந்ததைத் தெரிவுசெய்து தருமாறு சபையார் கேட்டுக்கொண்டனர்.

ஆறு: ஆஹா... சென்னையில் கல்விச் சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த தலைமகனார் அல்லவா மழவை மஹாலிங்கையர். பழுத்த தமிழறிஞர். நல்ல தீர்ப்பைத்தான் வழங்கியிருப்பார்.

பார்: ஆம். நல்ல தீர்ப்புத்தான் கூறியிருக்கிறார். எமது மொழிபெயர்ப்பைத்தான் சிறந்தது என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். எமது முயற்சியில் நாம் பூரண வெற்றி பெற்றுள்ளோம்.

ஆறு: காய்தல் உவத்தலகற்றி நடுநிலைநின்று ஒன்றினைப் பற்றி ஆய்வது சான்றோர் செயலல்லவா!

பார்: அதுமட்டுமா. ''யாழ்ப்பாணத்தில் இவ்வளவு சிறந்த தமிழ் உளதா?'' எனக்கூறி வியப்புற்ருராம் வித்துவான் மஹாலிங்கையர்.

ஆறு: யாழ்ப்பாணத் தமிழ் மட்டமென்று பட்டங்கட்டிய சென்னை மொழிபெயர்ப்பாளருக்கு இது ஓர் எச்சரிக்கையாக இருக்கட்டும்.

பார்: யாழ்ப்பாணத் தமிழ் தூய்மையானது. பிற மொழிக்கலப்பற்றது.

ஆறு: தென்னுட்டில் பிறந்த தமிழ்; தென்னவன் அரவணைப்பில் வளர்ந்த தமிழ்; சங்கச் சான்ருேரின் அலங்கரிப்பால் உயர்ந்த தமிழ்; உலகத்தையே ஆண்ட தமிழ்; அண்மைக் காலத்தில் செறுநர்களின் சிறுமைக்குள்ளானுள். வேற்றுமொழிக் கலப்பினுல் வெந்துயரடைந்தாள். ஆனுல், தொன்மைமிகு யாழ்ப்பாணத்தில் ஒதுங்கிய தமிழ் அழகு மிளிர்ந்து, செழிப்புடனும், களிப்புடனும் தன்னியல்பு குன்ருத மிடுக்குடனும் வளரலானுள். இத்தகைய தூய்மையான பண்பட்ட யாழ்ப்பாணத் தமிழ் சென்னைக்கென்ன சீமைக்குத்தான் சென்ருலும் வெற்றிவாகை சூடுவாள்...... வெற்றி எமக்குத்தானென்று நான் அப்பவே சொல்லவில்லையா.

பார்: ஆமாம். தங்கள் தீர்க்கதரிசனம் சரியாகத்தான் அமைந்துவிட்டது. பைபிள் மொழிபெயர்ப்பும் அச்சேறி ஓரிரு வாரங்களில் வெளிவந்துவிடும். ம்...... ( பெருமூச்சு விடுகிருர் )

ஆறு: என்ன ஒரு மாதிரி இருக்கிறீர்கள்.

பார்: நான் எவ்வளவு பெரிய பாக்கியசாலி. தங்களை ஆசானுகப்பெற நான் எவ்வளவு புண்ணியம் செய்திருக்க வேண்டும். நினைக்க நினைக்க ஆனந்தம் பொங்குகின்றது. ஆனுல், அடுத்த கணமே ஏதோ இனந்தெரியாத துயரம் என்னைச் சூழ்ந்து கொள்ளுகிறது. அதை நினைக்கும்பொழுது நான்

எவ்வளவு துர்ப்பாக்கியசாலி என்பதை உணர்கிறேன்.

ஆறு: என்ன, இப்படிப் பேசுகிறீர்கள். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

பார்: ஐயா, நான் கூறுவது உங்களுக்கு விளங்கவில்லையா? நான் படும் வேதனைக்குக் காரணம் தங்களுக்குத் தெரியவில்லையா?

ஆறு: என்ன புதிர் போடுகிறீர்கள்.

பார்: இவ்வளவுஅறிவும், ஆற்றலும், புலமையும், அஞ்சா நெஞ்சமும் கொண்டதாங்கள், ஒரு...

ஆறு: தயங்கவேண்டாம், சொல்லுங்கள்.

பார்: ஒரு சைவனுகச் சாம்பல்பூச்சோடு இருக்கிறீர்களே என்பதுதான் என் வேதனைக்குக் காரணம்.

ஆறு: ம்... புரிந்துவிட்டது. புரிந்துவிட்டது. உமது வேதனைக்குக் காரணம் விளங்கிவிட்டது ...ம். தவறு என்னுடையதுதான். ஆம். தவறு என்னுடையதுதான்.

பார்: என்ன, தவறை உணர்ந்துவிட்டீர்களா? அப்ப தாங்கள் கிறீஸ்தவராகச் சம்மதந்தானே.

ஆறு: நான் பெருந்தவறு செய்துவிட்டேன். கிறீஸ்த சமயத்தைப் பரப்புவதற்கு மறைமுகமாக உதவி செய்துவிட்டேனே, சைவத்தை அழிப்பதற்குக் குழிதோண்டிவிட்டேனே! ஐயஹோ! என்ன காரியம் செய்தேன். இதற்குப் பிராயச்சித்தமே இல்லையா? ஆம். இதற்குப் பரிகாரமாக என் வாழ்வையே சைவத்துக்காக அர்ப்பணிக்கின்றேன். இப்பொழுதே ஆசிரிய வேலையிலிருந்து விலகிவிடுகிறேன்.

பார்: ஐயா, பதருதீர்கள். இப்ப என்ன நடந்துவிட்டது. என்னை மன்னித்துவிடுங்கள். வேலையினின்றும் விலகவேண்டாம். மாருன எப்பேச்சையுமே நான் இனிமேல் பேசமாட்டேன்.

ஆறு: சரி. நான் வருகிறேன்.

காட்சி:

மூன்று

இடம்: ஆறுமுகத்தின் இருப்பிடம்.

பாத்திரங்கள்: ஆறுமுகம், சதாசிவம்பிள்ளை, தில்லைநாத பிள்ளை. (ஆறுமுகம் ஓர் ஏட்டைப் புரட்டிப் பார்த்தபடி அங்குமிங்கும் உலாவிக்கொண்டிருக்கிறார். சதாசிவம்பிள்ளையும், தில்லைநாதபிள்ளையும் வருகிறார்கள்)

சதாசிவம்: ஐயா, மன்னிக்கவும். எங்கள் வருகையால் தங்கள் சிந்தனை சிதைந்துவிட்டது போலும்.

ஆறு: ஆர். சதாசிவம்பிள்ளையா, வாப்பா... ஓ... தில்லைநாதபிள்ளையா, வாரும்.

இருவரும் : வணக்கம்.

ஆறு : வணக்கம்.

சதா : என்னை வரும்படி ஆள்விட்டிருந்தீர்களே.

ஆறு : ஆம். வரவர யாழ்ப்பாணத்தில் மதமாற்ற வேலைகள் மெத்தத் தீவிரமாக நடந்து வருகின்றன. எங்கே, இன்னும் சில நாட்களுக்குள் சைவசமய சரித்திரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விடுமோ என்று அஞ்சவேண்டிய அவலநிலை யாழ்ப்பாணத்துக்கு வந்துவிட்டது. பாதிரிமார்களின் பாயசப்பேச்சுக்கும், அரசாங்கத்தாரிடமிருந்து பெற்றுக்கொடுக்கும் பட்டங்கள், பதவிகள் போன்ற சாகதச் செயல்களுக்கும் கட்டுப்பட்டு ஏமாளிகளாகவும், இழிச்ச வாயன்களாகவும் மாறிவருகிறார்கள், யாழ்ப்பாணத்தவர்கள். தாங்கள் பிறந்த மண்ணை மறக்கின்றார்கள்; தாய்மொழியை மறக்கின்றார்கள். தன்னிகரில்லாத சொந்த மதத்தை மறக்கின்றார்கள். விபூதி தரித்தவனைப் பார்த்துச் சாம்பலாண்டி என்கிறார்கள். உருத்திராக்கம் அணிந்தவனைப் பார்த்துப் பரிகாசம் செய்கிறார்கள். யார்? இந் நாட்டிலே பிறந்து நேற்றுவரை சைவர்களாக இருந்துவிட்டு இன்று பஞ்சாட்சரக் கிறீஸ்தவர்களாகிவிட்ட கறுப்புத் துரைகள்தான். நினைக்கவே நெஞ்சம் கொதிக்கிறது.

சதா : உண்மைதான். பாருங்கள், விரைவில் கிறீஸ்தவராகாவிட்டால் ஆசிரிய வேலையிலிருந்து சீட்டுக் கிழித்துவிடப்போவதாக இந்தத் தில்லைநாத பிள்ளையைப் பயமுறுத்துகிறாராம் பார்சிவல் துரை.

ஆறு : அப்படியா, தில்லைநாதபிள்ளை.

தில்லை: ஆம். நான் கிறீஸ்தவனானால் சம்பள உயர்ச்சியும் பதவி உயர்ச்சியும் தருவதாகச் சொல்லுகிறார், பார்சிவல். அல்லாவிட்டால் என்னை வேலையை விட்டு விலக்கப்போகிறாராம்.

ஆறு: அப்ப, என்ன செய்வதாக உம்முடைய உத்தேசம்.

தில்லை: அதைப்பற்றித்தான் நானும் மண்டையை உடைச்சுக்கொண்டிருக்கிறேன். உத்தியோகம் போய்விட்டாலோ குடும்பத்தைப் பாதுகாக்கமுடியாது. என்ன செய்வது! பேசாமல் கிறீஸ்தவனாகி விட்டால் இந்தக் கரைச்சலை இருக்காது.

ஆறு: (ஆவேசமாக) என்ன, கிறீஸ்தவனாகப் போறீரா? அதைச் சொல்லிவிட்டுப் போகத்தானா இங்கு வந்தீர்.

தில்லை: நானென்ன, உண்மை யுண்மையாய் கிறீஸ்தவனாகப் போறேனா? சும்மா ஒரு வேஷத்தைப் போட்டு ஞானஸ்நானம் பெற்றுவிட்டால் காரியம் தீர்ந்தது. என்றுமே என்னுள்ளம் சிவனையே நாடும்.

ஆறு: தில்லைநாதபிள்ளை, உம்முடைய நிலையைக்கண்டு நான் மிகவும் பரிதாபப்படுகிறேன். மீனுக்கு வாலும், பாம்புக்குத் தலையும் காட்டும் விலாங்கைப்போல் வாழப்பழகிக் கொண்டார்கள் யாழ்ப்பாணத்தவர்கள். மனித தர்மத்தையே மறந்து விட்டார்கள். அறத்தை அடியோடு துறந்துவிட்டார்கள். இந்நிலை நீடிக்குமானால் நாத்திகத்தைத் தான் காணமுடியும்.

சதா: எல்லாமே பிழைப்புக்குத்தான். இந்த ஒருசாண் வயிற்றாலேதான் இவ்வளவு சங்கடங்களும்.

ஆறு: கேவலம், வயிறுவளர்க்க வேறு வழியே இல்லையா? சொந்த மதத்தையும், மனிதாபிமானத்தையும் அடைவு வைத்துத்தானா வயிற்றை வளர்க்கவேண்டும். பண்டைத் தமிழர்கள், பறங்கியரை நம்பித்தானா உயிர் வாழ்ந்தார்கள். 'அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது' அதிலும், 'கூன் குருடு, செவிடு, பேடுநீங்கிப் பிறத்தல் மிக அரிது' அதிலும் சைவத் தமிழ் மகனாகப்பிறத்தல் மிகமிக அரிது. இதற்கெல்லாம் புண்ணியம் செய்திருக்க

வேண்டும். இப்படியாக எல்லாம் நிறைந்தவர்களாகப் பிறந்தும், மற்றவனுக்கு எதற்காகப் பணிந்து வாழவேண்டும்.

தில்லை: அப்படிப்பட்ட சைவர்களைப் பார்த்துத்தானே அஞ்ஞானிகள் என்கிறார்கள்.

ஆறு: ஏ, ஆர் அஞ்ஞானிகள். 'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனாய்; ஆதியுமந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியாய்த் திகழும் சிவபிரான் கண்ட சைவசமயத்தைப் பின்பற்றுபவர்களா அஞ்ஞானிகள். 'கல்தோன்றி மண் தோன்றாக்காலத்து முன்தோன்றிய மூத்த குடிகளின்' சைவசமயமா பொய்ச்சமயம். அப்பரும், சம்பந்தரும், சுந்தரரும், மணிவாசகரும், திருமூலரும் சேக்கிழாரும் போற்றிவளர்த்த சமயமா புறச் சமயம். சரியா கிரியா யோகம் செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர் என்று முழங்கும் முதுபெருஞ்சமயமா முறையற்ற சமயம்! கல்லால மர நீழலின்கீழ் சொல்லால் விளக்காமல் மோனத்தால் ஞானத்தை உபதேசித்த சங்கரனின் சைவசமயமா அஞ்ஞானமுள்ளது. தித்திக்கும் தேவாரத் திருமுறைகள், தெவிட்டாத திருவாசகம், திக்கெல்லாம் போற்றும் திருவிளையாடற் புராணம், பேரறிஞரேத்தும் பெரிய புராணம் ஆகியன சைவசமய தத்துவங்கள் நிறைந்த பெட்டகங்கள். அவற்றைத் திறந்து பார்த்தாலல்லவா, மெய்ஞ்ஞானமெது அஞ்ஞானமெது என்று விளங்கும். வீணர்களினதும், புல்லர்களினதும் வெறும் வார்த்தைகளைக் கேட்டா மதம் மாறத் துணிந்தீர். ஆயிரந்தான் வந்தாலும் சொந்த மதத்தை மாற்றலாமா?

தில்லை: ஐயா, என்னை மன்னித்து விடுங்கள். எனக்குப் புத்திவந்துவிட்டது. உங்கள் சந்திப்பால் இருள்

நீங்கி ஒளிபிறந்துவிட்டது. சைவசமயமே என் சமயம். என்ன இடர் வந்தாலும் இந்நிலைமாருது. என்னை மன்னித்துவிடுங்கள்.

ஆறு : (விபூதி கொடுக்கிருர்) சிவனுண்டு பயமில்லை. அவனின்றி ஓர் அணுவும் அசையாது. தன் பிழையை உணர்ந்தவனுக்கு, நிச்சயம் நீலகண்டனின் மன்னிப்புக்கிடைக்கும்... ஆண்டவா, எப்பொழுது தான் ஏனையோர் தம்பிழைகளை உணரப்போகிருர்களோ.

சதா : காலம் தூரத்திலில்லை. இந்தவேளையில் ஒரு சந்தோஷமான செய்தி சொல்லப்போகிறேன். சென்னைச் சர்வகலாசாலையில் முதன் முதல் B. A. பட்டம் பெற்ற, கரேல் விசுவநாதபிள்ளை உங்களைப் பற்றி எதிர்பேசியும், அவதூறுகள் எழுதியும், சைவத்தை நிந்தித்தும் வந்தாரல்லவா!

ஆறு : ஆம். பாவம். பட்டம் பெற்றும் பகுத்தறிவைப் பறிகொடுத்தவராச்சே விசுவநாதபிள்ளை.

சதா : இப்பொழுது விசுவநாதபிள்ளை பகுத்தறிவைப் பெற்றுவிட்டர். தன்னை உணர்ந்துவிட்டார். தாமாகவே திருந்தியும் விட்டார்.

ஆறு : என்ன திருந்திவிட்டாரா?

சதா : ஆமாம்: விசுவநாதபிள்ளை அவர்கள் சிதம்பரம் சென்று தாம் செய்த பிழைகளுக்கெல்லாம் மன்னிப்புக்கோரி சிவனைத்தூஷித்த நாவை பொன்னூசி காய்ச்சிச் சுட்டுக்கொண்டு தீவிரமான சைவராகிவிட்டார். சிந்தையில் சிவத்தை ஏற்றிவிட்ட அவர் உங்களைக் குருவாக நினைத்துப் போற்றி வருகிருர்.

ஆறு : மெத்த மகிழ்ச்சி. அதிருக்கட்டும். சதாசிவம் பிள்ளை! தில்லைநாதபிள்ளை! நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள். இன்னும் நாம் வாளாவிருக்கக்கூடாது. பெற்றதாயையும், தந்தையை

யும் பிச்சை எடுக்க விட்டுட்டு, நாம் கும்ப கோணம் சென்று கோதானம் செய்தல் தகுமா? என்ன பாடுபட்டும் எவ்வளவு இடர்கள் வந்தாலும் அச்சப்படாமல் அவற்றையெல்லாம் துச்சமெனத் தள்ளிவிட்டு சைவசமயத்தையும் தமிழையும் ஆக்கிரமிப்புக்காரர்களிடமிருந்து காப்பாற்றியாகவேண்டும். ''சிவனுண்டு பயமில்லை'' என்ற தாரக மந்திரத்தை உச்சரித்துக்கொண்டே செயலில் இறங்கவேண்டும்.

**இருவரும்:** நாம் தயார். ''சிவனுண்டு பயமில்லை''

**சதா:** இப்பொழுதே, இக்கணமே செயலில் குதிக்கத் தயார்,

**ஆறு:** நல்லது. சீமையிலிருந்து இங்கு வந்துசேர்ந்த பாதிரிமார்களோ விரல்விட்டு எண்ணக்கூடிய சிறு கும்பல். அவர்கள் ஆயிரக்கணக்கில் நம்மவரை மதம் மாற்றுவதின் மர்மம் உங்களுக்கு விளங்குகின்றதா?

**சதா:** பாதிரிமார்கள் மேல்நாட்டுச் செல்வர்களிடமிருந்து ஏராளமான பணம் பெறுகிறார்கள். தம் செல்வாக்கை உபயோகித்து அரசாங்கத்திடமிருந்து பதவிகளும் பட்டங்களும் பெற்று கிறீஸ்தவர்களானவர்களுக்குக் கொடுக்கிறார்கள். உயர்ந்த சம்பளம் பெறும் கிறீஸ்தவர்கள் சீரும் சிறப்புமாக வாழ்கிறார்கள். இவர்களுடைய செல்வச் சிறப்பையும், செல்வாக்குகளையும் கண்ட ஏனையோரும் கிறிஸ்தவர்கள் ஆகிறார்கள்.

**தில்லை:** அதுமட்டுமா, பாதிரிமார்களின் தொண்டுகளைக் கண்டால் யாரும் ஆச்சரியப்படுவர். செல்லுமிடமெல்லாம் பொதுமக்களோடு கலந்து பழகுகிறார்கள். ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம், தொழிற்சாலை போன்றவைகளை அமைத்து மக்களின் கவனத்தை ஈர்க்கின்றார்கள். அதன்பின் மெதுவாக மதமாற்ற

வேலைகளில் ஈடுபடுகிறார்கள், கூடவே ஆங்கிலக் கல்வி, மேல்நாட்டு நடையுடை பாவனைகள் புகுத்தப்படுகின்றன. இவற்றில் மோகங்கொண்டோர் கிறீஸ்தவராகின்றார்கள்.

ஆறு: எல்லாவற்றிற்கும் மேலாக, பள்ளிகளே பாதிரிமார்களின் மதமாற்ற வேலைக்குப் பெரிதும் உதவுகின்றன. இலவசமாகக் கல்வி போதிக்கும்பொழுதே கிறீஸ்த சமயத்தையும் புகட்டுகிறார்கள். பிஞ்சு உள்ளங்களில் கிறீஸ்தவக் கொள்கைகள் நன்றாகப் பதிகின்றன. சைவசமய ஆசாரங்கள், அனுஷ்டானங்கள் யாவும் முளையிலேயே கிள்ளியெறியப்பட்டு விடுகின்றன. எம்து சமயம், மொழி, நாகரிகம், பண்பாடு, கலை, பாரம்பரியம் யாவற்றிற்குமே சாவு மணி அடிக்கப்படுகின்றது.

சதா: வருத்தப்படவேண்டிய விஷயம்.

ஆறு: வெறும் வாயால் மட்டும் வருத்தம் தெரிவித்தால் போதாது. நாம் செயலில் இறங்கியாக வேண்டும். நாமும் ஏன், இந்தக் கிறிஸ்தவ பாதிரிமார்களைப் போல், வெளிக்கிட்டு எம்து சமயத்தைப் பரப்பலாகாது.

சதா: நியாயம்தான். பாதிரிமார்கள் தங்கள் சமயத்துக்குச் செய்யும் தொண்டுகளைப் பார்த்த பின்னுவது, நாமும் ஏன் எமது சமயத்தைப் பரப்ப முன்வரக் கூடாது.

தில்லை: பரப்பாவிட்டாலும், எதிர்நோக்கியுள்ள ஆபத்திலிருந்து எம்து சமயத்தைப் பாதுகாத்தலே பெருங் காரியம்.

ஆறு: இன்னும் கேளுங்கள், கிறிஸ்தவ நூல்கள் யாவும் எவரும் எளிதில் விளங்கிக்கொள்ளக்கூடிய முறையில் தெளிவான வசனநடையில் உள்ளன. இது

ஞல் கிறீஸ்தவர்களுக்குச் சமயத்தைப் பரப்புவது எளிதாக இருக்கிறது. ஆனல் எமது சமய சாத்திர நூல்கள் எல்லாமே கடினமான செய்யுட்களாக இருக்கின்றன.

சதா: படித்தவர்கள் மட்டுந்தான் விளங்கிக்கொள்வார்கள்.

ஆறு: நினைத்த மாத்திரத்தே கிறிஸ்தவ நூல்களை அச்சிட்டு வெளியிடுவதற்கேற்ற அச்சுப் பொறிகளை நிறைய வைத்திருக்கிருர்கள் பாதிரிமார்கள்,

சதா: இது இன்னெரு வாய்ப்பாகும்.

ஆறு: சைவசமயம் காப்பாற்றப்பட வேண்டும். தமிழ் மொழிக்கேற்பட்ட ஆபத்து தகர்க்கப்படவேண்டும்.

சதா: அதற்கு வழியைக் கூறுங்கள்.

ஆறு: தமிழர் சிவனெறியையும் உலகாயுதத்தையும் கற்பதற்கு ஊர்கள்தோறும் பள்ளிக்கூடங்கள் தாபித்தல் வேண்டும். பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி கொடுக்க வேண்டும். அடுத்து ஓர் அச்சுப் பொறியை அமைத்து நல்ல நூல்களை அச்சிட்டு வழங்குதல் வேண்டும். சைவசமயப் பிரசாரகர்களைத் தயாரித்து அவர்களைப் போதகர்களைப் போல மக்களிடையே அனுப்பி சமயப் பிரசாரஞ் செய்விக்க வேண்டும். எமது நாட்டில் அந்நியப் பாதிரிகள் வந்து தம் சமயத்துக்குச் செய்யும் பணியையாவது பார்த்து, நாமும் சைவத்துக்கும் தமிழுக்கும் இத்தகைய பணியைச்செய்ய உறுதி பூண வேண்டும்.

சதா: பாதிரிகள் மேல்நாட்டுத் தனவந்தர்களிடமிருந்து ஏராளமான பணத்தைப்பெற்று சிலுவைத் தொண்

டைச் செய்துவருகின்றார்கள். நாம் பணத்துக்கு எங்கே போவது.

ஆறு: சிவனுண்டு பயமில்லை. எல்லாம் இறைவன் கொடுப்பான். அரிசியை உலையிற் போடும்போது சைவத்திற்காகவும், தமிழுக்காகவும் ஒரு பிடி அரிசி தாருங்கள் என்று தாய்க்குலத்தைக் கேட்கப் போகின்றேன். என் சமயத்துக்கும் தாய்மொழிக்கும் நாளெல்லாம் உழைக்க உறுதிபூண்டு விட்டேன். இறைவனை நம்பியே பணியில் இறங்குகிறேன். நடப்பது நடக்கட்டும்.

சதா: உங்கள் பணிக்கு என்றும் எங்கள் உதவியிருக்கும்.

ஆறு: சிவனுண்டு பயமில்லை.

**இருவரும்:** சிவனுண்டு பயமில்லை.

காட்சி:

நான்கு

இடம்: பார்சிவல் இருப்பிடம்.

பாத்திரங்கள்: ஆறுமுகம், பார்சிவல்.

[ஆறுமுகம் வருகிறார்]

ஆறு: வணக்கம், துரையவர்களே!

பார்: வணக்கம்... வாருங்கள். அமருங்கள்... உங்களிடம் சில விஷயங்களைக் கேட்க விரும்புகிறேன்... தவறாக எடுத்துக்கொள்ளாதீர்கள். உண்மையை அறியவே விழைகிறேன்.

ஆறு: தாராளமாகக் கேளுங்கள். உண்மையை உரைக்கின்றேன்.

பார் : வண்ணார்பண்ணைச் சிவன்கோவிலில் வெள்ளிக் கிழமை தோறும் சைவமதப் பிரசாரம் செய்கிறீர்களாமே.

ஆறு : ஆம். எமதருமைச் சைவத்தைப்பற்றி நாம் பிறந்த மண்ணில், எம்மனோர் மத்தியில், பேசக்கூடாது என்று யார் தடைவிதித்திருக்கிறார்கள்.

பார் : அப்பொழுதெல்லாம் எம் கிறீஸ்தமதத்தைக் காரசாரமாகக் கண்டிக்கிறீராமே.

ஆறு : தவறு எங்கிருந்தாலும் அது கண்டிக்கவேண்டியது மட்டுமல்ல, தண்டிக்கப்படவும் வேண்டியது.

பார் : கிறீஸ்து சமயம் இந்த நாட்டை ஆளும் மன்னனின் சமயம். அதற்கு மாறாகப்பேசலாமா?

ஆறு : சைவசமயம் இந்தநாட்டில் வதியும் பிரஜைகளின் சமயம். அது அழிந்துபோகவிடலாமா?

பார் : இந்நாட்டுப்பாதிரிமார்களைப் பகைத்தால் உங்களுக்குத்தான் ஆபத்து. அவர்கள் ஆள்வோர்களுடைய செல்வாக்கைப் பெற்றவர்கள்.

ஆறு : ஆபத்தா? எனக்கா? (சிரிக்கிறார்) அப்பரையும், சம்பந்தரையும், மாணிக்கவாசகரையும் பரசமயிகளிடமிருந்து பாதுகாத்த பரமசிவன் என்பக்கமிருக்கும் போது எனக்கு ஆபத்தா? சிவனுண்டு பயமில்லை. பரமதகண்டனம் சிவபுண்ணியம். உயிர்தான் போனாலும் உயர்ந்த சிவபுண்ணியத்தில் போனால் முத்தி பெறுவது நிட்சயம். அச்சமென்பதைப் பச்சைத் தமிழன் என்றோ மறந்துவிட்டான். "நாமார்க்கும் குடியல்லோம்" என்ற அப்பரின் அருள்வாக்கு, நினைவுள்ளவரை, நெஞ்சினிலிருக்கும்.

பார் : போகட்டும். கிறீஸ்து சமயத்தை விரும்பி அதில் சேரவருபவர்களை அச்சுறுத்தி வெருட்டி, பலவந்தமாகத் தடுத்து வருகிறீராமே. தில்லைநாதபிள்ளையையும், சின்னப்பபிள்ளையையும் ஞானஸ்நானம்

பெறவிடாது தடுத்ததும், நீர்தான் என்று பாதிரி மார்கள் முறைப்பாடு செய்திருக்கின்ருர்கள்.

ஆறு: ஆம். எம்மதத்தினரைப் பிறமதத்தில் பிரவேசி யாது தடுத்திருக்கிறேன் ஆனுல், அவர்களை வெருட்டியோ, அச்சுறுத்தியோ, பலவந்தப்படுத் தியோ அல்ல. சைவத்தின் பெருமையை எடுத் தியம்பினேன். பிறமதம் புகுதல் பேதமை என்று விளக்கினேன். உண்மையை உணர்ந்தார்கள். உறுதிப்பொருளைத் தெளிந்தார்கள். மனம் மாறி ஞர்கள். மதம்மாற மறுத்தார்கள். எனது கடமை யைத்தான் செய்தேன். இது குற்றமா?

பார்: எம்மிடம் ஊதிபம்பெற்று உத்தியோகத்திலிருந்து கொண்டு எமக்கு மாருன செய்கைகளில் இறங்க லாமா?

ஆறு: ம்... ஊதிபம். உத்தியோகம். பார்சிவல் துரை யவர்களே! சற்று நிதானித்துப் பேசுங்கள். உத்தி யோகம் ஏற்பதற்கு முன்பு உங்களிடம் நான் சொன்ன நிபந்தனைகளை ஞாபகப்படுத்திப்பாருங் கள். எனது சைவசமய அனுஷ்டானங்களினின் றும் சிறிதும் விலகமாட்டேன். விபூதி, உருத்திரா க்ஷம் தரித்துத்தான் பணிபுரிய வருவேன். சைவ சமயப் பிரசாரங்கள் செய்வேன், என்றெல்லாம் முன்பு உங்களிடம் கூறவில்லையா? சம்மதித்துத் தானே உத்தியோகத்தைத் தந்தீர்கள்.

பார்: காலஞ்செல்லச் செல்ல, உங்களைத்திருத்திவிடலா மென எண்ணினேன்.

ஆறு: கீழைத்தேசத்தவர்கள் அஞ்ஞானிகள். சமயக்கிர மம் தெரியாதவர்கள். அவர்களைத் திருத்துகிறோம் திருத்துகிறோம். என்று சொல்லி, இங்கிலாந்தி லிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் பெரும்பணம் திரட்டும் பாதிரியாரே, உங்களைத்திருத்தக்கூடிய சக்தி எங்களிடமிருக்குதென்பதை மறந்துவிடாதீர்

கள். ஒருசிலரை உங்கள் தூண்டிலால் பிடித்திருக் கலாம். ஆனால் எல்லோருமே அகப்பட்டுவிடுவார்க ளென்று எண்ணினீர்களானால் அதைத் திருத்திக் கொள்ளுங்கள்.

பார் : உங்களைப்பற்றிப் போதகர்கள் கூறிய முறைப்பாடு கள் உண்மையானவையா என்று அறிவதற்காகவே உங்களைக் கேட்டேன். மனத்தைப் புண்படுத்தின மைக்கு மன்னிப்புக் கோருகிறேன்.

ஆறு : இல்லை. நீங்கள் கேட்டதும் நல்லதுதான். பண மும் உத்தியோகமும் எனக்குப் பெரிதல்ல. எனது சமயமே பெரிது. எனது தாய்மொழியே பெரிது. இப்பொழுதே உத்தியோகத்தைவிட்டு நீங்கு கிறேன்.

பார் : ஐயா, அப்படிச் செய்யக்கூடாது.

ஆறு : நான் வேலையினின்றும் விலகுவதால் இருவருக்குமே நல்லது. நீங்கள் கிறீஸ்தவர். நான் சைவன். இருவ ரினது போக்குகளும் நோக்கங்களும் வேறு. ஒன் றின் அழிவில்தான் மற்றதன் ஆக்கம் இருக்கிறது. இருதுருவங்கள் எப்படி இணையமுடியும்? ஒரு சைவனை ஆசிரியனாக அமர்த்திக்கொண்டு, அதே நேரத்தில் உங்கள்மேல் சுமத்தப்பட்டுள்ள கிறீஸ்து சமயத்தை வளர்க்கும் மாபெரும் பொறுப்பைச் சரிவர நிறைவேற்ற முடியாமல், பாதிரிமார்களிட மிருந்தும், போதகர்களிடமிருந்தும், புகார்களையும், நிந்தனைகளையும், பெற்றுக்கொண்டு மெல்லவோ விழுங்கவோ, முடியாமல், அல்லற்படும் உங்கள் நிலையை நான் நன்கு உணர்ந்துதான், இந்த முடி புக்கு வந்திருக்கிறேன். மேலும், கிறீஸ்தவர்க ளிடம் வேலைபார்த்துக்கொண்டு, எனது சைவத் துக்குத் தொண்டு செய்வதிலும், பல சங்கடங்க ளுண்டு. தொண்டிற்குச் சுதந்திரம் வேண்டும்.

பார் : உங்களுக்குப் பூரண சுதந்திரமுண்டு. எதிலும்

நான் இனிமேல் தலையிடமாட்டேன். தயவுசெய்து தாங்கள் எனக்கு ஆசிரியராக இருக்கவேண்டும்.

ஆறு : முடியாது. நான் வேலையினின்றும் விலகித்தான் ஆகவேண்டும். ஆறுதலாகச் சிந்தித்துவந்த முடிவை மாற்றமுடியாது, சிவநிந்தையைப் பார்த்தும் கேட்டும், சிவநிந்தனையாளருடன் தொடர்பு கொண்டும் இருத்தல் கொடியபாவம். தமிழ், சைவசமயம் ஆகிய இரண்டும் என்னிருகண்கள். இவ்விரண்டையும் ஒளிகுன்றுமல் இறுதிவரைகாத்துப் பயன்கொள்வதே என்கடன். அவை வாழப் பணிபுரிதலே என் வாழ்வின் குறிக்கோள். உங்களது பழக்கத்தால் கிடைத்த அனுபவமும், பைபிளை மொழிபெயர்த்ததனுலேற்பட்ட ஆராய்ச்சியும், பாதிரிமார்கள் தங்கள் சமயத்துக்குச் செய்யும் தொண்டினைக் கண்டதால் ஏற்பட்ட உணர்ச்சியும், என்னையும் எனது சைவத்திற்குத் தொண்டு செய், எனத் தூண்டி விடுகிறது.

பார் : புலவரீர், நீவிர் தலைக்குமேலே கைகாட்டித் தமிழருக்காகக் சதறிக்கதறி மண்டைவெடித்துத்தான் சாவீர்.. சரி உம் விருப்பப்படியே செய்யலாம்.

ஆறு : நன்றி துரைமகனுரே, மிக்க நன்றி, விடுதலை கிடைத்துவிட்டது. நான் வருகிறேன்.

(ஆறுமுகம் போகிறுர்)

பார் : (தனிமையில்) ஆறுமுகத்தைப் போன்ற ஒருவல்லவரை, நல்லவரை இதுவரை குருவாகப் பெற்றது எனது பாக்கியம். இந்தச் சீலரை என்ன கொடுத்தும் நம்முடன் வைத்திருக்கலாமென்றிருந்தேன். முடியாமல் போய்விட்டது. நாம் கொடுத்து வைக்கவில்லை. சைவமுந் தமிழும் புண்ணியம் செய்துவிட்டன. எனக்கு யாழ்ப்பாணமே சூனியமாகிவிட்டது. இனி சென்னைபட்டணத்துக்குப் போகவேண்டியதுதான்.

காட்சி :

ஐந்து

இடம்: வீதி

பாத்திரங்கள்: சதாசிவம்பிள்ளை, தில்லைநாதபிள்ளை, வைத்தியலிங்கம்பிள்ளை, ஆறுமுகம்

(சதாசிவம்பிள்ளையும் தில்லைநாதபிள்ளையும் பேசிக்கொண்டு வருகிறார்கள். அப்பொழுது வைத்தியலிங்கம்பிள்ளை எதிரே வருகிறார்.)

வைத்: வணக்கம்.

சதா + தில்: வணக்கம்.

வைத்: என்ன, இன்று என்றுமில்லாதபடி மகிழ்ச்சி பொங்கிவழிகின்றது.

சதா: எல்லாம் உள்ளத்திலேற்பட்டுள்ள உலப்பிலா உவகையின் பிரதிபலிப்புத்தான். யாழ்ப்பாணத்தில், ஐயா அவர்களால் ஞானதீபம் ஏற்றிவைக்கப் பட்டுவிட்டது. என்றும் அது ஒளிவளர் விளக்காக நின்று ஞான ஒளி பரப்பப்போகின்றது. கண்களை இழந்தவன் மீண்டும் அவற்றைப் பெற்றுவிட்டால் ஆனந்தத்துக்கு அளவேது.

வைத்: நீங்கள் சொல்வது எனக்கு ஒன்றுமே விளங்க வில்லையே.

தில்லை: வைத்திலிங்கம் இப்பொழுதுதானே கொழும்பி லிருந்து வருகிறார். இங்கு நடைபெற்ற நல்ல காரி யங்களைப்பற்றி அவருக்கு ஒன்றுமே தெரியாது.

சதா: அப்படியா?... சரி. வண்ணார்பண்ணையிலே வித்தியா சாலை ஒன்றை எங்கள் ஐயா ஸ்தாபித்திருக்கிறார். அதற்கு சைவப்பிரகாச வித்தியாசாலை என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. ஆஹா... அன்று நடந்த விழாவைப்போல ஒன்றை யாழ்ப்பாணம் என்றுமே கண்டிருக்க முடியாது. அந்தக் காட்சி யைக் காணாத கண்கள் கண்களல்ல. முகத்திலே யிருக்கும் இரண்டு புண்களேதான்.

வைத்: உண்மைதான். நான் கொடுத்துவைக்கவில்லை. ''செயற்கரிய செய்வர் பெரியர்'' என்ற கூற்றை உண்மைப்படுத்திவிட்டார், ஐயா. சைவமும் தமிழும் இனிமேல் ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றும்.

சதா: ஊர்கள் தோறும் தமிழ்ப்பள்ளிகளை நிறுவி, ஒருவர்கூடத் தமிழ்க் கல்வி பெறவில்லை என்ற இழி நிலையை இல்லாமற் செய்யவேண்டுமென்பதே ஐயா அவர்களின் குறிக்கோள்.

தில்லை: இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் பயக்கும் இரு வகைக் கல்வி நலமும் பெறுதார் உயிரோடு இருந்தும் இறந்தவர்களே; பிறந்தும் பிறவாதவர்களே;

அவர்தம் வாழ்நாளெல்லாம் வீணுளே என்று அடிக்கடி சொல்லுவார், ஐயா அவர்கள்.

வைத்: உண்மைதான். குறிக்கோள் உயர்ந்ததுதான். ஆனால் இதற்கெல்லாம் ஏகப்பட்ட பணம் தேவைப்பட்டிருக்குமே. தன் உத்தியோகத்தையே உதறிவிட்ட உத்தமர் திலகம், பணத்துக்கு என்ன செய்தார்.

சதா: வீடுதோறும் படியேறிப் பிடியரிசி இரந்தார்.

வைத்: என்ன! இரந்தாரா?

சதா: ஆம். எல்லாம்வல்ல எம்பெருமான் உலகத்தை உய்விக்கப் பிச்சாடண முகூர்த்தமெடுக்கவில்லையா? பிறர் துன்பம் போக்கப் பிச்சையெடுத்தல் பிழையல்ல. தன்னலத்துக்காக இரப்பதுதான் தலையாய இழிவு.

வைத்: ஆண்டவா, முடிதொட்ட பாண்டிமழவன் பரம்பரைச் செம்மலா இரக்கின்றது. எடுபிடியாட்களுடனும், இராசோபசாரங்களுடனும் இந்திரபோக வாழ்க்கையை வாழக்கூடிய ஐயாவுக்கா இந்தநிலை. பொன்னும் பொருளும், பெண்ணும் பதவியும் ஐயாவின் கடைக்கண் பார்வைக்காக ஏங்கித் தவங்கிடக்கின்றனவே...... தியாகங்களுக்கு ஓர் அளவேயில்லையா?

தில்லை: உண்மைதான். ஐயா அவர்களின் குடிப்பிறப்பிற்கும், கல்வி, அறிவு, ஒழுக்கத்திற்கும் நினைத்திருந்தால் மிக உயர்ந்த பதவியில் இருந்திருக்கலாம். மிகுந்த பொருளைச் சம்பாதித்திருக்கலாம். பெருந்தனத்துடன் அழகு மிளிர் ஆரணங்கை மணந்து அளவிலா இன்பம் துய்த்திருக்கலாம். ஆனல் எல்லாவற்றையும் துறந்தார். தமிழ்த் துறவியானுர். ஏன்?

சதா: எல்லாம் எம் மக்கள்மேற் கொண்டுள்ள கருணையினுல்தான். நடு இரவில், கடல் நடுவில், புயலிற்

சிக்கித் தத்தளிக்கும் மரக்கலம்போல் அல்லலுறும் எம்மவரை ஈடேற்றும் பொருட்டே திருவுள்ளம் கொண்டார் ஐயா.

தில்லை: இதை உணராத சுருங்கிய உள்ளங்கொண்ட உன் மத்தர் சிலர் தொந்தரவு கொடுக்கிறார்கள் சதா சிவம். உதவிதான் செய்யாவிட்டாற் பரவாயில்லை. உபத்திரவம் கொடுக்காமலிருந்தால் என்ன?

வைத்: நன்முயற்சிகள் நடைபெறும்போது நாலுபேர் பொறாமையால் அதைத் தடுக்கவுந்தான் செய்வார்கள். இது இயற்கைதானே! தாமரையும் குவளையும் நிறைந்த தடாகத்திலே முதலைகளும் சுரிக் கிடங்குகளும் காணவில்லையா? அமிர்தமும் நஞ்சும் ஒரேயிடத்தில்தானே தோன்றியன. இராவணனும் வீடணனும் ஒரே நாட்டில் ஒரே தாய் வயிற்றில் உதித்தவர்கள்தானே! அது சரி ஐயாவின் பணிக்கு முட்டுக்கட்டையாக நிற்பவர்கள் யார்? பரமதத்தவர்கள்தானே!

சதா: அவர்களால் எங்களுக்கு அதிகந் தொந்தரவில்லை. ஆனால், எம்முடைய மதத்திலேயிருந்துகொண்டு சில பிரபுக்களும், போலிச் சைவர்களும், சில கோயில் அதிகாரிகளுந்தான் ஐயாவின் தமிழ்ப் பணிக்கும் சமயப் பணிக்கும் முரண் செய்கின்றனர்.

வைத்: இவர்களுக்கெல்லாம் தகுந்த சொற்சவுக்கடி கொடுத்திருப்பாரே ஐயா.

சதா: பின்ன, அருச்சுனனின் வில்லம்புகளிலிருந்து யாராவது தப்பிப் பிழைத்திருந்தாலும், ஐயாவின் சொல்லம்புகளுக்கு எவருமே தப்பமுடியாது.

தில்லை: குமுறினவர்களும், கொந்தளித்தவர்களும் அணைந்து அவிந்து அடங்கிவிட்டார்கள்.

வைத்: இவர்களுக்கு ஐயாமீது அப்படி என்ன கோபம்.

சதா: சைவக் கோவில்களில் நடைபெறும் ஊழல்களை அம்பலப்படுத்தினர். பொது மகளிர்களைக் கொண்டு திருவிழாக்காலங்களில் நடத்தப்படும் நடனங்களையும், கேளிக்கைகளையும் கண்டித்தார். காமவிச்சையைத் தூண்டக்கூடிய பிரதிமைகளையும் அலங்கோல உருவங்களையும் கோயிலில் வைத்திருத்தலை அப்பட்டமாக எதிர்த்தார். இது கோயிலதிகாரிகளுக்குப் பிடிக்கவில்லை.

தில்லை: வானுயர்தோற்றப் போர்வையுள் மறைந்தொழுகும் பிரபுக்களின் அந்தரங்க லீலைகளையும், தாசிகளிடம் வைத்துள்ள உறவுகளையும் பச்சைப்படியாக அச்சப்படாமல் சாடினர். இது கந்தமடப் பிரபு போன்ற பெரும் புள்ளிகளுக்குப் பிடிக்கவில்லை.

சதா: சரி உங்களுக்கு இன்னெருவிஷயந் தெரியுமோ?

தில்லை: என்ன விஷயம் சொல்லுங்கள்.

சதா: தமிழ்ப்பணியை முட்டின்றிச் செய்வதற்குப் பெரும் பணம் வேண்டுமல்லவா? பணம் சேர்க்கப் பெரிதும் முயற்சித்தார். ஆனல் முயற்சி விழலுக்கிறைத்த நீரானது. மதுவுக்கும், மங்கைக்கும், மாமிசத்திற்கும் பொற்கட்டியாக ஈயும் புழுக்கையர் கூட்டம், ஐயாவின் ஆக்கப்பணிக்கு அரைக்காசுகூட ஈய மறுத்துவிட்டது. மனம் நொந்தார். சுந்தரருக்குப் பொன்னீந்த எம்பெருமானை நோக்கித் தன் குறையைப் பாடலாக்கிக் கண்ணீரில் நனைத்துப் பாமாலை சூட்டினர். அழுகை வீண்போகவில்லை. அன்றே கொழும்பில் வாழும் தமிழ் வள்ளல் நன்னித்தம்பி முதலியார் நாநூறு ரூபாவை வித்தியாசாலைக்கு நன்கொடையாக அனுப்பியிருந்தார்.

தில்லை: ஆஹா... என்ன அற்புதம்! இறைவன் கருணைதான் என்னே! வாழ்க அந்தத் தமிழ் வள்ளல். வளர்க அவரின் தமிழ்த் தொண்டு.

(ஆறுமுகம் வருகிறுர்)

எல்லோரும்: வணக்கம்.

ஆறு: வணக்கம்.

(ஆறுமுகம் ஒன்றும் பேசாது வானத்தையே அண்ணாந்து பார்த்துக் கொண்டு நிற்கிறார். சிறிது நேரம் மௌனம்)

சதா: என்ன, பலத்த யோசனையில் ஆழ்ந்து விட்டீர்கள்.

ஆறு: பண்டைத் தமிழகத்தில், தமிழன்னை பெற்ற சீரையும் சிறப்பையும் எண்ணிப்பார்க்கிறேன். ஒவ்வொரு நாட்டுமொழியும் காலம் செல்லச்செல்லத் தான் எழிலும், பொலிவும் பெறுகின்றன. ஆனால் ஒரு காலத்தில் இலக்கிய வளமும், இலக்கண வளமும் நிரம்பக்கொண்டு உலக முதன் மொழிகளுள் ஒன்றாக விளங்கி, வலிவும் வனப்பும் பெற்றுப் பாராண்ட தமிழ்மொழியோ, காலங்கடக்கக்கடக்க நலிந்து மெலிந்து வருவதைக் கண்டு என்மனம் குமுறுகின்றது. தமிழ்ச் செல்வங்கள் பல நெருப்பாலும், நீராலும், செல்லாலும், செறுநர்களாலும் அழிக்கப்பட்டு மறைந்து போவதைப்பார்க்கத் தானா தமிழனாகப் பிறந்தேன். இனிமேலும், வாளாவிருக்கக்கூடாது. ஏதாவது பரிகாரம் தேட வேண்டும்.

சதா: உண்மைதான். இதற்கென்ன செய்யலாம்.

ஆறு: மறைந்தவைபோக எஞ்சியிருக்கின்ற தமிழ் ஏட்டுச் சுவடிகளையாவது அச்சுவாகனமேற்றி பிரசுரித்து வருங்கால சந்ததியார் பயன்பெறச் செய்யவேண்டும். இதற்கு நாம் ஓர் அச்சுயந்திரம் வாங்க வேண்டும். தமிழ்ச் செல்வங்கள்யாவும் எமது காலத்தில்தான் அழிந்தொழிந்து போயின என்ற பழிச் சொல்லைப் பிற்காலத்தவர் எம்மேற் சுமத்தாதிருப்பதற்கு ஒரேவழி, நூல்களை அச்சிடுதல்தான்.

சதா: கிறீஸ்தவ பாதிரிமார்களுக்குத் தங்கள் சமயத்தையும், ஆங்கிலக் கல்வியையும் அசுர வேகத்தில்

பரப்புவதற்கு அவர்களின் அச்சுயந்திரங்கள்தானே காரணமாக இருக்கின்றன.

ஆறு : அச்சுயந்திரத்தின் உதவியால் ஆச்சரியப்படக் கூடிய பலவேலைகள் செய்யலாம். 'உதயதாரகை' போன்ற கிறீஸ்து மதப் பத்திரிகைகளையும், சைவத்தைத் தூஷிக்கும் நூல்களையும் பத்திரிகைகளையும் அச்சுயந்திரத்தின் துணைகொண்டல்லவா அச்சிட்டு வெளியிடுகிறார்கள். இப்பத்திரிகைகளுக்கும் நூல்களுக்கும் தக்க மறுப்பெழுதி வெளியிட விழைந்தும் அச்சுப்பொறியின்மையால் அது நிறைவேறாமல் போய்விடுகின்றது.

சதா : உண்மைதான். அச்சுயந்திரமொன்று எம் கைவசமிருந்தால் அது எங்களுக்குப் பெருந்துணை புரியுமென்பதில் சந்தேகமில்லை.

ஆறு : ஆமாம். சைவப்பிள்ளைகள் படிப்பதற்கேற்ற பாடப் புத்தகங்களை வெளியிடலாம். தமிழ் நூல்கள் பல கடினமான செய்யுட்களைக் கொண்டவை. பாமரர்களும் புரிந்து கொள்ளும் வண்ணம் நல்ல வசன நடையில் எழுதியோ அல்லது அவற்றிற்கு உரை எழுதியோ வெளியிட்டால் யாவரும் பயனடைவர்.

சதா : குறிக்கோள் மிக உயர்ந்ததும் உன்னதமானதுங் கூட ஆனால்,

ஆறு : பணமில்லையே என்று யோசிக்கிறீரா? சிவனுண்டு பயமில்லை. முயன்றால் முடியாததொன்றுண்டா. ''எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியர் திண்ணியராகப் பெறின்'' அச்சுப்பொறி வாங்குவதற்குச் சென்னைக்குப் புறப்பட நாளும் குறித்துவிட்டேன். சதாசிவம்பிள்ளை, நீரும் என்னுடன் வாரும். தில்லைநாதபிள்ளை, நாம் வரும்வரை சைவப்பிரகாச வித்யாசாலையை நடாத்துவது உம்முடைய பொறுப்பு. மற்றையவர்களிடமும் சொல்லிவைக்கிறேன்.

காட்சி:

ஆறு

இடம் : கனகாம்பரத்தின் வீடு

பாத்திரங்கள் : பிரபு, நடனமாது கனகாம்பரம்

(பிரபு, கனகாம்பரத்தின் வீட்டிற்குள் நுழைகிறார்)

பிரபு : (பரபரப்புடன்) கனு, கனு... கனகா...ம். இந்த அதிகாலையில் எங்கே போயிருப்பாள்... கனு...

கனகா : ஓ... நீங்களா... வாருங்கள்... (வெட்கத்துடன்) என்ன அப்படியே என்னை விழுங்கிவிடுமாப்போல பார்க்கிறீர்கள்.

பிரபு : (பெருமூச்சுடன்) கனு... நான்காண்பது என்ன கனவா, அல்லது நனவா?... இது நனவாக மட்டும் இருந்துவிட்டால் உண்மையில் நான் பாக்கிய

சாலிதான். ...இந்தக் காலைவேளையில் மஞ்சள் பூசி, மங்கலநீராடி, புத்தாடைதரித்துப் பூச்சூடி, புது மணப் பெண்ணாக நிற்கும் உன் பேரழகினை அள்ளிப்பருகுகிறேன், கனா.

**கனகா :** போதும் உங்கள் புனைந்துரை. எங்கே புலவராக மாறிவிட்டீர்களோ என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது.

**பிரபு :** நீ மட்டும் என்னோடு இருந்தால், புலவராக என்ன புரவலராகவும் மாறமுடியும்... கனா, கனா இங்கே பார். கனா...

**கனகா :** பிரபு! நீங்கள் கனா, கனா என்று அடிக்கடி என்னை அழைக்கிறீர்கள். கடைசியில் எங்கள் காதல் உறவு எல்லாமே கனவாகிவிடுமோ, என்றுதான் பயப்படுகிறேன்.

**பிரபு:** பயப்படாதே கனா. உன்னைச் செல்லமாக அப்படி அழைக்கிறேன். கனா... மலருக்கு மலர் தாவும் வண்டினைப் போன்றவனல்ல நான். குடிசையில் இருந்த உன்னை இந்த மாடமாளிகையில் குடியிருத்தினேனே, எதற்காக? உன் அழகிய மேனி புழுதியில் வாடக்கூடாது என்பதற்காகத்தானே. கனகா... இன்னும் என்னில் நம்பிக்கையில்லையா?

**கனகா:** பிரபு! நீங்கள் எனக்காக எவ்வளவோ செய்திருக்கிறீர்கள். அதற்கெல்லாம் நன்றி. ஆனால் உங்கள் இதயத்திலும் எனக்கு நிரந்தர இருப்பிடம் கிடைக்கவேண்டுமே.

**பிரபு:** என்ன! அப்படிச் சொல்லிவிட்டாய். உன் ஏக்கத்திற்குக் காரணமே இல்லை. நான் சொல்லப்போவதைக்கேட்டு அதிர்ச்சி அடைந்துவிடாதே. மனதைத் திடப்படுத்திக்கொள். கனகா... நான் உன்னைத் திருமணம் செய்துகொள்வதாகத் தீர்மானித்தேவிட்டேன், அதை உன்னிடம் சொல்லத்தான் ஓடோடி வந்தேன் கனா.

கனகா: (பெருமூச்சுடன்) ம். அது நடக்கக்கூடிய காரியமா? செல்வமும், செல்வாக்கும் மிக்க பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்த நீங்கள் எங்கே?... விடலைப் பருவ உடலை விற்று வாழ்க்கை நடத்தும் விலை மகளிர் குலத்தைச் சேர்ந்த நான் எங்கே. குடியும் குடித்தனமுமாக வாழ நாங்கள் கொடுத்துவைக்க வில்லையே. ஊர்க்கட்டுப்பாடு, சமூகக்கட்டுப்பாடு போன்றவைதான் உங்களைச் சும்மா விட்டுவிடுமா?

பிரபு: சிப்பியின் வயிற்றில்தான் முத்து. பூனையில் புனுகும், மானில் கஸ்தூரியும் கிடைக்கவில்லையா? பிறப்பிடத்தைக் கொண்டா இவற்றிற்குச் சிறப்பு! ஆண்டவனுக்கே இவற்றைக்கொண்டு அபிடேகம் செய்கிறார்கள். பொது மகளிர் குலத்திற் பிறந்த குற்றத்திற்காக நீயும் பொதுவுடைமையாகிவிட முடியாது. நீ எனதுடைமை, கனகா. ஊர்க்கட்டுப்பாட்டினை ஊமையாக்கிவிட்டு உன்னைத் திருமணம் செய்துகொள்ளப் போகிறேன் கனு... இப்ப சரிதானே... எங்கே சிரி...ம்.

கனகா: (வெட்கத்துடன் தலைகுனிகிறாள்)

பிரபு: திருமணம் என்றதும் வெட்கம் எங்கிருந்தோ இந்தப் பெண்களுக்கு வந்துவிடுகிறது.

கனகா: என்ன எனக்கும்கூட வெட்கம் வந்துவிட்டது என்று ஆச்சரியப்படுகிறீர்களா? வெட்கப்படுவதற்குக்கூட ஒரு பொதுமகளுக்கு இந்தச் சமூகம் தடை விதித்துள்ளது. மடம், அச்சம், நாணம், பயிர்ப்பு எல்லாமே உங்கள் குலமகளிர்களின் சொத்தாம்.

பிரபு: அப்படி யார் சொன்னது?

கனகா: எல்லாமே உங்கள் சமூகம் வைத்த சட்டம்தான்.

பிரபு: அதெல்லாம் கிடக்கட்டும் கனகா. இப்படிப் பேசிக் கொண்டிருந்ததில், உன்னை நான் பாராட்ட மறந்துவிட்டேன்.

கனகா: பாராட்டா? எதற்கு?

பிரபு: கனகா, நேற்றையதினம் கோவில் திருவிழாவில் நீ ஆடிய ஆட்டம்... ஆ... அற்புதம். தேவஅரம் பையர்கள் உன்னிடம் பிச்சை கேட்கவேண்டும். பரதக்கலேயே உன் உருவில் வந்துவிட்டதோ என்று வியந்தேன். உன் சதங்கை ஒலிகள் என் இதயத்தில் 'கலீர் கலீர்' என ஒலித்தன... கனகா... உன்னுடைய நர்த்தனம் அரங்கில் அல்ல... என் இதயத்தில்தான் நிகழ்ந்தது.

கனகா: ம். நீங்கள் எங்கே என்னுடைய ஆட்டத்தைப் பார்த்தீர்கள். வாழைத் தடலேயும், முறுச்கிய சீலே யையும் கைகளில் வைத்துக்கொண்டு 'இரு, இரு' என்று ஆட்களே அதட்டியும், அடக்கியும் உங்கள் நாட்டாண்மையைக் காட்டிக்கொண்டு அங்குமிங் கும் திரிந்தீர்கள்... என் ஆட்டத்தைப் பார்க்க உங்களுக்கு நேரமேது?

பிரபு: இல்லே கனகா... நான்பார்த்தேன், இரசித்தேன், பரவசமானேன், ...ஆனல் அங்கிருந்த ஊராருக் குத் தெரியாமல்.

கனகா: பிரபு... நேற்று ஆடிய ஆட்டம் உண்மையில் உங் களுக்காகவேதான். அப்படியான ஆட்டத்தை நான் என்றுமே ஆடியதில்லே.

பிரபு: ம்... எத்தனே நாட்களுக்குத்தான் இப்படி மறைக்க முடியும். இறைக்க இறைக்க ஊற்றுநீர் பெருகுமாப் போல், மறைக்க மறைக்க என் காதல் நோயும் பொங்குகிறதே.

கனகா: ஆடல் முடிந்ததும் வந்து என்னேப் பாராட்டுவீர் கள் என எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். அது வும் நடக்கவில்லே. எங்கே மாயமாய் மறைந்து விட்டீர்கள்.

பிரபு: அதுவா... யாவும் காரணத்தோடுதான்.

கனகா: பிரபு, ஆட்டம் முடிந்தபிறகு இரண்டு வெள்ளைக் காரத்துரைமார்களைக் கோவில் முதலாளி கூட்டி வந்து எனக்கு அறிமுகம் செய்துவைத்தார். அவர் கள் என்னைப் பார்த்த பார்வை... சீ... இப்ப நினைத்தாலும் அருவருப்பாக இருக்கிறது.

பிரபு: கனு, நீ ஆடும்போது சுற்றியிருந்த இளந்தாரிக ளெல்லாம், ஏன்? கிழவர்கள் கூட, ஆடாது அசை யாது உன்னையே பார்த்துச் சுவைத்துக் கொண் டிருந்தார்கள். அதை என்னல் பொறுக்கமுடிய வில்லை. இதற்குத்தானு திருவிழா?

கனகா: ம்... ஆண்கள் ஆண்கள்தான். பொறுமைக்காரர் கள். பலர் முன்னிலையில் பகிரங்கமாக ஆடும்போது பார்ப்பவர்கள் பார்த்துத்தானே ஆவார்கள்... ஆட்டத்தின்போது அவ்வளவு சனங்கள் இருந்தார் களே. முடிந்தபின் சுவாமி தூக்கக்கூட ஆட்க ளில்லையாமே... இதுதான் உலகம்.

பிரபு: கனகா... இனிமேல் நீ பொது அரங்குகளில் ஆடக் கூடாது. பிறர் சுவைத்த எச்சியாக நீ இருக்கக் கூடாது. அதை என்னல் பொறுக்கவும் முடியாது. நீ எனக்காகத்தான் ஆடவேண்டும்... கனகா, உன் சீறடியைப் பரவ வந்தேன். தீண்டிலனேயாயின் நான் உய்யேன்... வா, கனகா... வா... மேலே போவோம்.

(ஒளி மறைந்து மீண்டும் வருகிறது. கீழே இரு வரும் இறங்கி வருகிருர்கள். இந்த நேரம் மின்னல், இடி, பலதத காற்று ஆகியவற் றுடன் மழைபெய்கிறது.)

கனகா: (மின்னல் முழக்கத்திற்கு அஞ்சி பிரபுவுடன் ஒட் டிக்கொள்கிருள்) அப்பப்பா... ஊழிக்காலம்போல இருக்கிறதே.

பிரபு: (மின்னல் வெளிச்சத்தைத் தாங்கமுடியாதவனுக) பயப்படாதே கனகா... நானிருக்கப் பயமேன்.

இந்த அறங்கோடையிலும் இப்படி மழை கொட்டு கிறதே. ம்... இது கலிகாலம். காலத்திற்கேற்ற கோலம். எல்லாமே காலம் நேரம் தப்பித்தான் நடைபெறுகிறது.

கனகா: சரியாகச் சொன்னீர்கள் பிரபு. இந்த யாழ்ப் பாணத்திலே எல்லாமே காலம் நேரம் தப்பித் தான் நடக்கிறது என்று அந்தப் பிரசங்கியார் சொன்னதை நீங்களும் அப்படியே சொல்கிறீர்கள்.

பிரபு: எந்தப் பிரசங்கியார்?

கனகா: அவர்தான், வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலில் வெள்ளிக்கு வெள்ளி சைவப்பிரசங்கங்கள் செய் கிறாரே ஆறுமுகப்புலவர்... அவரைத்தான் சொல் கிறேன். கடினமான கருத்துக்களை எல்லாம் யாவ ரும் புரிந்துகொள்ளும்படி எடுத்துரைக்கும்பாங்கு... இடையிடையேகூறும் புத்திமதிகள்... ஆ... அற் புதம்... அருமை.

பிரபு: நீயும் அங்கு போகத் தொடங்கிவிட்டாயா? ம்... எவ்வளவு காலமாய்ப் போய்வருகிறாய்?

கனகா: ஏன் நான் போகக்கூடாதா? அம்மாவுடன்தான் போனேன். அங்குபோவது தப்பா, பிரபு?

பிரபு: உனக்கும் அந்த இடத்திற்கும் உள்ள தூரம் அமாவாசைக்கும அந்திரேசுவுக்கும் இடையில் உள் ளது போலத்தான்.

கனகா: அப்படியென்றால்...

பிரபு: வாழ்க்கையில் வெறுப்படைந்தவர்களும், வாழவழி யற்றவர்களும் கூடும் இடம் அது. உன் அம்மா கிழவி. செய்த பழியைக் கழுவப் போகிறாள். போகட்டும். நீ வாழவேண்டியவள். நீ ஏன் போக வேண்டும். கனகா... புத்தம்புதிய பூக்கள் காலை வேளையில் எவ்வளவு அழகாக இருக்கின்றன. அவற்றை ஆசையோடு பறித்து மாலை தொடுக்

கிறோம். பூஜைக்கு வந்த மலர் என்று சொல்லிப் போற்றுகிறோம். வாடிய மலர்களைக் குப்பையென்று விளக்குமாறுகொண்டு கூட்டியே தள்ளிவிடுகிறோம். கனகா... நீ புத்தம்புதியமலர்... நீ அங்கெல்லாம் போவது தப்பு, கனகா.

**கனகா:** பிரபு, பிரசங்கம் கேட்க வருவோரில் பாதிக்கு மேல் பெண்கள்தான் வருகிறார்கள். அவர்கள் கெட்டா போகிறார்கள்?

**பிரபு:** இந்த உலகத்திலுள்ள அத்தனை பேர்களும் எக்கேடு கெட்டால்தான் எனக்கென்ன! ஆனால் நீ கெட்டு விடக்கூடாது. அதுதான் என் ஆசை.

**கனகா:** பிரபு. நான் கேட்கிறேனென்று கோபிக்காதீர்கள். ஆறுமுகப்புலவரின் பிரசங்கத்தினால் நாங்கள் கெடுக்கப்படுகிறோம், என்று சொல்லுகிறீர்களே, அதுதான் எனக்கு விளங்கவில்லை.

**பிரபு:** கனகா, நீ உலகமறியாத சின்னப்பெண். உனக்கு ஒன்றுமே தெரியாது... இந்த ஆறுமுகம் ஒருவகை யான கிறுக்குப் பேர்வழி. அண்ணன்மார்கள் எல்லோரும் அரசறிய வீற்றிருக்கும் வாழ்வும் வளமும் பெற்றவர்கள். ஆனால் ஆறுமுகத்துக்கு எதுவுமே கிட்டவில்லை. உலகத்தாரோடு உடனிருந்து வாழவும் தெரியாதவர். ஊராரின் பகையும், பாராளும் வேந்தனின் பரிகாசமும்தான் ஆறுமுகம் தேடிய சொத்து. வயிற்றுப்பாட்டுக்குமே திண்டாட்டம். பாடசாலைகள் கட்டுவதாகச் சொல்லி வீடுதோறும் படியேறிப் பிடியரிசி தண்டிச் சீவனம் செய்ய வேண்டிய அவலநிலையும் ஏற்பட்டது. இந்த ஏமாற்று வாழ்க்கையைக் கண்ட யார்தான் ஆறுமுகத்துக்குப் பெண் கொடுப்பார்கள். எந்தப் பெண்தான் விரும்புவாள். வாழ்க்கையில் விரக்தியும் வெறுப்பும் ஏற்பட இந்தச் சமூகத்தையே

பலியெடுக்க நினைக்கிறான் ஆறுமுகம். வையத்தில் வளமாக வாழ்வோர்மீது வஞ்சம் தீர்க்கப் பார்க்கிறான்.

கனகா: ஆனாலும், ஆறுமுகத்தின் செல்வாக்கு நாளுக்கு நாள் கூடுகிறதேயல்லாமல், குறைந்தபாடில்லையே.

பிரபு: கனகா...... அவிச்ச இறால் துடிக்கிறது என்று சொல்லி. துடிக்கவும் பண்ணிக்காட்டி, நம்பவும் வைக்கக்கூடிய நாவன்மை படைத்தவன் ஆறுமுகம். இந்தச் சனங்கள் இருக்கிறார்களே, அவர்கள் அடித்த காற்றுக்கு அசைந்து கொடுக்கும் நாணற்புற்கள். இன்றைக்கு இந்தப் பக்கம்...... நாளைக்கு அந்தப் பக்கம். கொள்கையோ குறிக்கோளோ அற்றவர்கள்.

கனகா: அதிருக்கட்டும். நீங்கள் அந்தப் பக்கம் ஒருநாட்கூடப் போனதில்லையோ?

பிரபு: (தயங்கியபடியே) ...... ஒரே ஒருநாள் போனேன். அதுவும் ஒழித்திருந்து கேட்டேன். ஆறுமுகத்தின் பிரசங்கம் எனக்கு ஆத்திரத்தைத்தான் வரவழைத்தது. அன்று விட்டேன் கொண்டலடி என்று அந்தப் பக்கமே போவதில்லை. மது அருந்தக்கூடாதாம், மங்கையரைத் தீண்டக்கூடாதாம், மாமிசம் புசிக்கக்கூடாதாம். சீச்சீ... இவற்றைக்கேட்க, எட்டிக் காயை வேப்பெண்ணெயில் தொட்டுத் தின்றது மாதிரி இருந்தது எனக்கு. மது, மாமிசம், மங்கை... இவை இல்லாவிடின் இந்த உலகமே சூனியம். வாழ்க்கையே துன்பமயமாகிவிடும். கோவில்களில் நடனங்களும், வாணவேடிக்கைகளும் வேண்டாமென்கிறான். கலையை இரசிக்கத் தெரியாதவனாயிற்றே. வேறென்ன சொல்வான். ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்க உணவைக் குறைத்து விரதம் பிடிக்கட்டுமாம். ஆறுமுகத்தின்

உந்த வரட்டுப் போதனைகளும் மூரட்டுப் பேச்சுக் களும் வளமான வாழ்விற்கு ஒத்துவராது. மக்கள் யாபேரும் சதா காலமும் துன்பத்தில் உழல வேண் டும் என்பதுதான் ஆறுமுகம் காட்டும் வழி.

**கனகா:** மதுவும், மாமிசமும், உடலையும் உள்ளத்தையும் கெடுப்பவை. பெண்கள் போகப் பொருட்கள அல்ல. விரும்பும்போது அநுபவிப்பதற்கும் வேண் டாதபோது ஒதுக்கித் தள்ளுவதற்கும். சிவமும் சக்தியும் போல ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாக வாழ்ந்து இறைவனின் பாதார விந் தங்களை அடைவதற்குரிய அறவழிகளைத்தானே ஆறுமுகப் புலவர் கூறுகிறார். நித்தியமான முத்தி இன்பத்தைப் பெறுவதற்கு சிறுசிறு துன்பங்களைப் பொறுத்துத்தான் ஆகவேண்டும்.

**பிரபு:** ஏது, இரண்டு நாள் பிரசங்கத்தோடு நீயும் மாறி விட்டாய். கனகா... நாளைக்குக் கிடைக்கக்கூடிய சர்க்கரைப் பொங்கலுக்காக, இன்றைக்கு முழுப் பட்டினி கிடக்க நான் தயாரில்லை. இன்றைய பொழுதை இன்பமாய்க் கழிப்போம். நாளை நடப்பதை யாரறிவார். வா கனகா......

காட்சி:

ஏழு

இடம்: திருவாவடுதுறை ஆதீன மண்டபம்.

பாத்திரங்கள்: மஹாசந்நிதானம் அம்பலவாணதேசிகர், (சின்னப்பட்டம்) மேலரகம் சுப்ரமண்யதேசிகர், ஆதீன வித்துவான், புலவர் பெருமக்கள், மற்றை யோர், ஆறுமுகம்.

மஹாசந்நிதானம் அம்பலவாணதேசிகர்: புலவர் பெருமக் களே! தமிழ்க்குடி மக்களே! வணக்கம். இன்று எங் கள் அழைப்பிற்கிணங்க, யாழ்ப்பாணத்து ஆறு முகப் புலவர் அவர்கள் ஆதீனத்துக்கு வருகை தந் திருக்கிறார். அன்னாரின் வரவால் எமது சபை புதுப்பொலிவு பெற்றுத் திகழ்கிறது. ஈழத்திலும்

தமிழ்நாட்டிலும் பல இடங்களில் கற்ருேரும் மற்ருேரும் எளிதில் விளங்கிக்கொள்ளக்கூடிய முறையில் சைவசித்தாந்தப் பிரசங்கங்கள் ஆற்றிவருகின்ருர்கள், புலவர் அவர்கள். அவர் ஒரு தமிழ்த் துறவி. சைவத்திலும் தமிழிலும் கொண்டுள்ள அளவிலாப் பற்றுதலிஞல் அவற்றை வளர்ப்பதற்காக பலதியாகங்கள் புரிந்துள்ளார். சொல்லின் செல்வரை, சித்தாந்த செம்மலே, ஐந்தாங்குரவரை வருக, வருக, என்று திருவாவடுதுறை ஆதீனம் வரவேற்கின்றது. சைவத்திலும் தமிழிலும் உங்களுக்குள்ள ஐயந்திரிபுகளேக் கேட்டுணர ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அடுத்து, ஆதீனப் புலவர் வரவேற்புரை வழங்குவார்.

**ஆதீனப் புலவர்:** மஹாசந்நிதானம் அவர்களுக்கும் யாழ்ப்பாணத்து ஆறுமுகப்புலவர் அவர்கட்கும் இங்கு குழுமியிருக்கும் புலவர் பெருமக்களுக்கும் ஏனேயோர்க்கும் என் அன்பின் வணக்கம். அரசாங்கத்தின் செல்வாக்குடனும், ஆங்கிலேயரதும், அமெரிக்கர்களினதும் பண உதவியுடனும் யாழ்ப்பாணத்தில் மதமாற்றவேலே செய்துவரும் கிறீஸ்தவப் பாதிரிமார்களேயெல்லாம் தனித்தொருவராக நின்று எதிர்த்து சைவத்தையும் தமிழையும் வளர்த்துவரும் சிவநேசச் செல்வர், ஆறுமுகப்புலவராவர். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன். தவறு கண்டவிடத்து தலேபோக நேர்ந்தாலும் கண்டிக்காது விடமாட்டார். ஒழுக்கத்திற் பழுத்தவர். சுருங்கக்கூறின், அவர் ஒரு நடமாடும் பல்கலேக்கழகம். அத்தகைய நல்லவரை, வல்லவரை திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பாக வருக; வற்ருத கருத்துக்களே அள்ளித்தருக, என்று வரவேற்கின்றேன்.

**ஆறு:** மஹாசந்நிதானத்திற்கும் அவையோர்க்கும் என் அன்பு வணக்கம். மஹாசந்நிதானம் அவர்களும்

ஆதீனப்புலவர் அவர்களும் இதுவரை என்னை வியந்து பாராட்டிப் பேசினுர்கள். அவ்வளவிற்கும் அடியேன் அருகதையுள்ளவன்தாஞ என எண்ணு கின்றேன். ஏதோ சைவாபிமானமும், தமிழபி மானமும் என்னைப்பிடித்துக்கொண்டது உண்மை தான். நாம் இப்பொழுது வாழ்ந்துகொண்டிருக் கும் காலம் ஒரு சோதனைக்காலம். அந்நியரின் அடக்குமுறை ஆட்சியின்கீழ், நமதருமைச் சைவமுந் தமிழும் என்ன நிலைக்கு உள்ளாகப்போகின் றனவோ என்று பயப்படவேண்டிய கட்டம் தோன்றியுள்ளகாலம். நம் மூதாதையர் போற்றி வளர்த்த சைவசமயம், முன்னோர்கள் பேணித்தந்த தமிழ் மொழி, ஆகிய இரண்டும் சீரழிந்து, நிலை குலைந்து, உருவழிந்துபோனது எமதுகாலத்தில்தான், என்ற வசைச்சொல் வரக்கூடாதவாறு நாம் பார்த் துக்கொள்ளவேண்டும். சைவ சித்தாந்தத்திலும், தமிழ் இலக்கண இலக்கியத்திலும் சில வினக்கள் வினவ அவையோர்கள் விழைவதாக அறிகின்றேன். கற்றது கைம்மண்ணளவு கல்லாத துலகளவு. ஏதோ என்னுலியன்றமட்டில் உங்கள் சந்தேகங் களைக் களைய முயற்சிக்கின்றேன்.

ஆதீன புல: புலவர் அவர்களே! சைவசமயமே ஏனைய சமயங்களைவிட சிறந்த சமயம் என்று பெரியோர் கள் கூறியிருக்கின்முர்களே, எதனுல்?

ஆறு: சைவசமயமே மெய்ச்சமயம். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு படிகள் மூல மாக நித்தியானந்தத்தைத் தரும் முத்தியைப்பெற வழிகாட்டுவது சைவசமயமொன்றே. ஏனைய மதங் களில் ஒருசில உருவ வழிபாட்டையும், இன்னும் சில அருவுருவ வழிபாட்டையும் வேறுசில அருவ வழிபாட்டையும் மேலுஞ்சில ஞான வழிபாட்டை யும் கொண்டிருக்க, சைவசமயமோ இந்நான்கை யும் ஒருங்கே கொண்டு ஒன்றற்கொன்று அரும்பு

மலர் காய் கனி போல தொடர்பு கொண்டிருக் கின்ற தலையாய சிறப்பினையுடையது.

**ஒரு புலவர்:** இறை வழிபாட்டிற்குச் சிறந்தது வேதநெறியா? ஆகம நெறியா?

**ஆறு:** இறைவனால் அருளிச்செய்யப்பட்டவேதம் பொது நூல், சிவாகமம் சிறப்பு நூல். வடநாட்டார் வேதநெறியினையே விரும்புகின்றனர். தென்னாட் டார் சிவாகமங்களையே பெரிதும் போற்றிப் பின் பற்றுகின்றனர். சமயகுரவர்கள் நால்வரும் அரு ளிச்செய்த தேவார திருவாசகங்கள் சிவாகமங்களி லிருந்து பிழிந்தெடுக்கப்பட்ட தெளிந்த சாரமே. மற்றும் சைவசமயப் பெரியார்கள் இதை அறிந்து உணர்ந்து தெளிந்து பாடல்கள் வாயிலாக எமக்கு அறிவுறுத்தியுள்ளனர். எனவே இறைவழிபாட் டிற்கு ஆகம நெறியே ஏற்புடைத்தென்பது அடி யேனின்கருத்து.

**ஒரு புலவர்:** வேதாந்த மென்பது யாது?

**ஆறு:** வேட்[illegible] அற்ற இடம் வேதாந்தம். இதை, ''வேதாந்தமாவது வேட்கை யொழிந்திடம்'' என் னும் திருமூலர் வாக்கால் தெளிவாகிறது.

**ஒரு புலவர்:** அப்படி யென்றால் சித்தாந்த மென்பது?

**ஆறு:** வேதாந்தத்தின் தெளிவுதான் சைவசித்தாந்தம். ''வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தம்'' என் னும் அறிஞர் வாக்கும் இங்கு நோக்கற்பாலது.

**ஆதீன புல:** அருமை! அருமை!!

**சுப்பிரமணிய தேசிகர்:** அற்புதம்! அற்புதம்!!

**ஒரு புலவர்:** இவ்வளவு தெளிவாகவும், அழகாகவும் அருமை யாகவும் விளக்கந் தருகிறீர்களே. யாழ்ப்பாணத்

தில் இவ்வளவு சிறந்த புலமைமிக்க ஒருவர், இருப் பதை அறிய ஆச்சரியமாயிருக்கின்றது. யாழ்ப் பாணத்தில் புலவர்கள் இருப்பதாக நாம் கேள்விப் பட்டதேயில்லை.

ஆறு: வெட்கப்படுகிறேன். தமிழ்நாட்டிலேயிருந்து கொண்டு அண்டை நாடான ஈழத்திலுள்ள யாழ்ப்பாணத்துப் புலவர்களைப்பற்றி ஒன்றும் தெரியவில்லையே என்று நீங்கள் கூசாமல் கூறும் பொழுது உண்மையிலேயே வெட்கமும் துக்கமும் என்னைச் சூழ்ந்து கொள்கின்றன. ஆனல் தமிழ்நாட்டுப் புலவர்களைப்பற்றி நாம் நன்கு அறிந்துவைத்திருக்கின்ருேம். இதோ ஈழத்துப் புல வர்கள் வரிசையைக் கூறுகிறேன். தென்னவன் அமைத்த தமிழ்ச் சங்கத்திலே சங்கப்புலவர்களுள் ஒருவராக இருந்து தமிழை வளர்த்தாரே ஈழத் துப் பூதந்தேவனர். கேள்விப்பட்டதில்லையா? காளி தாஸரின் இரகு வம்சத்தைத் தமிழிற்பாடி அழி யாப்புகழ் பெற்றுவிட்ட அரசகேசரியை அறிய வில்லையா நீங்கள்? பறங்கி சாப்பிடப் பசுவேண் டும், கொண்டுவா வீட்டுகொரு பசு என்ற ஆணை யைக் கேட்டதும், தம் நாட்டையே விட்டு வெளி யேறினரே, ஞானப்பிரகாசர். அவர் வடமொழி யிலும், தமிழ் மொழியிலும் ஏராளமான சித் தாந்த நூல்கள் எழுதியும், சிலவற்றிற்கு விளக்க வுரை, விரிவுரை தந்தும் இருக்கின்ருரே. அவரைப் பற்றி அறியவில்லையா? மேலும், ஆளும் அரசன் தொடக்கம் ஆண்டியாயிருப்பவன்வரை அளவிடற் கரிய புலவர்கள் தோன்றியுள்ளனரே. இன்னும் சேனதிராயர், முத்துக்குமாரகவிராயர், சரவண முத்துப்புலவர், சின்னத்தம்பிப்புலவர் போன்ருே ரின் புலமைகளைக் கேள்விப்பட்டதேயில்லையா? இலைமறைகாய்போல் மறைந்துகிடக்கும் மாணிக் கப்புலவர்கள் யாழ்ப்பாணத்தில் ஏராளம், ஏரா ளம். (கைதட்டல்)

**ஆதீனப் புலவர்:** இதுவரை அவையோர்கேட்ட பற்பல கேள்விகட்கெல்லாம் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் பதிலளித்தீர்கள். மிக்கமகிழ்ச்சி. "கேட்பார் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்பமொழியும்" சொல்வன்மை, பல நூல்களில் உங்களுக்குள்ள ஆட்சி, தருக்க நெறிக்கு மாறுபடாமல் பேசும் முறைமை ஆகியவற்றைக்கண்டு உண்மையிலேயே பூரிப்பெய்துவிட்டோம். இப்பொழுது யாவருங்கேட்டு ஈடேறும் வண்ணம் "பதிபசுபாசம்" ஆகிய முப்பொருள்களைப் பற்றிய ஒரு விரிவான சொற்பொழிவை நிகழ்த்துமாறு புலவரைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**ஆறு:** மிக்க மகிழ்ச்சி. பதி, பசு, பாசம், பற்றி விளக்கம் தருகிறேன், கேளுங்கள். ( ஒளி மறைகின்றது, பின் மீளுகின்றது )

**ஆதீனப் புலவர்:** அருமை! அற்புதம்!! வருணிக்கவே வார்த்தைகள் இல்லை. பதி, பசு, பாசம் பற்றி தேவாரங்களையும், சைவ சித்தாந்த நூற் கருத்துக்களையும் கொண்டு தந்த விளக்கம் எங்கள் எல்லாரையும் கவர்ந்துவிட்டது. இப்படியான ஒரு சொற்பொழிவை நாம் இதன் முன் ஒரு போதும் கேட்டதில்லை. ஒரு சில மணி நேரமாக எங்களையே மறந்து மதுவுண்டு மயங்கிய மதுகரம் போல் கட்டுண்டிருந்தோம். பேசும்போது வெளிப்படுத்திய சைவ ஆவேசம், கையாண்ட எளிய இனிய நடை, காட்டிய மேற்கோள்கள், உள்ளடக்கிய பொருட்செறிவு ஆழம் — ஆஹா! எப்படிச் சொல்லுவேன். இந்த நூற்றூண்டில் இவருக்கிணையாக நாவன்மை படைத்தவர் வேறு எவருமே இல்லை. சில நூற்றூண்டுகளுக்குமுன் வாழ்ந்த, நாவன்மையால் உயர்ந்த நாவுக்கரசரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனல் அவருக்குப் பின் தோன்றிய

ஒரே நாவுக்கரசரை இப்பொழுது எம் கண்கூடாகக் காண்கின்றோம். என்ன தவம் செய்தோம்.

**ஒரு புலவர்:** கொந்தளிக்கும் கடலினிலே தத்தளிக்கும் படகினுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கம்போல, அஞ்ஞான இருளில் மூழ்கி அறிவிழந்து நிற்போர்க்குத் துணை செய்யும் அறிவொளியாகத் திகழ்கிறார் புலவர் அவர்கள்.

**ஒரு புலவர்:** கொடிய வெயிலால் வாடுபவர்களுக்குக் கிடைத்த குளிர் தருவைப்போல் எங்களுக்கு ஆறுமுகப் புலவர் கிடைத்திருக்கிறார்.

**ஒரு புலவர்:** புலவர் பெருமான் ஓர் ஒளிவளர் விளக்கு. ஒப்பிலா மணி. அறிவுக் களஞ்சியம்.

**ஒரு புலவர்:** ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் ஆறுமுகப் புலவர் போன்ற பெரியார்கள் தோன்றுகிறார்கள்.

**ஒரு புலவர்:** தமிழையும் சைவத்தையும் காக்கப்பிறந்த காவலர்.

**ஆதீனப் புலவர்:** உங்கள் ஒருமித்த பாராட்டுதல்களைக் கண்டு அதிக மகிழ்ச்சி கொள்ளுகிறேன். சிவஞான முனிவரும், கச்சியப்பரும் அணிசெய்த ஆதீனம், ஆறுமுகப் புலவரின் சொற்பொழிவைக் கேட்டுப் பெருமை பெற்றுள்ளது. வாழ்க அவர் தொண்டு; வளர்க அவரின் தமிழ்ப் பணியும், சமயப் பணியும்; நீண்ட ஆயுளையும், நிரந்தர சௌக்யத்தையும் அன்னாருக்கு ஈந்து அவரின் பணிகளை முட்டின்றி நடக்கச் செய்யுமாறு எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன். இந்த நேரத்தில் இன்னொரு மகிழ்ச்சிச் செய்தி. எங்கள் புலவர்மணிக்கு திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பாக "நாவலர்" என்ற பொருத்தமான பட்டத்தை அளிக்கிறோம்.

உலகத்துக்கு ஒரே தேவன்; ஒரே குலம்; ஒரே ஞாயிறு. அதுபோல நாவலர் என்றால் இனிமேல் ஆறுமுக நாவலரையே குறிக்கும்.

**ஆதீனப் புலவர்:** ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் வாழ்க.

**எல்லோரும்:** வாழ்க

**ஆறுமுக நாவலர்:** மஹாசந்நிதானம் அவர்களே! தமிழ்ப் பெருமக்களே! என்னை இங்கு அழைத்துப் பாராட்டி "நாவலர்" பட்டமளித்துக் கௌரவித்ததுக்குத் திருவாவடுதுறை ஆதீனத்துக்கு என் இதயபூர்வமான நன்றி. இன்றைய திருநாள் என்றும் என் நினைவை விட்டு அகலாது. எனக்களிக்கப்பட்ட இப்பட்டத்தால் பொறுப்பு மேலும் கூடியிருக்குதென்பதை நான் உணருகிறேன். சர்வேசுவரனின் துணை கொண்டு சைவத்தையும், தமிழையும் தழைக்கச் செய்ய நாளெல்லாம் பாடுபடுவேன். இது உறுதி. உங்களனைவருக்கும் என் நன்றி.

**காட்சி:**

---

எட்டு

**இடம்:** பாதிரி வால்டன் இல்லம்

**பாத்திரங்கள்:** பாதிரி ஜோன் வால்டன், பீற்றர்பிள்ளை

( இருவரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள் )

**பீற்றர்:** திருவாவடுதுறை ஆதீனத்தில், ஆறுமுகம் "நாவலர்" பட்டத்தைப் பெற்றுக்கொண்டு யாழ்ப்பாணம் திரும்பியபின் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அவரின் கீர்த்தியும், புகழும், செல்வாக்கும் பெருகிக்கொண்டே போவதைக்கண்டு கிறீஸ்தவர்களாகிய நாம் அஞ்சவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

பாதிரி ஜோன் வால்டன்: பட்டமாமெல்லே பட்டம். திண்ணை தூங்கிச் சாமி மடமும், சத்திரமும் அளிக்கும் பட்டமும் ஒரு பட்டமா? பரதேசிகள் நாலு சேர்ந்து சூட்டிய பட்டந்தானே இது... என்ன இருந்தாலும் ஆங்கில சாம்ராஜ்யம் வழங்கும் 'சேர்' பட்டம், 'ராவ்பகதூர்', 'முதலியார்' போன்ற கௌரவப் பட்டங்களுக்கு இணையாக இப்பட்டம் நிற்க முடியுமா?

பீற்றர்: வடநாட்டிற்கூட ஆறுமுகத்தின் கீர்த்தி பரவிவிட்டது. நாவலரின் பிரசங்கத்தைக் கூட்டங்கூட்டமாகச் சனங்கள் போய்க் கேட்கிறார்கள். எத்தனையோ கிறீஸ்தவர்கள் அவரிடம் திருநீறு வாங்கி இட்டு சைவர்களாகிவிட்டார்கள். ஊர்க் கட்டுப்பாடுகளை வைத்தும், குண்டர்களை ஏவியும் கிறீஸ்தவர்களுக்குக் கொடூரம் விளைவிக்கிறார்கள். எந்நேரத்திலும் பயத்துடனும், பீதியுடனும் வாழ வேண்டியிருக்கிறது. இக்கொடுமைகளை நீங்கள் கண்டுங் கேட்டும் வாளாவிருக்கின்றீர்களே.

வால்: ஆம். நானும் அறிந்தேன். ஆறுமுகத்தின் போக்கு விபரீதமாக இருக்கின்றது. அவரை அடக்கத் தகுந்த சந்தர்ப்பத்தைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.

பீற்றர்: உடனடியாகவே கிறீஸ்தவர்களுக்கு போலீஸ் பந்தோபஸ்து கொடுத்தாக வேண்டும். ஆறுமுகத்தையும், சகாக்களையும் ஜெயிலுக்குள்ளே தள்ளினால்தான் எங்களுக்கு நிம்மதியாக இருக்கும். இது பற்றி ஏஜெண்டுத் துரையிடம் சொல்லி ஆவன செய்யுங்கள்.

வால்: ஆம். ஜனங்களுக்கு சமய உணர்ச்சியைத் தூண்டி விட்டிருக்கிறான். மதக்கலவரங்களை உண்டுபண்ண அடிகோலுகிறான். மிச்சம் துணிச்சல் பேர்வழி போல இருக்கு ஆறுமுகம்.

பீற்றர்: முன்பெல்லாம் பிரசங்கங்கள் மூலமாகவே சமய உணர்ச்சியைத் தூண்டிவந்திருக்கிறுர் ஆறுமுகம். அதிகம் பேருக்குத் தெரியாது. ஆனல் இப்பொழுது வண்ணுர்பண்ணையில வித்யாநுபாலன அச்சகத்தை ஆறுமுகம் நிறுவியிருக்கிறுர். வேகமான தமிழில் கிறீஸ்து மதத்தைக் கண்டிக்கும் துண்டுப் பிரசுரங் களைத் துரிதமாக வெளியிடுகிறுர். இவை மூலை முடுக்குகளெல்லாம் பரவுகின்றன. படித்தவர்கள் எங்கள்மேற் கொதித்தெழுகிறுர்கள். பயந்தவர் கள் சைவர்களாக மாறுகிறுர்கள். அந்தக் காலத் தில் ஆறுமுகத்துக்கே கண்டனங்கள் எழுதிய கிறீஸ் தவப் பெரியார்களான கறேல் விசுவநாதபிள்ளை யும், சி. வை. தாமோதரம்பிள்ளையுங்கூட இப் பொழுது சைவர்களாகி விட்டார்களென்ருல் பாருங்களேன்.

வால்: ஆமாம். அச்சகம் நிறுவுவதற்கு அனுமதி வழங்கி யதுதான் தவருய்ப் போச்சு.

பீற்றர்: யேஸ் தற்ஸ் த பொயின்ற் ( *Yes, that is the point* ) ஏசெண்டர் டைக் துரைதானே வழங்கியிருக்கிறுர். உங்களுக்கு அவரிடம் மிகுந்த செல்வாக்கு உண்டு என்பதை நான் அறிவேன். அவரிடம் சொல்லி அச்சகத்துக்களித்த அனுமதியை நீக்கிவிட்டால்...

வால்: சரியான யோசனை, 'டைக்' துரை எனது ஆப்த நண்பர். நான் சொன்னுல் கட்டாயம் செய்வார்.

பீற்றர்: நல்லது. விரைவாக அதை நிறைவேற்றுங்கள்.

வால்: எனக்கு இன்னெரு யோசனை தோன்றுகிறது.

பீற்றர்: என்ன யோசனை?

வால்: ஆறுமுகத்துக்கு ஏதாவது பணத்தைக் கொடுத்து எம் பக்கம் சேர்த்துவிட்டால்......

பீற்றர்: உது சரிப்பட்டு வராது. பணங்கொடுத்து வாங்கக் கூடிய பண்டமல்ல ஆறுமுகம். உந்தப் பார்சிவ லான பார்சிவல் சுவாமியாலேயே ஆறுமுகத்தைத் தன்பக்கம் வைத்திருக்க முடியவில்லையென்றால் பாருங்களேன்.

வால்: அப்படியா...! ஆறுமுகத்தையும் அவரது சகாக்களை யும் பிரித்துவைக்கக்கூடிய முறையில் சூழ்ச்சி செய்தால்

பீற்றர்: சபாஷ். அருமையான பிரித்தாளும் கொள்கை. இது பிரித்தானியரின் பிறப்புரிமையாச்சே... இது களெல்லாத்திலும் பார்க்கச் சிறந்த வழி என்ன வென்றால் ஆறுமுகத்தையும், அவற்றை இரண் டொரு வாரிசுகளையும் ஜெயிலுக்குள் தள்ளிவிட் டால் நிலைமை சரியாய்விடும். குழப்பக்காரரும் அடங்கிப் போவார்கள்.

வால்: முயற்சி செய்கிறேன்.

பீற்: அது நிற்க. ஆறுமுக நாவலர் வெளியிட்ட ''சைவ தூஷண பரிகாரம்'' என்ற நூல்தான் யாழ்ப்பா ணத்தில் இத்தனை மதக்குழப்பங்களுக்கும் காரணம். எனவே, அந்த நூலைத் தடைசெய்துவிட்டால் என்ன, எல்லாவற்றையும் பறிமுதல் செய்து தீயிற் கொழுத்திவிட்டால்...

வால்: சைவ தூஷண பரிகாரம் பற்றி எனக்கும் ஆறு முகத்துக்குமிடையில் நடைபெற்றுவந்த கடிதப் போக்குவரத்து பற்றி நீங்கள் அறியவில்லையா?

பீற்: கொஞ்சம் அறிந்துள்ளேன். ஆனால் முற்றிலும் அறியவில்லை. சொல்லுங்கள்.

வால்: சைவதூஷணபரிகாரம் எழுதினவர் யார் என எனக்கு அறிவிக்கும்படி ஒரு கடிதம் எழுதி ஆறு முகத்துக்கு அனுப்பியிருந்தேன். சைவப்பிரகாச சமாஜியர் என்னும் புனைபெயரில்தான் நூல் வெளி யாகியிருக்கிறது.

பீற்: சொந்தப் பெயரில் எழுதினால் என்ன நேருமோ என்று பயம். துடை நடுங்கிக் கோழைகள் புனை பெயரில் புத்தகத்தை வெளியிடுகிறார்கள். அதுசரி, உங்கள் கடிதத்துக்குப் பதில் கிடைத்ததா?

வால்: என்ன நெஞ்சழுத்தம் ஆறுமுகத்துக்கு. ''இச் சைவ தூஷணபரிகாரத்தைப் பற்றி ஒராண்டுக்கு முன்னரே இங்கிலாந்தில் வெளியாகும் *''Wesleyan Methodist Report''* என்னும் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருந்தும் அதனை அறியாது நீர் கேட்பது விந்தையாக இருக்கிறது என்றும்'' அதனை எழுதினவன் நானே என்றும், ''விளக்கம் தேவையென்றால் கொடுப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறேன்'' என்றும் பதிலெழுதியிருந்தார். எவ்வளவு துணிச்சல்.

பீற்: அதற்கு நீங்கள் பதிலெழுதவில்லையா?

வால்: எழுதினேன். ஆறுமுகத்தை என்வசமாக்கக் கருதிப் பரிந்து ஒருகடிதம் எழுதினேன். நூல் எழுதியது நானல்லன் என்று மறுத்துவிடுவதற்கு ஒரு சந்தர்ப்பம் அளிப்பதாகவும், மிஷனரிமார்களுடன் நீண்டகாலம் நெருங்கிப்பழகிக் [illegible]ப்பட்டபின்பும் அவர்களைத் தூற்றி எழுதுதல் வருந்தத்தக்கதென்றும் பதிலெழுதினேன்.

பீற்: அதற்கு என்ன எழுதினார்?

வால்: அப்பா! அதற்கு அவர் எழுதியிருந்தபதிலை இப்பொழுது நினைத்தாலும் இரத்தம் கொதிக்கிறது. காரசாரமாக எம்மைத்தாக்கி எழுதியிருந்தார். இனிமேலும் பொறுக்கமுடியாது. ஆறுமுகத்துக்குச் சரியான பாடம் படிப்பிக்கிறேனோ இல்லையோ என்றுபாரும்.

பீற்: அப்படியே செய்யுங்கள். நான் வருகிறேன்.

காட்சி:

---

ஒன்பது

**இடம்:** சைவப்பிரகாச வித்தியாசாலை, வண்ணார்பண்ணை.

**பாத்திரங்கள்:** தில்லைநாதபிள்ளை, வைத்திலிங்கம்பிள்ளை, பொன்னம்பலம்பிள்ளை, கைலாசபிள்ளை.

(தில்லைநாதபிள்ளையும், வைத்திலிங்கம்பிள்ளையும் உரையாடிக் கொண்டிருக்கிறார்கள்)

**வைத்தி:** நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் நடைபெறும் திருவிழாவைப் பற்றியும், கந்தசுவாமியாரைப் பற்றியும் நையாண்டிசெய்து, ''சுப்ரதீபம்'' என்ற நூலை கிறீஸ்தவர்கள் வெளியிட்டிருக்கிறார்களாமே.

**தில்லை:** அதற்குத் தக்க பதிலளிக்குமுகமாக 'சுப்ரபோதம்' என்ற அறிக்கையை எழுதி நாவலர் ஐயா வெளிப்

படுத்தியிருக்கிறர். 'சுப்ரதீபம்' எழுதிய அந்தக் கிறீஸ்தவ வாலிபரே 'சுப்ரபோதம்' படித்ததும் மன்ம்மாறி சைவராகிவிட்டாராம்.

வைத்தி: அப்படியா! நல்லது. ஆகையினுல்தான் நாவலரய்யாவைப் பிடித்துத்தின்னுகிற அளவுக்குப் பாதிரிமார்கள் சினந்தெழுகிறர்கள். அதுமட்டுமா, போலிச் சைவர்களுக்குக்கூட நாவலரின் பெயரைக் கேட்கவே ஒரே குலைநடுக்கமாய் இருக்கின்றது.

தில்லை: உண்மைதான். ஒருமுறை நாவலரின் நண்பர் ஒருவர் தனது வைப்பாட்டி மகனுக்கு ஏடு தொடக்கி வைக்கும்படியும், அதற்காக ஆயிரம் ரூபா தருவதாகவும் மன்றுடினுர். மனைவியிருக்கும்போது விபசாரஞ் செய்தவன் வீட்டுக்கு அடியெடுத்து வைப்பதே பாவம். சைவ ஒழுக்கம் தவறினவனைக் கோடிதந்தாலும் மதிக்கமாட்டேனென்று கூறிப் பிடிவாதமாக மறுத்துவிட்டார்.

வைத்தி: அப்படியா! இதற்கு எவ்வளவு தியாகசிந்தனை இருக்கவேண்டும்.

தில்லை: இன்னென்று கேளுங்கள், ஒரு பெருந்தனவந்தர் நாவலரிடம் வந்து மதுபானத்தையும், விபசாரத்தையும் மட்டும் நூல்கள் வாயிலாகவும், பிரசங்கம் மூலமாகவும் கண்டிக்காமல் விட்டால் பள்ளிக்கூடச்செலவு முழுவதையும் தான் ஏற்றுக்கொள்வதாகக் கூறினுர். அந்த அன்பருக்கு இந்த இரண்டிலும் மிகுந்த ஈடுபாடு. நாவலருக்கும் பண நெருக்கடியான காலந்தான். ஆனுல் நாவலர் உடனடியாக இந்த இரண்டையும் பற்றிக் காரசாரமாகக் கண்டித்து எழுதி, ஒரு துண்டுப்பிரசுரம் வெளியிட்டார். முதல் வேலையாக அப்பிரசுரமொன்றை அச்செல்வந்தரிடம் கொடுத்து எனக்குவேண்டிய பணத்தை ஈசன் கொடுப்பான். நீர் முதலில் திருந்

திக்கொள்ளும், என்றூர் நாவலர். பார்க்கவேண்டுமே அவரின் முகத்தை.

வைத்தி: கண்டிக்கவேண்டியவர்களைக் கண்டிக்கத்தவறமாட்டார், ஐயா. எல்லாம் அவர்களைத் திருத்தும் பொருட்டுத்தானே:

தில்லை: அதேபோலத்தான், இரக்கம், கருணை, தயாளம் போன்ற குணங்களும் நாவலரின் உடன் பிறந்தவை. இவரிடம் மிகவும் பிரியமாக இருந்து ஞான சாத்திரங்களைக் கற்றுக்கொண்டுவந்தார், சுப்பிரமணியபிள்ளை என்பவர். அவருக்கு நோயுண்டான பொழுது, தம் செலவிலேயே வைத்தியம் செய்வித்தார். அவர் இறந்தபோது கண்ணீர்விட்டு அழுதார். நரஸ்துதியே பாடாத நாவலர் அன்பின் காரணமாக சுப்பிரமணியபிள்ளைமேல் பல பாடல்களைப் புனைந்திருந்தார்.

வைத்தி: அப்படியா! சரி... அது நிற்க, நாவலர் ஐயா அவர்கள் அரியபல ஏட்டுச் சுவடிகளைப்பரிசோதித்து அவற்றை அச்சேற்றி நூல்களாக வெளியிட்டிருக்கிறாரமே.

தில்லை: ஆம். தமிழ்நாட்டில் இதுவரை எவருமே செய்யாத, செய்யத்துணியாத ஒரு செயலை நாவலர் செய்திருக்கிறூர்.

வைத்தி: செயற்கரிய செய்வர் பெரியர்.

தில்லை: ஏட்டுச் சுவடிகளைப் பரிசோதிக்கும்போது நாவலருடன் நானும் சதாசிவம்பிள்ளையும் உடனிருந்து உதவுவோம். ஏடுகள் என்ன ஏடுகளாகவா இருந்தன. ஏடுகளிற் சில கறையான்களால் அரிக்கப்பட்டதன் விளைவாக இடையிடையே எழுத்துக்கள் இல்லாமல் இருக்கும். சில எழுத்துக்கள் வாலுந் தலையுமில்லாது இருக்கும். சில ஏடுகள் தொட்டால்

முறிந்துபோகும் நிலையிலிருக்கும். எல்லாவற்றையும் நிவிர்த்தி செய்து பிழையின்றி அவற்றை அச்சேற்ற எவ்வளவு புலமைவேண்டும்! ஏடுகளை வைத்திருப்பவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கே பகீரதப் பிரயத்தனம் செய்யவேண்டியிருந்தது.

வைத்தி: பழைய தமிழ் சுவடிகளை பாதுகாப்பதற்கென்றே தான் நாவலரை தமிழன்னை தந்திருக்கிறாள். நாவலரின் தொண்டைத் தமிழ் கூறும் நல்லுலகம் என்றும் மறக்கமாட்டாது... என்னென்ன நூல்கள் வெளியிட்டிருக்கிறார்?

தில்லை: சூடாமணி நிகண்டுரை, நன்னூல் விருத்தியுரை, பெரியபுராண வசனம், பாலபாடங்கள், கிறீஸ்தவ கண்டனங்கள், முதலிய அரியபல நூல்கள் இங்கிருந்து வெளியிட்டிருக்கிறார். இன்னும் அநேக நூல்கள் வெளியிட எண்ணி சென்னைபட்டணம் சென்றிருக்கிறார். வண்ணார்பண்ணையிலுள்ள அச்சகம் சிறியது. அத்துடன் ஏடுகளும் இங்கு கிடைப்பது அரிது. சென்னையில் இவர் நிறுவியுள்ள அச்சகம் மிகப்பெரிது. ஏடுகள் பலவற்றை ஆதீனங்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். சி. வை. தமோதரம்பிள்ளையும், ஏட்டுச்சுவடிகளை அச்சேற்றும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். அவரின் உதவியும் இவருக்குக்கிடைக்கும்.

வைத்தி: தமிழுக்கு நல்லகாலம் பிறந்திருக்கிறது. அது சரி... நாவலர் இப்போது தமிழ்நாட்டில் சுற்றுப்பிரயாணஞ்செய்து அரிய பிரசங்கங்கள் ஆற்றி வருகிறாராம். ஒவ்வோரிடத்திலும் வரவேற்புகள் தடல்புடலாக நடக்கிறதாமே!

தில்லை: கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாஞ் சிறப்புத் தானே... அதோ, நாவலரின் மருகர் பொன்னம்பலபிள்ளையும் பெருமகன் கைலாசபிள்ளையும் வருகிறார்கள். அவர்களையே கேட்டுத் தெரிந்துகொள்ளு

வோம்... இந்தப் பொன்னம்பலபிள்ளை இருக்கிறரே. இந்தச் சின்ன வயசுக்குள்ளே ஞான சாஸ்திரங்களில் எவ்வளவு புலமையைப் பெற்று விட்டார். புராணங்களுக்கு விருத்தியுரை சொல்வதில் இவருக்கு ஒப்பார் யாருமில்லை.

வைத்: கல்லாமல் பாதி குலவித்தை.

( பொன்னம்பலபிள்ளையும் கைலாசபிள்ளையும் வருகிறர்கள் )

தில்லை: வாருங்கள், தமிழ்நாட்டில் நாவலரய்யா எப்படியிருக்கிறர், என்பதை எங்களுக்குச் சொல்ல வேண்டும்.

பொன்: தமிழ்நாட்டில் சென்ற இடங்களிலெல்லாம் நாவலரய்யாவுக்குப் பெரிய வரவேற்புகள். அவரின் சைவப்பிரசங்கங்களைக் கேட்கக் கூட்டங் கூட்டமாக மக்கள் திரண்டு வருகிறர்களாம். தமிழ்நாடு முழுக்க இதே பேச்சாகத்தான் இருக்காம்.

கைலா: ஐயாவுக்கு நாவலர் பட்டமளித்த திருவாவடுதுறை ஆதீனத்தில் பல நாட்கள் தங்கி சொன்மாரி பொழிந்திருக்கின்றர். ஆதீனத்திலுள்ள ஏட்டுப் பிரதிகளையும் அச்சிடுவதற்கு ஆராய்ந்தார். அப்பொழுது உருக்கமான நிகழ்ச்சியொன்று நடந்ததாம்.

தில்லை + வைத்: சொல்லுங்கள்.

கைலா: திருவாவடுதுறை மஹாசந்நிதானம் யாருக்கு மெழுந்து மரியாதை செய்வதில்லை. ஆனல் நாவலரய்யாமேற் கொண்டுள்ள அளவு கடந்த பக்தியின் காரணமாக அவருக்கு அம்மரியாதையைச் செய்யவிரும்பிய சந்நிதானம் ஒரு தந்திரம் செய்தார்.

தில்லை: என்ன தந்திரம்.

கைலா: நாவலர் ஐயா நான்கு ஏட்டுப்பிரதிகளைக் கேட்டார். சந்நிதானம் மனமுவந்து மூன்றையும் முன் வைத்துவிட்டு ஒன்றைத் தாம் பார்வையிடுவது போல் பாவனை செய்தார். நாவலரய்யா மூன்றையும் எடுத்துக்கொண்டு விடைபெற்றுச் சற்றுத் தூரம் நடக்க, உடனே சந்நிதானம் தன்கையிலுள்ள ஏட்டை எடுத்துக்கொண்டு, எழுந்துசென்று அவரிடம் கொடுத்தார். எழுந்து நாவலரய்யாவுக்கு மரியாதை செய்யவே இப்படியொரு நாடகத்தை நடத்தினாராம் சந்நிதானம்.

தில்லை: நன்று! நன்று!!... அதன்பின்பு எவ்வெவ்விடங்களுக்குச் சென்றிருக்கிறார்.

பொன்: நாவலரய்யாவை தருமபுர ஆதீனம் வரவேற்றுக் கௌரவித்தது. அங்கிருந்து சீர்காழி சென்று ஈற்றில் சிதம்பரத்தை அடைந்தார். பூலோக கைலாயமாக விளங்கும் சிதம்பரத்தில் தமிழும் சைவமும் தழைக்க பெரிய கல்லூரி ஒன்றை நிறுவவேண்டுமென்று எண்ணினார். அதையும் செயல்படுத்தி வருகிறார்.

தில்லை: செயல்வீரரல்லவா! அவர். எடுத்துக்கொண்ட விடயத்தை நிறைவேற்றித்தான் தீருவார்.

பொன்: சென்னையிலுள்ள தமது வித்யாநுபாலன அச்சியந்திரசாலையில் தாம்சேர்த்த ஏட்டுப்பிரதிகளை எல்லாம் அச்சேற்றி வெளியிடுகிறார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவித் தமிழ்வளர்த்த பொன்னுச்சாமித்தேவர் நாவலர் ஐயாவின் தமிழ்ப்பணிக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்ய முன்வந்திருக்கிறார்.

கைலா: தேவரின் வேண்டுகோளின்படி திருக்கோவையார், திருவாசகம், திருக்குறள் போன்ற நூல்களைப் பதிப்பித்திருக்கிறார் நாவலர் ஐயா.

பொன்: மதுரையாதீனம், குன்றக்குடியாதீனம் போன்ற பல ஆதீனங்கள் இவரை அழைத்துக் கௌரவித்துள்ளன. அநேகமாக புகழ்பெற்ற எல்லாத் தமிழ் நாட்டுத் தலங்களுக்குமே சென்றிருக்கிறார்.

கைலா: மதுரை ஆதீனத்தலைவர் நாவலரய்யாவின் நயமிக்க சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்து, தாம் அணிந்திருந்த விலையுயர்ந்த பொற்கண்டிகையை ஐயாவுக்கு அணிந்து இன்புற்றாராம்.

தில்லை: ஆஹா! அருமை!

பொன்: நந்தனார் சரித்திரத்தைக் கீர்த்தனையாகச் செய்த கோபாலகிருஷ்ண பாரதியார் அவற்றை நாவலரய்யாவுக்குப் பாடிக்காட்டிப் பாராட்டும் பரிசில்களும் பெற்றாராம்.

தில்லை: ஒரு புலவர், புரவலராகியது சரித்திரத்திலேயே நாவலர் ஐயா ஒருவர்தான்.

வைத்: பாராட்டுக்குரியவற்றைப் பாராட்டவும் முன்னிற்பார். அதேபோல் கண்டிக்க வேண்டியவற்றைக் கண்டிக்காமலும் விடமாட்டார்.

பொன்: உண்மைதான். கருங்குழி இராமலிங்கம்பிள்ளையை நாவலர் கண்டித்ததே இதற்குச் சான்று பகரும்.

தில்லை: யார்? வடலூர் இராமலிங்கம்பிள்ளையையா குறிப்பிடுகிறீர்கள்.

பொன்: ஆமாம். தாம் சிவனருள் பெற்றவரென்று, உலகத்தார் நம்பி, தம்மை வழிபடும்வண்ணம் சில பாடல்களைப்புனைந்து, அவற்றைத் திருவருட்பாவென்றும், தம்மைத் திருவருட்பிரகாச வள்ளலார் என்றும், தாமே பெயரிட்டுக் கொண்டார் இராமலிங்கம்பிள்ளை.

கைலா: இராமலிங்கம் பிள்ளையின் இச் செய்கை நாவலரைக் கொதித்தெழச் செய்தது. பிள்ளையின் சீடர்கள் அவரைச் சமயாசாரியார்களோடு சமத்துவமுடையரென்றும் அவரின் பாடல்கள் தேவார திருவாசகங்களுக்கு இணையானவையென்றும் கூறித் திரிகிறார்கள். அதுமட்டுமா! தமிழ்நாட்டிலுள்ள சில கோயில்களில் தேவாரம் முதலிய அருட்பாக்கள் ஓதுவதை நிறுத்திவிட்டு இராமலிங்கம் பிள்ளையின் பாடல்களையே ஓதுவிக்கிறார்களாம்.

தில்லை: என்ன துணிச்சல்.

பொன்: நாவலரின் பொறுமைக்கே சோதனை ஏற்பட்டுவிட்டது. கொதித்தார்; குமுறினார்; உளம் நொந்தார். இராமலிங்கம்பிள்ளையின் போக்கையும் அவரின் பாடல்களையும் கண்டித்து "போலி அருட்பா மறுப்பு" என்னும் நூலை வெளியிட்டார்.

தில்லை: நல்லகாரியந்தான் செய்திருக்கிறார்.

பொன்: சந்தேகமென்ன!

தில்லை: இராமலிங்கம்பிள்ளை பல அற்புதங்களை நிகழ்த்துவதாகக் கூறுகிறார்களே! தண்ணீரிலே விளக்கெரிக்கிறாராம். இரும்பைப் பொன்னாக்கி ரசவாதம் செய்கிறாராம். ஆகாய கமன குழிகை செய்து ஆட்களை ஆகாயத்தில் பறக்கவைக்கிறாராம் ஐயோ! ஐயோ!! (சிரித்துக் கொண்டே) இன்னும் இறந்தவர்களையே உயிர்பெறச் செய்கிறாராமே. ம்... இனிமேல் பூமி பாரந்தாங்க முடியாமல் அமிழ்ந்தவேண்டியதுதான்.

பொன்: சிரிப்புக்கிடமாகத்தான் இருக்கிறது. நாவலரய்யா விரைவில் யாழ்ப்பாணம் வருவதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. இவைபற்றிய விபரத்தை ஐயாவிடம் நேரடியாகக் கேட்டு அறிந்து கொள்வோம் — வாருங்கள்.

காட்சி :

பத்து

இடம்: கச்சேரியில் ஓர் அறை

பாத்திரங்கள்: சேர் ஜேம்ஸ் லோங்டன் ( *Sir James Longden Governor of Ceylon* ) துவைனன் துரை ( *Twynan, Govt. Agent Jaffna* ) பீற்றர்பிள்ளை, ஆறுமுகநாவலர், இன்னும் பலர்.

சேர் ஜேம்ஸ்: மிஸ்டர் துவைனன் தாங்யு. உமது விருந்து மிச்சம் மிச்சம் பிரமாதம்.

பீற்றர்: துவைனன் துரையவர்கள் எதைச் செய்தாலுமே திறமையுடன்தான் செய்வார். அவர் தொட்ட தெல்லாம் பொன். யாழ்ப்பாண ஏஜெண்டாக

இருந்துகொண்டு அவரின் தன்னலமற்ற சேவையே சான்று பகரும்.

**சேர் ஜேம்ஸ்:** *Well* பிரிட்டிஸ் சாம்ராஜ்யத்துக்குப் புகழ் தேடித் தந்திருக்கிறூர், மிஸ்டர் துவைனன். பொறுப்புள்ள நிர்வாகிகள் பதவிக்குத் தகுந்தவர் களைத்தானே பொறுக்கியெடுத்து நியமிப்போம். நீதியிலும், நிர்வாகத்திலும் ஆங்கிலேயர் என்றும் தவறியது கிடையாது.

**பீற்றர்:** உண்மை! உண்மை!! இலங்கைக் கவர்ணராகவும், சேனுதிபதியாகவும் தாங்கள் இருந்துகொண்டு, தாய்ப்பறவை குஞ்சுகளைத் தன் செட்டைக்குள் வைத்துக் காப்பாற்றுவதுபோல் எம் நாட்டவரை எக்குறையுமின்றிக் காத்துவருகிறீர்கள். இச்சந் தர்ப்பத்திலாவது நான் தங்களுக்கு நன்றி தெரி வித்துக்கொள்ள வேண்டாமா?

**சேர்:** *What* நன்றி *man*. இது எனது கடமை. இவ்வளவு தூரத்திலிருந்து உங்களையெல்லாம் சீர்திருத்தவும் பாதுகாக்கவுந்தானே வந்திருக்கிறேம்.

**பீற்றர்:** துரோகிகள். நன்றி கெட்டவர்கள்.

**சேர்:** யார்?

**பீற்றர்:** எமது நாட்டவர்கள்தான். உங்களுடைய உப்பைத் தின்று உங்கள் நிழலில் வாழ்ந்துகொண்டு, உங்களுக்கே துரோகம் செய்ய எத்தனிக்கிறுர்களே.

**சேர்:** என்ன! இந்நாட்டு மக்கள் எங்களை எதிர்க்கத் துணிகின்றுர்களா?

**பீற்றர்:** இல்லை. தூண்டப்படுகிறுர்கள்.

**சேர்:** வட் மிஸ்டர் துவைனன்?

**துவை:** ஆம். பீற்றர்பிள்ளை சொல்வது முற்றிலும் உண்மை. ஜனங்கள் இவ்வளவு காலமும் அடங்கி

ஒடுங்கித்தான் இருந்தார்கள். இப்பொழுது எங்கள் ஆட்சிக்கு எதிராகப் புரட்சி செய்யும்படி ஏவப்படுகிருர்கள். சனங்கள் வெறும் படிப்பு வாசனையற்ற, காட்டுமிராண்டிக் கும்பல். தூண்டி விடப்பட்டால் எதையும் செய்யத் தயங்கமாட்டார்கள்.

சேர்: புரட்சி. இவ்வளவு தூரத்துக்கு விஷயம் முற்றி விட்டதா?

பீற்றர்: முற்றினதென்ன! பழுத்துவிட்டது.

சேர்: இவ்வளவிற்கும் காரணமான அந்தக் கயவன் யார்?

துவை: ஆறுமுக நாவலன். பேச்சுவன்மை படைத்தவன். தன் பிரசங்கங்களால் சனங்களையெல்லாம் கவரக் கூடியவன். சனங்களைத் தன்வசப்படுத்திக்கொண்டு எங்களை எதிர்க்கிருன்.

பீற்றர்: அடங்கிக்கிடந்தவர்கள் அட்டகாசம் செய்வதற்கு இந்த ஆறுமுக நாவலன்தான் காரணம். வரி கேட்கப் போகிறவர்கள்மீது ஜனங்கள் வரிப்புலி போல் பாய்கிருர்கள். இதெல்லாம் அந்த ஆறுமுக நாவலன் கற்றுக்கொடுத்த பாடந்தான்.

துவை: அடிக்கடி வடநாட்டிற்கும் சென்று புரட்சி விதைகளைத் தூவிக்கொண்டு வருகிருன்.

சேர்: ஆள் பெரிய பயங்கரவாதியாக இருக்கிருனே! இவனை அடக்கியே ஆகவேண்டும்.

துவை: நாட்டில் அடிக்கடி கொள்ளைகளும், களவுகளும் நடைபெறுவதாகப் புகார் வந்தவண்ணமாயே இருக்கிறது. ஆறுமுக நாவலனும் அவனின் கூட்டத்தாருமே இவற்றையெல்லாம் நடத்துவதாக அறிகிருேம்.

சேர்: என்ன! கொள்ளை, கொலைகள் வேறு நடத்துருர்களா?

பீற்றர்: சந்தேகமென்ன? ஆறுமுக நாவலன் அடிக்கடி வட நாட்டு யாத்திரை போவதற்கும், பள்ளிக்கூடங்கள் கட்டி நடத்துவதற்கும், புத்தகங்கள் வெளியிடுவதற்கும் எவ்வளவு பணம் வேண்டும். எல்லாமே திருட்டுக்கள், கொள்ளைகள் மூலம் பெற்ற பணந்தான். வேலைவெட்டி எதுவுமே பார்ப்பது கிடையாது. நானறிய அரைச் சதத்துக்கு வழியில்லாமல் இருந்த ஆள் இன்றைக்கு லட்சோப லட்சம் ரூபாய்களுக்கு அதிபதியாய் இருக்கிறான். எப்படி?

துவை: ஆறுமுக நாவலனையும் அவனுடைய சகாக்களையும் இன்னும் விட்டுவைத்தால் நாட்டில் பெரிய குழப்பங்களும் கலவரங்களுந்தான் ஏற்படும். எமது ஆட்சிக்கு ஆபத்து வந்துவிடவும் கூடும்.

பீற்றர்: ஆம் பிரபு. ஆறுமுக நாவலன் நடத்தும் கூட்டங்களுக்கும் ஊர்வலங்களுக்கும் தடையுத்தரவுபோட வேண்டும். அவனின் அச்சுக்கூடத்தை உடனடியாகக் கைப்பற்றியாக வேண்டும். அவனுக்கும் சகாக்களுக்கும் தக்க தண்டனை கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் நாட்டில் அமைதி நிலவும். ......கையாலே கிழிக்கக்கூடிய பனங்கிழங்கு வளர்ந்து பனைமரமானால் பிளப்பதற்கு ஆப்பும் வல்லிட்டுக் குத்தியுந்தான் வேண்டும்.

சேர்: உண்மை. அவர்களைக் கைதிபண்ணி கோட்டில் விசாரணை செய்யுமாறு இப்பொழுதே உத்தரவு போடுகிறேன்,

பீற்றர்: விசாரணை எதற்குப் பிரபு? கைதிபண்ணித் தண்டனையை வழங்க வேண்டியதுதானே.

சேர்: நோ! நோ!! குற்றஞ் செய்தவர்களை விசாரித்த பின்பே தண்டனை கொடுக்க வேண்டுமென்பது தான் ஆங்கிலேய நீதிமுறை.

பீற்றர்: என்னவோ நேரிலே விசாரித்தால் பகைவனைக்கூடப் பேச்சினுல் மயக்கித் தன்வசப்படுத்தக்கூடிய ஆற்றல் படைத்தவன், ஆறுமுக நாவலன், என்று சொல்ல வந்தேன். இனி தங்கள் இஷ்டம்.

(சேவகன் ஒருவன் உள்ளே வருகிறுன். வந்து வணங்கி,)

சேவகன்: பிரபு! ஆறுமுக நாவலர் தங்களை நேரில் சந்திப்பதற்கு உத்தரவு கேட்கிறுர்.

சேர்: யார்! ஆறுமுக நாவலரா வந்திருக்கிறுர்?

சேவ: ஆமாம் பிரபு. ஊர்வலமாக வந்த ஒரு பெரிய கோஷ்டிக்கு தலைமைதாங்கி வந்திருக்கிறுர்.

(வெளியே பெரும் மக்கள் கூட்டத்தினர் ஒலி கிளப்புகிறுர்கள்)

ஒரு குரல்: வெள்ளைத் துரைமார்களே!

பல குரல்கள்: நீதி வழங்குங்கள்.

ஒ. கு.: பொதுமக்களை,

ப. கு.: வருத்தாதே.

ஒ. கு.: துவைனன் துரையை,

ப. கு.: வெளியேற்று.

ஒ. கு.: நோயாளர்களுக்கு.

ப. கு.: நிவாரணம் வழங்கு.

ஒ. கு.: ஆறுமுக நாவலர்

ப. கு.: வாழ்க

சேர்: இதென்ன கூச்சல்?

சேவ: ஊர்வலமாக வந்த அந்த கோஷ்டியினர் போடும் கூச்சல்தான்.

பீற்றர்: பிரபு! சிங்கத்தின் குகைக்குள்ளே சிறு நரி. ஆஹா! நல்ல சந்தர்ப்பம். ஆறுமுக நாவலனைக் கைது செய்ய உத்தரவு பிறப்பியுங்கள், பிரபு.

துவை: ஆமாம். நல்ல யோசனை. கும்பலைக் கலைக்கச் சுட்டுத்தள்ள வேண்டியதுதான்.

சேர்: வேண்டாம். என்னைச் சந்திக்க வந்தவனை இங்கே வைத்துக் கைது பண்ணுவது தர்மமாகாது.

( சேவகனைப் பார்த்து ) ம்... வரச் சொல்.

( சேவகன் போகிறான் )

( ஆறுமுக நாவலர் வருகிறார் )

ஆறு: வணக்கம் துரையவர்களே!

சேர்: ம்...... எதற்காக இங்கு வந்தீர்?

ஆறு: நானாக இங்கு வரவில்லை. என்னை வரச் செய்தவர்கள் இதோ, இந்தப் புண்ணியவான்கள்தான்.

( ஏஜெண்டரையும், பீற்றர்பிள்ளையையும் சுட்டிக் காட்டுகிறார் )

சேர்: என்ன உளறுகிறீர்?

ஆறு: நான் உளறவில்லை. உண்மையைத்தான் சொல்லுகிறேன். உண்மையைக் கூறியவர்கள் யாபேருமே உலகில் உலுத்தர் பட்டம் பெற்றவர்கள்தான். அதனாலோ என்னவோ இப்பொழுது எல்லோருமே உண்மையைப் பேச அஞ்சுகின்றார்கள்.

சேர்: போதனை தேவையில்லை. வந்த விஷயத்தைக் கூறும்.

ஆறு: தங்களிடம் நீதிகேட்க வந்திருக்கிறேன்.

சேர்: அதற்கு இந்தக் கும்பலை ஏன் கூட்டி வந்தீர்? குழப்பம் விளைவிக்கவா?

ஆறு: குழப்பம் விளைவிப்பது எங்கள் குறிக்கோள் அல்ல. குறைகளை எடுத்துக் கூறவே எல்லோரும் வந்திருக்கிறோம் பிரபு.

சேர்: சுத்த காட்டுமிராண்டித்தனம். உங்கள் குறைகளைக் கேட்பதற்குத்தானே இங்கு ஏஜெண்டுத் துரை இருக்கிறார். என்னிடம் ஏன் வந்தீர்கள்?

ஆறு: எங்கள் குறைகளைக் கேட்க ஏஜெண்டுத் துரைக்கு நேரமில்லை. வேலியே பயிரை மேய ஆரம்பித்திருக்கும்போது, நாம் என்ன செய்வது?

சேர்: வட்? மிஸ்டர் துவைனன்! இந்தாள் சொல்வதில் உண்மையிருக்கிறதா?

துவை: முற்றிலும் பொய். ஒருமுறைகூட, இந்தாள் என்னைச் சந்தித்தது கிடையாது.

ஆறு: அட பாவி. முழுப் பூசினிக்காயைச் சோற்றுக்குள் புதைக்கப் பார்க்கிறாயே. துரையவர்களே! ஒரு முறையா, இரண்டு முறையா பல தடவைகளில் இவரைச் சந்தித்து மக்களின் குறைகளை எடுத்துக்கூறி ஆவன செய்யும்படி வேண்டினேன். எல்லாமே புறக்குடத்தில் வார்த்த தண்ணீராகி விட்டன.

துவை: அபாண்டம். இவர் வேண்டுமென்றே என் மீது குற்றங்களைச் சுமத்துகின்றார்.

ஆறு: பிரபு, யாழ்ப்பாணத்துக்கு ஏஜெண்டு துவைனன் துரை வந்ததன் பின் சென்ற மூன்றாண்டுகளாக, நாம் படுந் துன்பம், கடையும் பஞ்சுதானும் பட்டிருக்க முடியாது. எங்கு பார்த்தாலும் பஞ்சம், பசி, நோய். நிவாரணமளிக்கவேண்டிய நிர்வாகிகள் நொந்துபோயிருக்கும் மக்களுக்கு நிட்டூரம் செய்கிறார்கள். வீடுகளுக்குள் புகுந்து தீயிடுகிறார்கள்.

பொருள் பண்டங்களைக் கொள்ளையடிக்கிறார்கள். தட்டிக்கேட்க ஆளில்லை என்ற திமிரில் பட்டப் பகலில்கூட பெண்களின் கற்பைச் சூறையாடுகிறார் கள். இப்படி எத்தனை எத்தனையோ. இவையெல் லாம் இந்த விண்ணப்பத்தில் விபரமாக எழுதப்பட் டுள்ளன. எங்களுக்குப் பரிகாரம் கிடைக்குமென்று நம்பியே இதைத் தங்கள் பரிசீலனைக்குச் சமர்ப் பிக்கின்றோம்.

(கவர்ணரிடம் விண்ணப்பத்தைக் கொடுக்கிறார்.

சேர்: பேதி நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளித்துக் காப்பாற்றியதாகவும், பஞ்சத் தில் அடிபட்டவர்களுக்குக் கஞ்சித் தொட்டி வைத் தும், அரிசியும், சோறும் அளித்தும் உதவியதாக வும், பாதிக்கப்பட்ட இடங்களைத் தாமே நேரிற் சென்று பார்த்துச் சனங்களுக்கு ஆவன செய்வ தாகவும் அறிக்கை சமர்ப்பித்திருந்தார் ஏஜெண்ட் துவைனன்.

ஆறு: அவ்வளவும் சுத்தப் பொய். சென்ற மாசி மாதம் முதல் ஆடி மாதம் வரை ஏஜெண்டர் யாழ்ப்பாணத்திலேயே இல்லை. அப்படியிருக்கப் பேதியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைத் தாமே நேரிற் சென்று பார்வையிட்டு நிவாரணம் வழங் கியதாகக் கதை சோடித்திருக்கிறாரே துரை. இதை நீங்கள் நம்புகிறீர்களா?

சேர்: மிஸ்டர் துவைனன், இதெற்கென்ன பதில் கூறுகிறீர்?

துவை: பிரபு, நான் சொல்வதைத் தயவுசெய்து கேளுங்கள். இந்தாள் ஒரு பயங்கரவாதி. எமது ஆட்சியைக் கவிழ்ப்பதற்குச் சதி செய்கிறான். கூட்டங்கள் கூட்டி எதிராகக் கிளர்ச்சி செய்யும்படி சனங் களைத் தூண்டிவிடுகிறான். இவரின் திட்டங்களைத் தகர்க்க — கிளர்ச்சியை அடக்க இவர் மீது நட

வடிக்கை எடுத்தேன். அந்தக் கோபத்தில் தாங்கள் இங்குவரும் நேரம் பார்த்து, இல்லாததையும் பொல்லாததையும் சேர்த்துப் புகார் செய்கிறார்.

சேர்: நீர் ஒரு பயங்கரவாதி. அரசாங்கத்திற்கு எதிராகச் சதியா செய்கிறீர்?

ஆறு: நானொரு பயங்கரவாதியுமல்ல, சதிகாரனுமல்ல. துவைனன் துரையின் ஆட்சியிலுள்ள ஊழல்களை அம்பலப்படுத்தவே கூட்டங் கூட்டினேன்.

சேர்: மிகத் துணிச்சலான செயல். நீர் கூறுவது பொய் யென நிரூபிக்கப்பட்டுவிட்டால் என்ன தண்டனை கிடைக்கும் தெரியுமா?

ஆறு: மரண தண்டனைக்கு மேலே எதுவும் கிடையாது. மனிதன் பிறக்கும்போதே மரண தண்டனையையும் பெற்றேவிடுகிறான். அதை நிறைவேற்றும் நாள் இன்றாக இருந்தாலென்ன! நூறாண்டுகள் கழித்து வந்தாலென்ன! மனிதன் இறப்பது ஒருமுறையே. அப்படியானதொரு இறத்தலை ஒரு நல்ல காரியத் துக்குச் செய்தாலென்ன!

சேர்: என்ன இருந்தாலும் நீர் ஒரு பிரஜை. ஆளப்படு பவர். ஆள்வோனை எதிர்க்கலாமா?

ஆறு: ஆள்பவர்கள் குற்றஞ்செய்தால் சுட்டிக்காட்டக் கூடாதென்று ஆண்டவன் சொல்லியிருக்கிறாரா? அரசன், அடிமை; ஆள்பவன், ஆளப்படுபவன் இப்படியாக ஏற்றத்தாழ்வுகள் எதற்கு? ஒளி கொடுக்கும் சூரியனும், சந்திரனும்; உயிர் கொடுக் கும் காற்றும், நீரும் வேற்றுமை காட்டாது எல் லோரையும் ஒரே சமமாக மதித்து நடத்தும் பொழுது, மனிதர்கள் ஏன் தங்களுக்குள் இப்படி யான பாகுபாடுகளை வைத்திருக்க வேண்டும்? ஆள்வோர்கள் என்ன ஆகாயத்திலிருந்து குதித்த

வர்களா? அன்றேல் அழியா வரம் பெற்றவர்களா? எல்லோரையும் போலவே கர்ப்பத்தில் தோன்றி இளமை, முதுமை, மூப்பு என்ற நிலைகளை அடைந்து, பிராரத்துவத்துக்கு ஏற்ற இன்பதுன் பங்களை அனுபவித்துக் கடைசியில் இறந் தொழிந்து ஒருபிடி சாம்பராகிவிடுபவர்கள்தானே. அப்படியிருக்க அவர்களைச் சென்று மண்டியிட்டு வணங்கச் சொல்லுகிறீர்களே. அவர்களின் அட்டூ ழியங்களையும் அநியாயங்களையும் அழிவுச் செயல் களையும் கண்டும் கேட்டும் வாளாவிருக்க எந்தப் பகுத்தறிவுள்ளவனும் ஒருப்பட மாட்டான். ஒரு வன் தட்டிக்கேட்க வெளிக்கிட்டுவிட்டால் இராச துரோகியென்று பட்டங்கட்டுகிறீர்களே.

பீற்றர்: ஆள்பவன் ஆண்டவனல் ஆள்வதற்கென்று அனுப் பப்பட்ட பிரதிநிதி. ஆம். நாம் சேவை செய்வதற் கென்றே பிறந்தவர்கள். எங்கள் உடல், பொருள், ஆவி யாவும் அவனின் ஆணையின் பிரகாரம் இயங்க வேண்டியன.

ஆறு: இப்படிச் சொல்ல உனக்கு வெட்கமாயில்லை. நீயுந் தமிழன்தானு? ஆண்டவனை இங்கு ஏன் அநாவசிய மாக இழுக்கின்ருய். இவ்வளவு காலமும் அரசன் ஆண்டவனின் நேர்ப் பிரதிநிதி. ஆண்டவன் அரூபி. அரசனே ஆண்டவனின் ரூபம். என்றெல் லாம் பசப்பு வார்த்தைகளை வீசிப் பொதுமக்களை ஏமாற்றிவந்த காலம் மலையேறிவிட்டது. படித்த வர்களும் உங்களோடு சேர்ந்து கொண்டார்கள். அதனல் உங்கள்பாடு கொண்டாட்டம். எப் பொழுதும் மக்களின் நிலை ஒரே மாதிரியாகவே இருக்குமென்று கனவு காணுகிறீர்கள். நித்திரையாக இருப்பவர்களும் இறக்காவிட்டால் நிச்சயம் ஒரு காலம் எழுந்துதான் ஆவார்கள். அதுபோல அறி வற்று, அட்டகாசங்களுக்கு அடங்கி ஒடுங்கித் திரிந் தவர்கள் இன்று விழித்துக்கொண்டார்கள். சிற

சொடிந்து, கால் முரிந்து, நிலைதிரிந்து, சுதந்திர மற்று நடைப்பிணமாக இருக்கும் தங்கள் நிலையை உணர்ந்து விடிவுகாணத் துடிக்கின்றார்கள். அமா வாசை இருட்டில் அல்லற்பட்ட அவர்கள் முழு மதி உதயமாகும் நன்னாளை ஆவலுடன் எதிர் பார்க்கிறார்கள்.

சேர்: நிறுத்து. கொஞ்சம் இடந்தந்தால் தலையிலே ஏறி விடுவீர் போலிருக்கே. இதுவரை காலமும் நடை முறையிலிருந்துவந்த ஒழுங்குமுறையை மாற்றி யமைக்கவா முயல்கிறீர். யார் சொன்னாலென்ன சொல்லாவிட்டாலென்ன நாம் ஆளப்பிறந்தவர் களேதான். நீங்கள் ஆளப்படவேண்டிய அநாக ரீகக் காட்டுமிராண்டிகள். குப்பைமேட்டைக் கிளறும் கோழி கோபுரத்துக்கும் மேலே பறந்தா லும் பருந்தாகிவிட முடியுமா? கோழி கோழிதான். பருந்து பருந்துதான்...... உம்மைக் கைதுசெய்து தண்டனை கொடுக்க கணநேரம் செல்லாது.

ஆறு: தண்டனை. தன்னலங்கொண்டவர்கள்தான் தண் டனைக்குப் பயப்படுவார்கள். என் உடலுக்கு மட் டுந்தான் தண்டனையை உன்னால் கொடுக்க முடி யும். என உள்ள எழுச்சிக்கு உன்னால் எந்தத் தண் டனையும் கொடுத்து அடக்கிவிட முடியாது. சுதந் திர தாகம் ஊட்டப்பெற்ற எண்ணற்ற உள்ளங் களையெல்லாம் உன்னால் அழித்துவிட முடியுமா?

சேர்: மிஸ்டர் ஆறுமுகம். வீண் வார்த்தைகள் பேச வேண்டாம்.

ஆறு: பயனற்ற வார்த்தைகளைப் பேசி எங்களுக்குப் பழக் கமே கிடையாது.

சேர்: நான் சொல்ல வந்தது அதுவல்ல. நமக்குள் பகைமை வேண்டாம். சமாதானமாக இருப்போம்.

ஆறு: நாமும் சமாதானத்தை வெறுக்கவில்லை. தனிப் பட்ட முறையில் எந்த ஆங்கிலேயரையும் வெறுக்க வில்லை. அவர்களைப் பகைக்கவும் விரும்பவில்லை. ஆனால் அவர்களின் அடக்குமுறையையும், அட்டூழி யங்களையுந்தான் வெறுக்கிறோம். நாமிங்கு வந்தது நீதி கேட்கவே. நாங்கள் சமர்ப்பித்த விண்ணப்பத் தையே பார்க்காமல் இருக்கிறீர்கள். அதையொரு முறை பார்த்தீர்களானால் உண்மை விளங்கும்.

( சேர் ஜேம்ஸ் விண்ணப்பத்தைப் பார்த்தபடியே )

சேர்: உமது விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்கிறேன். அதன்பின் உமக்கு எல்லாவற்றையும் அறிவிக்கி றேன். நீர் போகலாம். கூட்டத்தைக் கலைத்து விடும். ஊர்வலங்கள் ஒன்றும் வேண்டாம்.

ஆறு: நன்றி. நான் வருகிறேன்.

( ஆறுமுகம் போகிறார். )

ஒரு குரல்: ஆறுமுக நாவலர்

ப. கு.: வாழ்க.

ஒ. கு.: சிவனுண்டு.

ப. கு.: பயமில்லை

சேர்: என்ன காட்டுமிராண்டிக் கூச்சல். அப்பப்பா!

பீற்றர்: பிரபு, நல்ல சந்தர்ப்பத்தைத் தவற விட்டுவிட்டீர் களே. அவனைக் கைதுசெய்யாமல் விட்டுவிட்டீர் களே.

சேர்: கொஞ்சங்கூட ராஜ தந்திரம் தெரியாத ஆளாயி ருக்கிறீர்களே. வெளியில் நிற்கும் கூட்டம் எங்க ளைச் சூழ்ந்துகொண்டால் எம்மால் என்ன செய்ய முடியும்! அதைச் சமாளிக்க நாம் தயாராகவா இருக்கிறோம்...... புலி பதுங்குவது பாய்வதற்குத் தான். அந்த ஆளை அடக்காமல் விடமாட்டேன். அதற்கு ஏற்ற சந்தர்ப்பத்தைத்தான் எதிர்பார்த் துக் கொண்டிருக்கிறேன்.

**காட்சி:**

---

பதினொன்று

**இடம்:** பிரபுவின் இல்லம்.

**பாத்திரங்கள்:** பிரபு, அம்பலவாணி, ஐயங்கன், கோவில் முதலாளி குருநாதபிள்ளை, நாவலர், சீடர்கள்.

**பிரபு:** (கோபத்துடன்) அம்பலவாணி! ஐயங்கன்! நான் கேட்பதற்குச் சரியான பதில் சொல்லவேண்டும்... இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது எதற்காக.

(அம்பலவாணி, ஐயங்கன் இருவரும் ஒருவரை யொருவர் நோக்குகின்றனர்.)

**ஒருகுரல்: (மகன்)** (வீட்டிற்குள்ளிருந்து) நான் சொல்கிறேன். இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

பிரபு: யாரவன் இப்படிச் சொல்வது?

அம்பலவாணி: உங்கள் மகன்தான். வீட்டிற்குள்ளிருந்து படிக்கிறுர்,

பிரபு: வீட்டிற்குள்ளிருந்து படிக்கிறுயா அல்லது சுவரை இடிக்கிறுயா? இதெல்லாம் யார் கற்றுக்கொடுத்த பாடம்?

குரல்: (மகன்) நாவலரய்யாவின் புத்தகத்தில் அப்படி எழுதப்பட்டிருக்கிறது. எங்கள் உபாத்தியாயர் அந்தப் புத்தகத்தைத் தந்து வாசிக்கச் சொன்னுர்.

பிரபு: ம்... அப்படியா.

குரல்: (மகன்) பொய், களவு, கள், காமம், மாமிசம் ஆகிய மாபாதகங்களை மனத்தினுல் நினைத்தாலும் மகா பாவம்.

பிரபு: போதும் நிறுத்து. புத்தகம் படிக்கிறுராம் புத்தகம் கவ்வைக்குதவாத புத்தகம். யார் யாரோ உன்மத்தர்கள் எழுதின புத்தகத்தைப் படித்துப்போட்டு உபதேசம் செய்யவெளிக்கிட்டிட்டார்... பிஞ்சு உள்ளங்களிலே நஞ்சு விதைகளைப்போட்டு இளம் பிள்ளைகளைக் கெடுக்கப்பார்க்கிறுன் அந்த நாவலன். படித்ததுபோல பாதிரிமார்களின் பள்ளியில் படித்திருந்தால் எவ்வளவோ நல்லதாயிருந்திருக்கும்.

அம்பலவாணி: வெள்ளைக்காரன் வெள்ளைக்காரன்தான் ஐயா. அவர்களின் பள்ளிகள் ஒழுக்கத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் பெயர் பெற்றவையாச்சே. எங்கடை ஆட்களுமல்லே பள்ளிக்கூடம் நடத்துகினம்.

பிரபு: விட்டால்தானே என் மனுஷிக்காரி. நாவலர் பள்ளியிலே தன் மகனைக் கொண்டுபோய்ச் சேர்க்க

வேண்டுமென்று ஒற்றைக்காலிலே நிண்டாள். இன்றைக்குப் புரட்சிபேசுகுது. எல்லாம் அழிவு காலத்துக்குத்தான்.

(கோவில் முதலாளி குருநாதபிள்ளை வருகிறார்)

குருநாதபிள்ளை: என்ன. புரட்சி அது இது என்றெல்லாம் பேச்சு அடிபடுகிறதே.

பிரபு: ஓ... கோவில் எசமான் குருநாதபிள்ளையா? வாருங்கள். இன்னும் கொஞ்ச நாட்களில் உங்களைப் போன்ற எங்களைப் போன்ற பெரிய மனிதர்களுக்கு யாழ்ப்பாணத்திலே இடமே இல்லாமல் போகப் போகிறது. அந்நியர்களாக இருந்தாலும் ஆங்கிலேயர்கள் எங்களுக்கு எவ்வளவு கௌரவமும் மதிப்பும் கொடுக்கிறார்கள். நேத்து முளைச்ச எங்களின்ரை காளான்கள்தான் எங்களைக் குத்திப் பேசத்துவங்கியிருக்கினம். மாயமோ மந்திரமோ போட்டு இளம் பெடியன்களையெல்லாம் தன்வசப் படுத்தப் பார்க்கிறான், அந்தச் செப்படி வித்தைக் காரன்.

குரு: யார்... அந்தப் பொதுவிரோதியைத்தானே சொல்கிறீர்கள்.

பிரபு: ஆமாம். அந்த ஆறுமுகந்தான். ஆறுமுகத்தின் அட்டகாசங்கள் தலைக்குமேலே போய்விட்டன... இப்ப கொஞ்சம் முன்னாலை என்னுடைய வீட்டில் நடந்ததைக் கேளுங்கோவன். நான் அம்பலவாணியைக் கேட்டேன், இந்தச் சரீரத்தை நாம் எடுத்தது எதற்காக, என்று. அதற்கு உள்ளேயிருந்த என் மகன் சொல்லிறான், கடவுளை வணங்கி முத்தி யின்பம் பெறுவதற்கென்று. இன்னும் ஏதேதோ வேதாந்தம் பேசிறான். இந்தச் சின்னஞ் சிறிசுகள் இப்படியா பேசிறது. பெண்களையும், இளம் பிள்ளைகளையும் ஏவிவிடுகிறான், எங்களை எதிர்க்கச் சொல்லி.

இப்படி நிலைமை மூற்றுவதற்கு முன்னர் ஆறு முகத்தை ஒழித்துக்கட்ட வேண்டும்.

குரு: சரியான யோசனை. வீட்டுக்கு வீடு வாசற்படிதான். நான் மச்ச மாமிசம் கண்டு மாதங்கள் பல ஆகின் றன. நாவலரின் பிரசங்கத்தைக் கேட்டுப்போட்டு என் மனுஷிக்காரி மாமிசம் சமைப்பதில்லை என்று சொல்லிவிட்டாள். என் செய்வது சாப்பாடில் லாமல் சாகிறன்... இப்படித்தான் ஒவ்வொரு வீட்டிலும். இதை யாருக்குப்போய் முறையிட லாம்... இன்னொரு சங்கதி கேள்விப்பட்டீர்களோ

பிரபு: என்ன சங்கதி.

குரு: நல்லூர்க் கந்தசுவாமி கோவில் உற்சவங்களில் கலந்துகொள்வதாக நாவலர் ஒப்புக்கொண்டுள்ளா ராம்.

பிரபு: அப்படியானல், பொதுமகளிர் நடனங்கள், வாண வேடிக்கைகளுக்கு என்ன வாகும்?

குரு: இந்தமுறை எதுவுமே இடம்பெறுதாம்.

பிரபு: திருவிழாக்களுக்குச் சனக்கூட்டமே இருக்காதே. கலையை இரசிக்கத் தெரியாதவன் நாவலன். இதற் குக் கோவில் எசமானும் இணங்கிவிட்டாரா?

குரு: ஆமாம். நாவலரின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு விட்டார். மூலஸ்தானத்தில் தூபி அமைக்கவும், சுப்பிரமணியரின் விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்யவும், ஆகம விதிப்படி ஆலயத்திருப்பணி செய்யவும் கோவில் எசமான் ஒப்புக்கொண்டு விட் டார். இந்தியாவிலுள்ள கரூரிலிருந்து கருங்கற் களும் எடுப்பிப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளை நாவலர் செய்துவிட்டார்.

பிரபு: குருநாதபிள்ளே! நீங்களும் ஒரு பிரபல ஆலயத்தின் எசமான். யாழ்ப்பாணத்திலுள்ள எல்லாக் கோவில்களின் எசமானர்களேயும், ஊர்ப்பிரபுக்களேயும் உடனே அழைத்துக் கூட்டம் கூட்டிப் பரம்பரை பரம்பரையாகக் கோவில்களில் நடந்துவரும் காரியங்களே எதிர்க்கும் நாவலரைக் கண்டிக்க வேண்டும். நீங்களே பொறுப்பேற்று நடாத்த வேண்டும். இனி ஒரு கணமும் தாமதம் ஆகாது. வேண்டிய பணம் முழுவதையும் நானே தருகிறேன்.

குரு: நல்ல யோசனேதான். ஆனல் செயற்படுத்துவது மிகவும் சிரமம். உங்களுக்குத் தெரியுந்தானே எங்களுடைய ஆட்களேப்பற்றி. நாவலருக்கு எதிரான கூட்டம் என்ருல் வெளிப்படையாக எவருமே வர மாட்டார்கள். உட்கொதிப்புத்தான் எல்லாருக்கும். ஆனல் வெளிக்காட்டப் பயம்... நாவலரின் கொட்டத்தை அடக்க நல்லதொருதிட்டம் என்னிடம் இருக்கிறது.

பிரபு: என்ன திட்டம் அது?

குரு: நாவலரைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் எழுதி இங்கிலீசு அரசாங்கக் கவர்ணருக்கு அனுப்புவோம். செல்வாக்குள்ளவர்களேப் பிடித்து கவர்ணருக்குச் சொல்லுவித்து நாவலரை நாடு கடத்துவிப்போம்.

பிரபு: கவர்ணருக்கு என்னத்தை எழுதப் போகிறீர்?

குரு: ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யும்படி சனங்களேத் தூண்டிவிடுகிருர் நாவலர் என்றும்; அதற்கு ஆதாரங்கள் உண்டு என்றும் முறைப்பாட்டில் எழுதுவோம். ஆங்கிலேயருக்குக் கிளர்ச்சி என்ருல் கிலி. தங்கள் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வோரை அடக்கி ஒடுக்கிவிடுவார்கள். ஆறுமுகத்தை அந்தமானுக்கு நாடுகடத்திவிடுவார்கள். எங்கள் தொல்லேயும் தீர்ந்துவிடும். எப்படி என் திட்டம்.

பிரபு: ஆங்கிலேயரின் மதிப்பையும் செல்வாக்கையும் பெற்ற கிறீஸ்தவப் பாதிரிமார்கள் கொடுக்காத முறைப்பாட்டினையா நாங்கள் கொடுக்கப்போகிறோம். அவர்களின் முறைப்பாடுகளுக்கே நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றால் நாம் எம் மாத்திரம். உது சரிப்பட்டுவராது.

குரு: நீங்கள் சொல்வதிலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது... நாவலரிலே அதியற்புத சக்தி ஒன்று இருக்கிறது.

பிரபு: (யோசித்தபடி) வேறு என்னசெய்யலாம்... ம்... சரி, எல்லாரும் கிட்டவாருங்கள். என் திட்டத்தைச் சொல்கிறேன். மிக இரகசியமாக வைத்திருக்கவேண்டும். தெரியுதா? அம்பலவாணி! ஐயங்கன்!! இருவரும்தான் பொருத்தமான ஆட்கள். என்திட்டத்தைச் செய்துமுடித்தால் தகுந்த சன்மானம் தருவேன்... (நாலா பக்கமும் பார்த்துவிட்டு...) இன்னும் கொஞ்ச நேரத்தில் நாவலரும் அவரின் சீடர்களும் திருமுறை ஓதிக்கொண்டு இந்த வீதிவழியே வருவார்கள். பனங்காய்ப்பணிகாரங்களை மாலையாகக் கோர்த்துக் கழுத்தில் போட்டுக்கொண்டு அவர்கள் முன் கடித்துக்கடித்துத் தின்னவேண்டும். அப்போது பனங்காய்ப்பணிகாரங்களைக்காட்டி, இவைதான் உருத்திராக்க மணிகள் நாங்கள் தின்கிறோம் என்று கேலி செய்யவேண்டும். அப்போது ஆறுமுகத்துக்கு அடங்காத கோபம்வரும். உங்கள்மேல் ஆத்திரம் கொள்வான். பிறகு என்ன, பொல்லுகளாலும் கல்லுகளாலும் உங்கள் கைவரிசையைக் காட்ட வேண்டியதுதான். நாவலனின் சொல்லுக்கோ, உன் பொல்லுக்கோ வெற்றி என்பதைப் பார்ப்போம்... இப்படி மரியாதையீனப்படுத்தினால் இந்தியாவுக்கு ஓடிவிடுவான்... எப்படி என் திட்டம்.

எல்லோரும்: அருமையான திட்டம்.

**பிரபு:** அம்பலவாணி, உடனே செய்...ம்... இந்தா பணம். போங்கள்... நாங்கள் இங்கிருந்து பார்போம்.

(ஒளி மறைந்து பின் வருகிறது. நாவலர் தமது சீடர்களுடன் திருமுறைகளை ஓதிக்கொண்டு நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை நோக்கி வருவதை எதிர்நோக்கி அம்பலவாணியும் இன்னும் சிலரும் வீதியில் நிற்கிருர்கள்.)

**அம்பலவாணி:** (தன்கூட்டத்தினரை நோக்கி) இந்த அம்பலவாணியின் பெயரைக்கேட்டால் அகிலமே நடுங்கும். இந்த ஆறுமுகம் எம்மாத்திரம்... ஐயங்கன், நான் சொன்னது ஞாபகத்தில் இருக்கட்டும்... அதோ! ஆறுமுகமும் சீடர்களும் வந்து கொண்டிருக்கிருர்கள். ம்... நடக்கட்டும் உங்கள் நாடகம்.

(கூட்டத்தினர் பனங்காய்ப்பணிகார மாலைகளுடன் கூத்தாடுவதும், கடித்துத்தின்பதும், தாளம்போடுவதும், பாடுவதுமாக உள்ளனர்)

**அம்பலவாணி:** (நாவலரைச் சற்றுநேரம் உற்றுப்பார்க்கிருன் பின் தன் கூட்டத்தினரை நோக்கி) நிறுத்துங்கள்.

(சற்றுநேரம் நிசப்தம். பின் கூப்பிய கரங்களுடன் நெடுஞ்சாணையாக வீழ்ந்து நாவலரை வணங்குகிருன்)

**நாவலர்:** எழுந்திரு... ம்... நீயார்?... இவர்கள் யார்? ஏன் இந்தக் கோலம்...

(அம்பலவாணி எழுந்து வணங்குகிருன்)

**அம்பலவாணி:** ஐயா... என்னை மன்னித்துவிடுங்கள், ஐயா. நான் தெரியாமல் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும். நான்தான் அம்பலவாணி. ஏவல் பேய். பெரும் கொலைகாரன், பேர்பெற்ற கொள்ளைக்காரன்.

**நாவலர்:** ஓ! அம்பலவாணி நீதானு. கேள்விப்பட்டேன். சரி... வந்த வேலையைப் பார்.

அம்பலவாணி: ஐயா, என்னை மன்னித்தேன் என்று ஒரு வார்த்தை சொல்லுங்கள் ஐயா. நான் பணக் காரப் பிரபுவின் கையாளாக இருந்தேன். அவ னின் தூண்டுதலால் நான் எவ்வளவோ கொடுமை களைச் செய்தேன். பணம் தந்து உங்களைப் பிண மாக்கச் சொன்னான். ...ஆனால், உங்களைக் கண்ட தும் என்னால் கிட்ட நெருங்கமுடியவில்லை. ஏதோ ஒருவித சக்தி என்னை அணுகவிடாமல் தடுத்தது... ஐயா நான் பாவி... தங்களுக்கு அடைக்கலம். என்னை மன்னித்து உய்யும்வழி காட்டவேண்டும்.

நாவலர்: (விபூதி வழங்கி) சிவனுண்டு பயமில்லை. நாம் யார்க்கும் குடியல்லோம். செய்த பிழைகளை எண்ணி வருந்துவோருக்கு நிச்சயம் கழுவாய் உண்டு. பெரும் கொள்ளைக்காரனான வால்மீகியும், பரத்தையரால் பாழ்படுத்தப்பட்ட அருணகிரி நாதரும் இறைவனால் ஆட்கொள்ளப்படவில்லையா. ம்... நம்மவர்களிடம் ஒற்றுமை என்பது கிஞ்சித் தும் இல்லை. உள்ளத்தில் விளையும் பகைமையையே பாராட்டி, கலகம் விளைவித்து, பள்ளத்தில் வீழ்வதே நம்மவரின் பண்பாடாகிவிட்டது. இத னாலேயே, நாம் சொந்த நாடிழந்து, மொழியிழந்து, மதமிழந்து அந்நியர்முன் கைகட்டி வாய்புதைத்து அடிமை செய்யும் நிலையில் நிற்கிறோம். பரமேஸ் வரா! நீதான் காக்கவேண்டும்.

அம்பலவாணி: ஐயா, இன்றுமுதல் நான் உங்கள் அடிமை. தங்களின் காவற்காரனாக நான் இருக்கிறேன்.

நாவலர்: (சிரித்தபடி) சற்றுமுன் உன்னிடமிருந்து என்னைப் பாதுகாத்த அந்தப் பரம்பொருள்தான் எங்கள் எல் லோருடைய பெரும் காவற்காரன். அவனிருக்கப் பயமில்லை. இது சிவனடியார் திருக்கூட்டம். இங்கு அடிமையுமில்லை, அடிமை கொள்வோனுமில்லை. வாருங்கள். சிவனுண்டு பயமில்லை. பாடுங்கள்.

காட்சி:

பன்னிரண்டு

இடம்: நாவலர் ஆச்சிரமம்.

பாத்திரங்கள்: பொன்னம்பலபிள்ளை, வைத்திலிங்கம்பிள்ளை

வைத்தி: தமிழுலகத்திற்கும் சைவ உலகத்திற்கும் நாவலர் பெருமானின் மறைவு ஈடுசெய்யமுடியாத பேரிழப் பாகும். ஞான ஒளி அணைந்துவிட்டது. இருளில் மூழ்கித் தத்தளிக்கும் எமக்கு யார்தான் வழிகாட் டப் போகிறார்கள்.

பொன்: என்செய்வது! அன்று சுந்தரமூர்த்திநாயனார் குரு பூசைத்தினத்தில் அவர் கூறியது மெய்யாகிவிட் டது. இதுவே என்னுடைய கடைசிப்பிரசங்கம். இனிமேல் நான் உங்களுக்குப் பிரசங்கம் பண்ண மாட்டேன் என்னும் கருத்துப்படக் கூறினார். அன் றைய பிரசங்கத்தைக் கேட்டுக் கண்ணீர்விட்டழா தவர் ஒருவருமில்லை. அவர்கூறியபடி அதுவே அவ ரது கடைசிப் பிரசங்கமாகிவிட்டது.

வைத்: மிகக்குறைந்த வயதுக்குள்ளேயே அவர் மறைந்து விட்டார். முப்பத்திரண்டு ஆண்டுகளாக அவர் செய்த தொண்டுகள் அளப்பரியன.

பொன்: மிகவும் தேவைப்பட்ட இந்நேரத்தில் எம்மைவிட்டு நீங்கிவிட்டார். இன்னும் எவ்வளவோ குறிக்கோள் களையெல்லாம் மனதிலுருவாக்கிச் செயல்படுத்தத் துடித்துக்கொண்டிருந்தார். இலங்கையிலுள்ள தேவாரம் பெற்ற ஸ்தலங்களுள் ஒன்ருன திருக்கே தீஸ்வர ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்விக்க மிகுந்த ஆவல்கொண்டிருந்தார். அது இவர்காலத் தில் முடியாமல் போய்விட்டது. அதேபோலக் கீரி மலைச் சிவன் கோவிலையும், நல்லூர்க் கந்தசுவாமி கோவிலையும் கட்டுவிக்க முயற்சிகள் செய்துகொண் டிருந்தார்.

வைத்: தமிழ்நாடு செய்த தவப்பயனுய் புகழோடு தோன் றிய நாவலர் பெருமான் எமக்காக எவ்வளவோ கைங்கரியங்களைச் செய்திருக்கிருர்.

பொன்: ஐயாவை மூழுமூச்சுடன் எதிர்த்த துவைனன் துரையே கடைசி காலத்தில் இவரிடத்தே பெரு மதிப்பு வைத்திருந்தார். இவர் சிவபதமடைந்த செய்தியைக் கேள்விப்பட்ட உடனே மிக மனம் வருந்தி கச்சேரி உத்தியோகத்தர்களை யெல்லாம் ''இன்று நீங்கள் கச்சேரிவேலை பார்க்கவேண்டிய தில்லை. நாவலர் வீட்டுக்குப் போகவேண்டும்.'' என்று சொல்லி அவர்களை அனுப்பிவைத்திருக்கிருர்.

வைத்: பீற்றர்பிள்ளை போன்ற துர்ப்புத்தியாளர்களின் போதனையாலேதான் தாம் நாவலரை எதிர்க்க வேண்டி வந்தது என்பதைத் துவைனன் துரை உணர்ந்து விட்டார்.

பொன்: இலங்கைச் சட்டசபையில் சைவத் தமிழராகிய பொன்னம்பலம் இராமநாதனுக்கு, இடம்பெற்றுக்

கொடுப்பதில் பெரும்பங்கைக் கொண்டவர் நாவலர் ஐயா.

**வைத்:** அந்த நன்றிமறவாத பெருமகனுர் நாவலர் பெருமானின் மறைவைப்பற்றி இலங்கைச் சட்டசபையில் அனுதாபந்தெரிவித்துப் பேசும்பொழுது ''சைவத்தை உயர்த்தவந்த மாண்புமிக்க பெருமகனுர்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

**பொன்:** சி. வை. தாமோதரம்பிள்ளை, ஐயாவின் மறைவைக் குறித்துப் பாடியுள்ள செய்யுள் அவரின் தொண்டை நன்ருகப் படம்பிடித்துக் காட்டுகிறது.

**வைத்:** அப்படியா! எங்கே சொல்லுங்கள்.

**பொன்:** நல்லைநகராறுமுக நாவலர் பிறந்திலரேற்
சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே — யெல்லவரு
மேத்துபுரா ணுகமங்க ளெங்கேப்ர சங்கமெங்கே
யாத்தனறி வெங்கே யறை.

**வைத்:** ஆஹா! அற்புதம். அவ்வளவும் உண்மை.

ஃ ஃ ஃ

**குரல்:** தன்னிகரில்லாத் தமிழையும் சைவத்தையும் தலைநிமிர்த்த வந்த தலைவர், வசன நடை கைவந்த வல்லாளர், தன்னலஞ் சிறிதுமற்ற சமூகத் தொண்டர் ஆறுமுகநாவலர், ஐந்தாங்குரவர், 1879-ம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 21-ம் நாள், சுக்கிர வாரமும் மக நட்சத்திரமும் சத்தமிதிதியும் கூடிய புண்ணிய காலத்திலே ஸ்ரீ நடராஜப் பெருமான் குஞ்சிதபாத நிழலை அடைந்தார்.

ஆறுமுகநாவலர் வாழ்க.

சிவனுண்டு பயமில்லை.

நாடகம் முற்றிற்று.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.